॥ श्रीः ॥

कवितोद्यानम्

கவிதைபூங்கா



First Edition : 2007

Copies : 1000

Price : **50/-**

This book in published with gracious
financial assistance from T.T.Devasthanam,
Publication Dept., Tirupati,
for which I am grateful

Lasertypeset & Printed at :
V.K.N. ENTERPRISES,
8/1, Dr. Ranga Road, Mylapore,
Chennai-4, Ph: 24950775

First Edition : 2007

Copies : 1000

Price : **50/-**

This book in published with gracious
financial assistance from T.T.Devasthanam,
Publication Dept., Tirupati,
for which I am grateful

Lasertypeset & Printed at :
V.K.N. ENTERPRISES,
8/1, Dr. Ranga Road, Mylapore,
Chennai-4, Ph: 24950775



ஸ்ரீமத் வேதமார்க ப்ரதிஷ்டாபநாசார்ய

பரமஹம்ஸ பரிவ்ராஜராசார்ய

ஸர்வதந்த்ர ஸ்வதந்த்ரோபய வேதாந்தாசார்ய,

ஸ்ரீமத் ராமாநுஜ ஸித்தாந்த நிர்தாரண ஸார்வபௌம

ஸ்ரீ லக்ஷ்மீ ந்ருஸிம்ஹ திவ்ய பாதுகாஸேவக

ஸ்ரீவண் ஶடகோப ஸ்ரீரங்கஶடகோப யதீந்த்ர மஹாதேஶிகன்

ஸ்ரீ அஹோபில மடம் ஸ்ரீ ஸந்நிதி

42வது பட்டத்தில் மூர்த்தாபிஷிக்தராய் எழுந்தருளியிருந்த

ஸ்ரீ இஞ்சிமேடு ஸ்ரீமத் அழகியசிங்கரின்

திருவடித் தாமரைகளில்

இந்த நூலை ஸமர்ப்பிக்கிறேன்.

|| श्रीः ||

க்ருதக்ஞுதா நிவேதநம்

பரமஹம்ஸேத்யாதி ஸ்ரீலக்ஷ்மீந்ருஸிம்ஹதிவ்ய பாதுகாஸேவக ஸ்ரீவண்ஶடகோப ஸ்ரீநாராயண யதீந்த்ர மஹாதேஶிகன்

பரமஹம்ஸேத்யாதி ஸ்ரீரங்கம் பெரியாஶ்ரமம் ஸ்ரீமத் ஆண்டவன் ஸ்ரீரங்கராமாநுஜ மஹாதேஶிகன்

பரமஹம்ஸேத்யாதி ஸ்ரீரங்கம் பௌண்டரீகபுரம் ஆஶ்ரமம் பரவாக்கோட்டை ஸ்ரீமதாண்டவன்

இவர்களுடைய பரமாநுக்ரஹத்துடன் கூடிய உதவியினால் இந்த நூல் வெளிவர ஸாத்யமாயிற்று. அடியேனுடைய க்ருதக்ஞதையை விநயத்துடன் ஸமர்பித்துக் கொள்கிறேன்.

முன்பணம் தந்தவர்களுக்கு விஜ்ஞாபநம்

என்னுடைய வேண்டுகோளை ஏற்று நீங்கள் முன் பணம் தந்தீர்கள். எனக்கும் ஸங்கோசமாகவே இருந்தது. ஆனால் நான் புத்தகத்தின் செலவுக்காகப் பண உதவி வேண்டி கையெழுத்துப் ப்ரதியை T.T.D.Publication Dept. திருப்பதிக்கு அனுப்பி வைத்திருந்தேன். ஆனால் 1 மாதம், 2 மாதங்கள் என்று தாமதமான பிறகு தான் அவர்களுக்குக் கடிதம் எழுதினேன். பதில் இல்லை. என் வயதைக் குறித்து Executive Officerக்கு எழுதியும் முயற்சி எல்லாம் வீணாயிற்று. பிறகு Oct/20/2004ல் அனுப்பிய ப்ரதி August 15/2006ல் தான் கிடைத்தது. உடனே அதைச் சீர்செய்து அச்சுக்குக் கொடுத்தேன். இதனால் தான் தாமதம் என்பதை உணர்ந்து என்மீது வருத்தம் கொள்ள வேண்டாம் என்று கேட்டுக் கொள்கிறேன்.

இப்படிக்கு,

ஆசிரியர் ஸ்ரீ.ஸ்ரீ.

முன்னுரை

பரமகாருணிகனும் ஸர்வஶக்தியுமான ஸ்ரீமந் நாராயணனுடைய ஸங்கல்பத்தினால் தான் எதுவும் நடக்கிறது என முன்னோர்கள் பலரும் உறுதியாக அருளிச் செய்தனர். இதை நான் என் அநுபவத்திலேயே கண்டுவிட்டேன். வயிற்றில் மூன்று முறை அறுவைச் சிகிச்சை ஆகியும் இந்த 91வயதை எட்டி இந்த நூலை எழுதி வெளியிடுகிறேன் என்றால் அவனுடைய க்ருபையினாலன்றி என் ஶக்தியினால் அல்ல. பல வருடங்களில் தனித்தனியாக எழுதி வைத்த ச்லோகங்களில் பல காணாமல் போன நிலையில் கிடைத்தவற்றையாவது எழுதிப் பலருக்கும் விருந்தாக அளிக்கலாமே என்று தோன்றிற்று. கொடுத்தவனும் அவனே, எடுத்தவனும் அவனே. ஆகையால் **கர்மண்யேவாऽதி-காரஸ்தே மா பலேஷு கதாசந** என்று கண்ணன் ஸாதித்ததை நினைத்துக் கவலையை விட்டு இந்த நூலை எழுதத் தொடங்குகிறேன். இதை இனிதே நிறைவு செய்து அந்த எம்பெருமான், ரஸிகர்கள் கையில் போய்ச் சேரும்படிச் செய்வான் என நம்புகிறேன்.

वसुधाश्रोत्रजे तस्मिन् व्यासे च हृदयस्थिते।
अन्येऽपि कवयः कामं बभूवुरनपत्रपाः॥

வால்மீகியும் வ்யாஸரும் தம் மனத்திலிருக்கச் சிலர் வெட்கமில்லாமல் தாமும் கவி என்று சொல்லிக் கொள்கிறார்கள் என்று ஸாதித்தபடி, அவர்கள் தான் கவிகள் ஆயினும் உடையவர் பகவான் என்கிற சொல்லுக்கு **ஷாட்குண்யம் (ஞாநம், ஶக்தி, பலம், ஐஶ்வர்யம், வீர்யம், தேஜஸ்) என்கிற இந்த ஆறு குணங்களும் யாரிடம் அளவில்லாமலும், தன்னிகரற்றதாகவும் இருக்குமோ,**

அவரே தான் முக்கியமான பொருள். மற்றவர்களிடம் அந்த குணங்கள் அளவிலும் சிறப்பிலும் குறைந்து இருப்பதால் இந்தச் சொல் அவர்களை உபசாரமான (கௌணம்) முறையில் சொல்லும் *என்று ஸாதித்தருளினார். அதே போல் காளிதாஸன், பவபூதி, ஸ்வாமி தேஶிகன் எல்லோரும் தாம் எழுதியதை மற்றவர்களுக்கும் பயன்படும்படி வெளியிட்டது போல நானும் இதை வெளியிடத்துணிந்தேன். இக்காலத்தில் ஸம்ஸ்க்ருதம் மட்டும் இருந்தால் அது பலருக்கும் பயன்படாது என்கிற காரணத்தினால் தமிழ் உரையுடன் இதை வெளியிட வேண்டும் எனத் துணிந்து தயாரிக்க முனைந்தேன். முன்னோரின் ஶ்லோகங்கள் சிலவற்றை விளக்கிக் காட்டி அதன் பிறகு என் ஶ்லோகங்களை விளக்கியிருக்கிறேன்.*

நவீந கவிதையாகச் சில அமைந்துள்ளன. தமிழில் உள்ளபடி மொழிகளில் சிலவற்றிற்கு ஸம்ஸ்க்ருதத்தில் மொழி பெயர்த்துச் செய்திருக்கிறேன்.

ஸ்ரீ A.V.ஸுப்ரமண்யன், ஸ்ரீ V.S.கருணாகரன் போன்றோரிடம் இந்த ஶ்லோகங்களில் சிலவற்றைக் காண்பித்திருக்கிறேன். உறவினரும், நண்பர்களும், ஸம்ஸ்க்ருதம் தெரிந்தோறும் பண்டிதர்களும் கூட இதைப் பார்த்து இன்புற வேண்டும் என விரும்பிப் பலரின் உதவியைக் கொண்டு இந்த நூலைப் பதிப்பித்து வெளியிடுகிறேன். சிலராவது இதில் ரஸமான விஷயத்தை எனக்கு எடுத்துக்காட்டி எழுதுவார்களெனில் மிகவும் மகிழ்ச்சியாக இருக்கும்.

இதை எழுதிச் சரிபார்த்துப் பல வகையில் சிறப்பாக அமைய உதவி செய்த வேங்கடாத்ரியகரம் ஸ்ரீ.உ.வே. ஸ்ரீ V.வாஸுதேவாசார்ய ஸ்வாமிக்கு என்னுடைய மனமார்ந்த

நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். இவருடைய உதவி இல்லை எனில் என்னால் இந்நூலை வெளியிடவே முடியாது. அவரை நான் இணை ஆசிரியராக மதிக்கிறேன்.

இதைப் பிழையில்லாமல் சுத்தமாக வெளிவர மிகுந்த ஶ்ரமம் எடுத்துக் கொண்டு பரிஶோதித்துத் தந்த ஸ்ரீ உ.வே. S.S. ரங்காசார்யருக்கு என் உள்ளங்கனிந்த க்ருதஜ்ஞதையைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

ஸ்ரீ V.K.நாராயணன் என்பவர் மிகுந்த திறமைசாலி, உழைப்பாளி. இவர் யாரிடமும் மர்யாதையுடனும் விரைவாகவும் அச்சிட்டு இந்த இளைஞர் எனக்கும் சில புத்தகங்கள் தந்திருக்கிறார். இந்தக் **கவிதைப் பூங்கா**வையும் என் விருப்பப்படி மிகவும் அழகாகவும் விரைவாகவும் அச்சிட்டுத் தந்ததற்கு **ஜயவிஜயீ** பவ - **வர்த்ததாம்அபிவர்த்ததாம் - நித்யஸ்ரீ: நித்யமங்களம்** என்று வாழ்த்துக் கூறுகிறேன்.

சென்னை *ஆசிரியர்*
30-8-2006

व्यङ्क्तुं क्षमाः सदसती विगताभ्यसूयाः
सन्तः स्पृशन्तु सदयैर्हृदयैः स्तुतिं ते।

என்று ஸ்வாமி தேசிகன் ஸ்ரீ பாதுகாஸஹஸ்ரத்தில் ப்ரார்த்தித்தார். அதே போல் நானும்

सन्तः स्पृशन्तु सदयैः हृदयैः कृतिं मे

என்று பண்டிதர்களை ப்ரார்த்திக்கிறேன்.

இவ்விஷயத்தில் பண்டிதர்களும் மற்றவர்களும் 25 பைசா Post Card *எழுதினால் மகிழ்ச்சி அடைவேன்.*

प्रथमगुरवे ममातुलपृथुतरविज्ञानशीलवारिधये।
नम इदमस्तु समस्तच्छात्र हृदि स्थिरतरस्वचरणधिये॥

1934ல் என்னுடைய 20-ம் வயதில் என்னுடைய முதல் ஆசார்யர்களான தில்லையம்பூர் ஸ்வாமிகளைப் பற்றி நான் எழுதிய ச்லோகமிது.

श्रियःकान्ताय कल्याणनिधये निधयेऽर्थिनाम्।
श्रीवेङ्कटनिवासाय श्रीनिवासाय मङ्गलम्॥

कल्याणाद्भुतगात्राय कामितार्थप्रदायिने।

श्रीमद्वेङ्कटनाथाय श्रीनिवासाय मङ्गलम्॥

तदेव लग्नं सुदिनं तदेव ताराबलं चन्द्रबलं तदेव ।
विद्याबलं देवबलं तदेव लक्ष्मीपतेरङ्घ्रियुगं स्मरामि ।।

शुक्लाम्बरधरं विष्णुं शशिवर्णं चतुर्भुजम् ।
प्रसन्नवदनं ध्यायेत् सर्वविघ्नोपशान्तये ।।

ஸ்ரீ லக்ஷ்மீஹயவதந பரப்ரஹ்மணே நம:

लक्ष्मीहयाख्यचरणौ मधुस्यन्दिसरोरुहे ।
विशतात् स्वान्तभृङ्गो मे विन्देय च मुदं सदा ।।

(सरोरुहे *என்பது* द्वितीयाद्विवचनान्तम्)

व्यासवाल्मीकिपूर्वां तां कालिदासादिमध्यमाम् ।
कविवादिसिंहपर्यन्तां वन्दे कविपरंपराम् ।।

इञ्जिमेडुयतिवर्यमाश्रये सञ्चिताघगणसर्वनाशनम् ।
मञ्जुभाषणमनुग्रहोन्मुखं तं जितेन्द्रियममर्त्यसन्निभम् ।।

வெள்ளைப் பரிமுக தேசிகராய் விரகால் அடியோம்
உள்ளத் தெழுதியதோலையிட்டனம் யாமிதற்கென்
கொள்ளத் துணியினும் கோதென்றி கழினும் கூர்மதியீர்
எள்ளெத்தனையுக வாதிகழாதென்னெழில் மதியே.

நாண் பெரியோமல்லோம் நாம் நன்றும் தீதும்
நமக்குரைப்பார் உளரென்று நாடுவோமே !.

॥ श्रीः ॥

कवितोद्यानम्

विलसतु हृदि प्रीत्या विद्राविताखिलकल्मषा
सततहितया सान्द्रानन्दा सहैव च सीतया।
विनतविविधाशेषप्राणिस्थिरावनसुव्रता
शतमखमणिश्यामा रामाभिधा परदेवता॥ १॥

இந்த ஶ்லோகத்தின் நாலாம் பாதம்தான் எனக்கு 13 வருடங்களுக்கு முன்பு இரவில் படுத்திருந்த நிலையில் பின் மாலை மனத்தில் தோன்றியது. இதை ஹயக்ரீவ ப்ரஸாதமாகவே கருதி அப்பொழுதே மற்ற மூன்று பாதங்களைச் செய்து ஸமஸ்யாபூரணம் செய்து விட்டேன். இதற்குப் பிறகுதான் மற்ற மற்ற தனி ஶ்லோகங்கள் பிறந்தன.

சிறப்பு-2

प्रालेयाचलशीतलां प्रसृमरोद्वीचेः पयोधेः सुतां
पापिष्ठानपि मुक्तिमार्गगमने जाङ्घालिकान् कुर्वतीम् ।
पद्मालङ्कृतिचातुरीकरसुखप्रेक्षोपवेशां रमां
पद्माक्षीं प्रणमामि वाञ्छितफलप्राप्त्यै हरेः प्रेयसीम्॥ २॥

முன் ஶ்லோகம் காகிதம் பேனா இல்லாமல் மனதிலேயே செய்து முடித்தேன். இந்த ஶ்லோகம் வேறு வகையில் தனிச் சிறப்பு வாய்ந்தது. ஒரு நாள் சென்னை பத்ரையன் தெரு பேப்பர் வ்யாபாரி கடைக்கு முன் ஓரமாகவே நின்றிருந்தேன். எனக்குப் பின்புறத்திலிருந்து பேப்பர் சுமந்து வந்த ஒற்றை மாட்டுவண்டி சென்றது. மாட்டைப் பார்த்தேன். அடுத்த இரண்டு விநாடிகளில் வண்டிச் சக்கரம் என் வலக்கால் சுண்டு விரலை நசுக்கிக் கொண்டு போய்விட்டது. சிறிது வருந்தி நின்ற என்னை அருகில் உட்கார்ந்திருந்த பழ (கூடை) வ்யாபாரி என் நிலையை அறிந்து ஓடிப்போய்ச் சிறிது ஐஸ்கட்டியை

வாங்கிவந்து என் கால்மீது வைத்துத் தன் துணியிலிருந்து சிறிது கிழித்துக் கட்டிவிட்டு ஒரு ஸைகில் ரிக்ஷாவை அழைத்து ஏறிக் கொண்டு ''ஜெனரல் ஆஸ்பத்ரிக்குப்போ'' என்று கூறினான். அந்த முதலுதவியைப் பெருமாள்தான் அவன் மனதில் புகுந்து செய்து வைத்தான். நானும் ஏறிக் கொண்டு சென்றேன். ஆனால் அந்த எரிச்சலை மறக்க உடனே பிராட்டியை நினைத்து மேலே குறிப்பிட்ட ஶ்லோகத்தைச் செய்து முடித்தேன். மருத்துவமனையில் பத்து தையல்கள் போட்டு மாத்திரைகள் கொடுத்துப் போகலாமென்று சொல்லிவிட்டார்கள்.

வைசூரி போன்ற நோய் வந்தால் அதன் கடுமையைக் குறைக்க **ஶீதலாஷ்டகம்** என்னும் ஸ்தோத்ரத்தை ஜபிக்க வேண்டும் என்று சொல்லக் கேட்டிருக்கிறேன். மறந்தும் புறந்தொழாத மனதைக் கொண்ட நான் பிராட்டியையே நினைத்தேன். இதன் கருத்து பின் வருமாறு –

பிராட்டி ஹிமயமலைபோல் குளிர்ச்சியானவள். அலை கடலில் அவதரித்தவள். கொடிய பாபம் செய்தவர்களைக் கூட ஶ்ரீ வைகுண்டத்துக்குத் தங்கு தடையின்றிச் செல்பவர்களாக அநுக்ரஹிக்கிறாள். அவள் வீற்றிருப்பதனாலேயே தாமரைக்குச் சிறப்பும் அழகும் சேர்கிறது. கமலக் கண்களோடு கூடிய திருமாலின் துணைவியான இத்தகைய பிராட்டியை ஸேவிக்கிறேன்.

சிறப்பு-3

पाञ्चालीममितुं पुरा कृतधिया कृष्णेन मध्येसभं
धूतैर्धूर्तवतीमनन्यशरणां मूर्धाहितात्यञ्जलिम् ।
त्वत्तोऽवाप्तविचित्रविस्तृतमहाहेमाम्बरेणाऽऽदरात्
तत्तादृक्करुणा व्यधायि कमले स्नेहः सगन्धेषु हि ॥ ३

பிராட்டி விஷயமாக **க்ஷீராப்திதநயாஸஹஸ்ரம்** என்கிற பெயரில் ஆயிரம் ஶ்லோகங்கள் எழுதத் தீர்மானித்து 350 ஶ்லோகங்கள் எழுதியிருந்த நிலையில் அந்தக் காகிதங்கள் எல்லாம் காணாமல் போய்விட்டன. அந்த நூலில் முதல்

ஶ்லோகம் தான் மேலே உள்ளது. ஸபையின் நடுவே துர்யோதநன் தம்பியினால் இழுத்து வரப்பட்டுத் துயில் உரியப்படுகையில் அந்தப் பாஞ்சாலி வேறு யாரும் திக்கில்லை என்று தலையில் கை குவித்து க்ருஷ்ணா என்று கதறிய அவளைக் காப்பாற்ற அம்மா ! தாயே ! மஹாலக்ஷ்மீ ! அந்த க்ருஷ்ணன் உன்னிடம் கேட்டு வாங்கித்தான் நல்ல அகலம் நீளம் பலவகை நிறங்களில் சரிகை பதித்த பட்டுப்புடவைகளைத் தந்து அவளுக்குக் கருணை காட்டினான்.

नागे शयानः पतगेशयानः रमे शयानः विषयेषु तृष्णा।
तां छिन्धि भूयो दिश मङ्गलानि हरे ! श्रितान् रक्ष सदा गतिस्त्वम् ॥ ४ ॥

இந்த ஶ்லோகம் நான் சாப்பிட உட்காரும் ஸமயம் தோன்றிற்று. இதில் முன் பாதியில் உள்ள **அநுப்ராஸம்** என்கிற ஒருவகை ஶப்தாலங்காரம் பண்டிதர்களுக்கு அத்புதமான விருந்தாகும்.

बालाकृते ! करुणया वटपत्रशायिन् !
लीलार्थमेव बहुधा कुहनां व्यतानीः ।
साधून् कुतूहलयसे विनिहत्य दुष्टान् साधून्
सेतुं व्यधा जलनिधौ बहुपातकघ्नम् ॥ ५ ॥

இது ஆலிலை க்ருஷ்ணனைப் பற்றி அமைந்த ஶ்லோகம். ப்ரளய காலத்தில் எல்லாம் அழிந்து ஒரே நீர்மயமாக இருந்தபோது அதில் எம்பெருமான் சிறு குழந்தை வடிவத்தில் ஆலிலைமேல் படுத்திருந்ததாகப் புராணம் கூறுகிறது.

करारविन्देन पदारविन्दं मुखारविन्दे विनिवेशयन्तम्।
वटस्य पत्रस्य पुटे शयानं बालं मुकुन्दं मनसा स्मरामि ॥ ६ ॥

என்கிற ஶ்லோகம் பலருக்கும் தெரிந்திருக்கும். தன் திருக்கையால் கால் கட்டை விரலைப் பிடித்து வாயில் வைத்துக் கொண்டிருக்கும் லீலை இதில் பேசப்படுகிறது. இதெல்லாம் ஸாதுக்களுக்கு மகிழ்ச்சியைத் தரும். இதை பகவான் துஷ்டர்களையும் परित्राणाय साधूनां विनाशाय च दुष्कृताम् என்கிறபடி

அழிக்கிறார். மேலும் பார்த்த மாத்திரத்தில் பாபங்களையெல்லாம் போக்க வல்லதான அணையை (ஸேது) கடலில் நீ கட்டினாய் என்கிற கருத்து உள்ளது. ஸ்வாமி தேஶிகன் தயாஶதகத்தில் ராமாவதாரத்தைப் பேசுமிடத்தில் ஸக்ருதவேக்ஷணாத் தத் க்ஷணாத் ப்ரக்ருஷ்ட பஹுபாதக ப்ரஶமஹேதுநா ஸேதுநா என்கிற ஶ்லோகத்தை அருளிச் செய்தார். அதிலுள்ள பஹுபாதக என்கிற பதம் இங்கேயும் அமைந்துள்ளதைக் காண்க.

कोदण्डतूणीरधरौ कुमारौ यौ दण्डकारण्यचरावभूताम्।
वेतण्डकण्ठीरवगामिनौ तौ नमामि दोर्दण्डहतारिवर्गौ ॥ ७ ॥

அது பனி காலம். ஒரு நாள் கம்பளியைக் கொஞ்சம் உலர்த்தலாமென்று மாடிக்குச் சென்றேன். அந்த ஸமயம் இந்த ஶ்லோகம் பிறந்தது. கையில் வில்லையும் தோளில் அம்பராத் தூணியையும் தரித்துக் கொண்டு தண்டகாரண்யத்தில் நடந்தனரே இரண்டு குமாரர்கள், யானை சிங்கம் போல் நடைபோடுபவர்களும் தங்கள் புஜபலத்தினால் பகைவர்களை அழித்தவர்களுமான அவர்களை வணங்குகிறேன். இங்கு ராம லக்ஷ்மணர் என்பது சொல்லாமலே விளங்கும். ஸ்ரீமத் ராமாயணத்தில் **गजसिंहगती वीरौ** என்று வால்மீகி அருளிச் செய்கிறார். அதே பொருள்தான் இங்கு வேதண்ட கண்டீரவ என்கிற சொற்களால் கூறப்பட்டது. இங்கு ண்ட என்கிற கூட்டுச் சொல் பல இடங்களில் அமைந்திருப்பது ரஸிக்கத்தக்கது.

मनोहरा पृथुश्रोणी तनुमध्या सुभाषिणी।
शेते मत्करसंस्पर्शं काङ्क्षन्तीव..........॥ ८ ॥

இந்த ஶ்லோகமும் ஒரு நாள் தானாகவே உதித்தது. நான் ஒரு கருத்தை மனத்தில் வைத்துக் கொண்டு அது பற்றி ஶ்லோகம் செய்ய வேண்டும் என்று எழுதிய ஶ்லோகங்கள் வெகு சிலவே. தானாகவே உதித்தவைதான் பல. அது போன்றதே மேலே உள்ள ஶ்லோகமும். முதல் பாதியில் ஸ்த்ரீலிங்கமான நான்கு சொற்கள் அமைந்துள்ளன. அதைப்

பார்ப்பவர்களுக்குப் பின் பாதியில் என் கை பட வேண்டும் என்று விரும்புபவள் போல் படுத்திருக்கிறாள் என்று அமைந்துள்ள கருத்தையும் அறியும்போது ஒரு பெண்ணைப் பற்றியே நான் பேசுவதாகத் தோன்றும். ஸம்ஸ்க்ருதத்தில் வினைச் சொற்களுக்கு லிங்கம் இல்லை. ஶேதே என்றால் படுத்திருக்கிறாள் என்றும் படுத்திருக்கிறது என்றும் இடத்தைப் பொருத்துப் புரிந்து கொள்ள வேண்டும். இங்கு படுத்திருப்பது யார்? வீணைதான். அதை நான் சொல்லாதவரையில் ஶ்ருங்கார ரஸத்தை நான் பேசுவதாகவே நினைப்பர். கடைசியில் விடுபட்டுள்ள சொல்லைப் பாருங்கள் **विपञ्चिका** என்பது தான் அது. வீணை என்பது பொருள். இந்த வீணைக்கும் ஒரு பெண்ணுக்கும் பொதுவானவையே முதல் பாதியில் சொல்லப்பட்டது. வீணை ஒருவர் கை பட்டால் மட்டுமே நல்ல நாதத்தை எழுப்பும். வீணையும் படுத்தே இருக்கும், பண்டிதர்கள் இந்த ஶ்லோகத்தை மிகவும் ரஸிப்பர்.

நவீன கவிதை

ऐरम्मदेन तिलकं कृत्वा द्यौर्हसति क्षितिम्।
पयोनिधिं वसानेयं नग्नां तां हसति ध्रुवम्॥ ९॥

ஸம்ஸ்க்ருதத்தில் பூமியைக் குறிக்கும் சொற்களனைத்தும் பெண்பாலே. ஆகாயத்தைக் குறிக்கும் **द्यौः** என்பதும் பெண்பாலே. இதை வைத்து ஒரு நகைச்சுவை (ஹாஸ்யம்) தோன்றிற்று. ஆகாயம் என்கிற பெண் மின்னலைத்தன் நெற்றியில் அணிந்து இருப்பதனால் பூமியைப் பார்த்து **உன் நெற்றி ஶூந்யமாக உள்ளதே** என்று சிரித்ததாம். ஸமுத்ரத்தை பூமியினுடைய வஸ்த்ரம் (ஆடை) என்று ஸம்ஸ்க்ருத இலக்கியம் கூறுகிறது. அதனால் அந்தப் பூமி ஆடையில்லாமல் நிர்வாணமாக இருக்கும் ஆகாயத்தைப் பார்த்துச் சிரித்ததாம்!

பிராட்டியின் பெருமை

नैवोच्चैःश्रवसा न कौस्तुभमणिश्रेष्ठेन नैरावतात्
न स्वर्गीयतिलोत्तमादिगणिकावृन्देन नैवामृतात्।

न श्वेतद्युतिनीलपीतहरितै रत्नैश्च नैवापरैः
पद्मे ! त्वत्पदपङ्कजाङ्किततनू रत्नाकरस्त्वत्पिता ॥ १० ॥

பிராட்டி அவதரித்ததனால்தான் திருப்பாற்கடலுக்குப் பெருமை என்கிற கருத்தை எழுத வேண்டும் என்று நினைத்தேன். அக்கருத்து தான் இந்த ஶ்லோகத்திலுள்ளது என்றாலும், நான்காவது பாதத்தில் பத்மே ! என்று லக்ஷ்மியை அழைக்கும் (விளிவேற்றுமை) **ஸம்போதநம்** அமைந்துள்ளது. அதனால் தாயே ! உன் திருவடிகள் ஒற்றியதனால் அமைந்த அடையாளங்களாலேயே உன் தகப்பனார் ரத்நாகரன் என்ற பெயரைப் பெற்றார் என்று முடித்தேன். ரத்நம் என்கிற சொல் சிறந்த பொருள் எதையும் குறிக்கும், 'रत्नहारी तु पार्थिवः' என்பர். எந்தப் பொருள் மிக உயர்ந்ததாக இருந்தாலும் அதை அரசர்கள் எடுத்துக் கொள்வராம். இதை வைத்து ஒரு சமத்காரம். பாற்கடலிலிருந்து **உச்சை:ஶ்ரவஸ்** என்னும் குதிரையும், **கௌஸ்துபம்** என்கிற ரத்நமும், ஐராவதம் என்கிற யானையும், **ஊர்வஶீ, மேநகா** போன்ற விலை மாதர்களும், அமுதமும், நவரத்நங்களும் இன்னும் எத்தனையோ வெளிவந்தன. அவற்றால் எல்லாம் பாற்கடலுக்குப் பெருமை இல்லை என்று சொல்லிப் பிராட்டியின் திருவடிகளின் பெருமை இங்கு பேசப்பட்டது.

சேர்த்தியின் ஸேவை

लक्ष्मीनारायणाभ्यामविरहित सदायोगवद्भ्यां नमो वां
शक्तिज्ञानाद्यनन्तैर्गुणगणविभवैर्दोषदूरैर्युताभ्याम् ! ।
मत्स्यादौ रामकृष्णाद्यवतरणविधौ संहिताभ्यां हिताभ्यां
अस्मच्छ्रेयोभिलाषाश्रितसततमहायोगसज्जागृतिभ्याम् ॥ ११ ॥

பெருமாளைப் பற்றிப் பல ஶ்லோகங்கள் எழுதியிருந்தேன். பிராட்டியைப் பற்றியும் எழுதியிருந்தேன். ஆனால் இருவரையும் சேர்த்து அநுபவிக்கவில்லையே என்று தோன்றிற்று. உடனே இந்த ஶ்லோகம் பிறந்தது. பல இடங்களில் भ्यां என்று இருப்பது, இருவரைக் குறிக்கும் சொல். பெருமாளும் பிராட்டியும் பிரிந்ததில்லை. अनन्या राघवेणाऽहं भास्करेण प्रभा यथा !

ஸூர்யனைவிட்டு ஒளி எப்படிப் பிரியாதோ அது போல ராமனைவிட்டு நான் பிரிந்ததில்லை என்பது ஸீதையின் வாக்கு. **पश्यतां सर्वदेवानां ययौ वक्षःस्थलं हरेः** பாற்கடலில் உதித்த பிராட்டி அனைத்து தேவர்களும் பார்த்திருக்கப் பெருமாளின் திருமார்பில் போய் உட்கார்ந்தாள் என்றும் **அகலகில்லேன் இறையும்** என்ற ஆழ்வார்களின் வாக்கும் சொல்வது போல் இவ்விருவரும் ஒரு போதும் பிரிந்ததில்லை. **உபயலிங்காதிகரணத்தில்** சொல்லப்பட்டது போல் அவர்களிடம் தீயவை ஏதும் இல்லை. நல்லவை நிறைந்திருந்தன. **हेयप्रतिभटकल्याणगुणाकरः** என்பர். மத்ஸ்யம், கூர்மம் போன்ற அவதாரங்களிலும், பிராட்டி அதே போன்ற உருவம் எடுத்து உடன் சென்றாளாம். திருப்பாற் கடலில் ஶயநித்திருக்கும் எம்பெருமான் யோக நித்ரையில் இருக்கிறார் என்பதும் வெளித்தோற்றமே. அப்போதும் அவர்கள் நம்முடைய நன்மைகளுக்காகவே உறங்காமல் விழித்திருக்கின்றனர் என்கிற கருத்துக்கள் இங்கு கூறப்பட்டன.

படிக்காத பெரியோர் கூற்று

शास्त्रेषु हीनाः कवयो भवन्तीति विजल्पितं कैश्चिदविद्वदार्यैः ।
ते कालिदासं कविवादिसिंहं वाल्मीकिमप्येव नु विस्मरन्ति ॥ १२ ॥

ஶாஸ்த்ரங்களில் ஜ்ஞாநம் குறைந்தவர்கள் கவிகள் ஆகிறார்கள் என்று சிலர் சொன்னார்கள். அது வெறும் உளரல் ! அவர்கள் படிக்காத பெரியோர் ! மேலும் அவர்கள் காளிதாஸனையும், கவிதார்க்கிக ஸிம்ஹத்தையும் (ஸ்வாமி தேஶிகன்), வால்மீகியையும் அன்றோ மறந்தனர். இவர்கள் எல்லோரும் கவிகள் தானே ? இவர்களுக்கு ஶாஸ்த்ர ஜ்ஞாநம் குறைவா ?

ஸமஸ்யா பூரணம்

वीरे रघ्वीट् शठरिपुयतौ नैमिशे भाग्ययोगात्
प्राप्ते लक्ष्मीर्नृहरिचरणौ द्राविडादन्यदेशे ।
मुक्कूर् विद्वान् यदिह सविधेऽभूत् स एवावलम्बः
दुर्विज्ञानस्वहृदयमहो ! दैवमत्र प्रमाणम् ॥ १३ ॥

ஸ்ரீ அஹோபிலமடம் 43-வது பட்டத்தில் எழுந்தருளியிருந்த பரமஹம்ஸேத்யாதி வீரராகவ ஶடகோப யதீந்த்ர மஹாதேஶிகன் **பதரீ** யாத்ரையாகச் சென்று ஸேவித்துத் திரும்பி எழுந்தருளியிருந்த போது நைமிஶாரண்யத்தில் பரமபதம் எழுந்தருளினார். அந்த அழகியசிங்கருடன் முக்கூர் ஸ்ரீ.உ.வே. ராஜகோபாலாசார்யர் என்கிற வித்வானும் (44வது பட்டத்தைப் பிற்காலத்தில் அலங்கரித்தவர்) கூடவே சென்றிருந்தார். பதரிகாஶ்ரம ஸேவை தான் அவருக்கு உத்தேஶமாயிருந்தது. இந்த ஸ்வாமி மட்டும் அப்பொழுது இல்லாமல் இருந்தால் ஸ்ரீ ஸந்நிதியின் நிலைமை சிறிது ஸங்கடத்தில் ஆழ்ந்திருக்கும். அவர் அப்போது அங்கு இருந்தது குழப்பத்தைத் தவிர்த்தது. எம்பெருமானின் திருவுள்ளத்தை யாராலும் அறிய முடியாது. **இதுவும் ஒரு ஸமஸ்யா பூரணமே.**

वेगाद्गच्छत्यधिकसलिले क्षीरनद्याः प्रवाहे
शुष्काद्धैर्यात् विशति सलिलं पण्डिते श्रीनिवासे।
रज्जुर्बद्धा यदिह सलिलेऽभूत् स एवावलम्बः
दुर्विज्ञानस्वहृदयमहो ! दैवमत्र प्रमाणम् ॥ १४ ॥

காஞ்சீபுரத்துக்குத் தெற்கே பாலாறு என்று ஓர் ஆறு இருப்பதை யாவரும் அறிவர். அது ஒரு காட்டாறு. மேற்கே மழை பெய்தால் மட்டுமே மழையின் அளவைப் பொறுத்து வெள்ளத்தின் அளவும் இருக்கும். அன்று ஒருநாள் ஸ்ரீநிவாஸன் என்கிற பண்டிதர் ஒருவர் ''மூன்றில் ஒரு பங்குதானே நீர் போகிறது. இதை நீந்திக் கடந்து விடலாம்'' என்று நினைத்து வறட்டு தைர்யத்தால் ஆற்றில் இறங்கி நீந்தினார். கடக்க முடியவில்லை. காலும் தரைக்கு எட்டவில்லை. மூக்குக் கண்ணாடியுடன் தலையில் கட்டியிருந்த முண்டாசும் நீரில் அடித்துச் சென்றுவிட்டது. ஆற்றின் குறுக்கே causeway ஒன்று இருந்தது. அதில் இரண்டு புறங்களிலும் ரயில் தண்டவாளத்தை நட்டு யாரோ சில தர்மாத்மாக்கள் தேர்வடக் கயிற்றையும் அதில் கட்டி வைத்திருந்தனர். அதைப் பிடித்துக் கொண்டார். மேல் நோக்கி

ஶயநம். மேற்கே தலை. கிழக்கே கால். இரண்டு நல்ல மனிதர்கள் தூக்கி நிறுத்தி அக்கரை சேர்ப்பித்தனர். அந்தக் கயிறு மட்டும் இல்லாமல் இருந்தால் அவர் கதி அதோகதிதான். எம்பெருமான் திருவுள்ளத்தை யாராலும் அறியமுடியாது !

ஸ்ரீ ஸீதா ராமன் அயோத்தி திரும்புகிறார்

सुहृद्वृतः सुखमुपयाति राघवः
विमानमार्गेण विधूतशात्रवः ।
द्रुतं जनाः पर्युपयात सेवितुं
ससीतमग्र्यं ससहोदरं विभुम् ॥ १५ ॥

ஒரு நாள் காலையில் தீர்த்தமாடிவிட்டு ஈர வஸ்த்ரத்துடன் குளியலறையிலிருந்து வெளியே வரும்பொழுது மேலே உள்ள ஶ்லோகத்தின் முதல் பாதம் மநத்தில் தானே தோன்றிற்று. அடுத்த மூன்று பாதங்களையும் அதற்கேற்பப் பிறகு அமைத்தேன்.

பகைவனை ஸம்ஹாரம் செய்துவிட்டு ஸ்ரீ ராகவன் விபீஷணாதிகளுடனும் ஸுக்ரீவன் முதலிய ஸ்நேஹிதர்களுடனும் புஷ்பக விமாநமூலம் ஸுகமாக வந்து கொண்டிருக்கிறார். அயோத்தி வாழ் மக்களே! ஸீதையுடனும் தம்பிமார்களுடனும் சேர்ந்து ஸ்ரீராமன் பட்டாபிஷேகம் செய்து கொள்ளும் காட்சியையும் மகுடம் சாத்திக் கொண்டு **வாமே பூமி ஸுதா புரஶ்ச ஹநுமாந் பஶ்சாத் ஸுமித்ராஸுத: ஶத்ருக்நோ பரதஶ்ச பார்ஶ்வதளயோ: வாய்வாதி கோணேஷு ச ।ஸுக்ரீவஶ்ச விபீஷணஶ்ச கபிராட் தாராஸுதோ ஜாம்பவாந் மத்யே நீல ஸரோஜ கோமளருசிம் ராமம் பஜே ஶ்யாமளம்** என்கிறபடி ஆட்சி பீடத்தில் வீராஸநத்தில் எழுந்தருளியிருக்கும் காட்சியை ஸேவிக்கச் சுற்றமும் நட்பும் சூழ விரைந்து வாரீர்! என்பது இதன் கருத்து. இங்கு अग्र्य என்ற சொல்லால் புருஷோத்தமனாகிய நாராயணனே ராமனாக அவதரித்தார் என்பதும் विभुं என்பதனால் பட்டாபிஷேகம்

கண்டருளி ஆட்சி பீடத்தில் அமர்கிறார் என்பதும் ஸூசகமாகத் தெரிவிக்கப்பட்டன.

ஸீதையை நோக்கி என் கவிதை

सीते ! भूमिसुते ! त्रिलोकमहिते ! ते काचिदाशा ह्यभूत्

चित्रं कञ्चन काञ्चनं मृगमहो ! प्रेयांसमायाचथाः ।

सोऽपि ह्यन्वसदन्मृगं तं असुरं भ्रातुर्निषेधेप्यलं

प्रायः कालविपर्यये खलु नृणां भ्रष्टा मतिः किं भवेत् ?॥१६

ஸீதையைப் பார்த்து நான் பேசுவதுபோல் இந்த ஶ்லோகம் அமைந்தது. தாயே ! ஸீதாதேவியே ! நீ ஒரு பலவண்ணப் பொட்டுகள் உள்ள தங்கமானைப் பிடித்துத் தரும்படி உன் பர்த்தாவிடம் கேட்டாய். தம்பி லக்ஷ்மணன் ''இது மானல்ல, அந்த மாரீசனெனும் அஸுரனே இவன்'' என்று கடுமையாகத் தடுத்தும் கூட உன் கணவர் மானின் பின் சென்றார். பிறகு நடந்தது உனக்கே தெரியுமே. காலம் கெட்டு விடுமானால் மதியும் மனிதர்களுக்குக் கெட்டுவிடும் போல் இருக்கிறது !

காளிதாஸன் ரகுவம்ஶத்தில் இந்த நிகழ்ச்சியை எழுதும்போது அஸம்பவம் ஹேமம்ருகஸ்ய ஜந்ம ததாऽபி ராமோ லுலுபே ம்ருகாய । ப்ராய: ஸமாபந்ந விபத்தி காலே தியோऽபி பும்ஸாம் மலிநீபவந்தி ॥ என்று கதையைச் சொல்வது போல் பின்னே கேடு வருமானால் முன்னே மதி கெட்டுவிடும் என்று எழுதியிருக்கிறான். காளிதாஸனுடைய அந்த ஶ்லோகத்தை நான் வாசித்ததில்லை. யாரோ சொல்லக் கேட்டிருக்கிறேன். அவன் ஶ்லோகத்தைப் பார்த்து நான் எழுதியிருப்பதாகச் சிலர் நினைப்பர். அது சரியல்ல. மேலும் நான் ஸீதையைப் பார்த்துப் பேசுவது போல் அமைந்தது, இங்கு முதல் பாதத்தில் ते என்கிற எழுத்து நான்கு முறை அமைந்துள்ளது சிறப்பு.

शिष्याः सन्तु सहस्रशः तदेतैः किं ? तेन वित्तेन ? वा

शिष्टाचारविनीतवेष इति यत् कुत्राऽस्ति तन्मृग्यताम् ।

नाथो यामुन इत्यमू विहरतः कुत्रापि पद्ये सदा
गोष्ठी सात्विकभूयसी यदि हरे ! वैकुण्ठ एव क्षितिः ॥ १७

ஒரு நாள் தற்காலத்தில் ப்ராஹ்மண ஸமூஹம் இருக்கும் நிலையையும் ஆசார வ்யவஹாராதிகள் அதோபாதாளத்தில் போயிருப்பதையும் நினைத்தபோது இந்த ஶ்லோகம் பிறந்தது. ஶிஷ்யர்கள் கோடிக்கணக்கிலிருந்தும் ஏராளமாகப் பணமிருந்தும் என்ன பயன்? ஶிஷ்டாசாரம் எங்கிருக்கிறது? தேடவேண்டிய நிலைதான். ஸ்ரீ நாதமுநிகளும் ஆளவந்தாரும் பாசுரத்திலும் ஶ்லோகத்திலும் எப்போதும் மகிழ்ந்து வாஸம் செய்கின்றனர். எம்பெருமானே ! இந்த வைதிக ஸமூஹம் ஸாத்விகர்கள் நிறைந்ததாக இருக்குமேயானால் இந்தப் பூமியே வைகுண்டம் தான். ஸ்வாமி தேஶிகன் வரதராஜபஞ்சாஶத்தில் "த்வம் சேத் ப்ரஸீதஸி ? தவாऽஸ்மி ஸமீபதஶ்சேத் ? த்வய்யஸ்தி பக்திரநகா கரிஶைலநாத !! ஸம்ஸ்ருஜ்யதே யதி ச தாஸஜநஸ்த்வதீய: ? - " ஸம்ஸார ஏஷ பகவந் அபவர்க ஏவ" என்று ஸாதித்த கருத்து இங்கு அமைந்துள்ளது. அவர் பகவந் ! அபவர்க: என்று ஸாதித்தார். இங்கு ஹரே ! வைகுண்ட ஏவ என்றும் அமைந்துள்ளது.

இது தனிப்பட்ட யாரையும் குறிப்பிட்டு எழுதப்படவில்லை.

இனி முன்னோரின் ஶ்லோகங்கள்

வால்மீகி

सीताकपीन्द्रक्षणदाचरणां राजीवहेमज्वलनोपमानि ।
सुग्रीवरामप्रणयप्रसङ्गे वामानि नेत्राणि समं स्फुरन्ति ॥ १८ ॥

ஸீதை, வாலி, ராவணன் இவர்களுடைய இடது கண்கள் ஸுக்ரீவனும் ராமனும் ஸ்நேஹம் செய்து கொண்ட போது ஒரே ஸமயத்தில் துடித்தன. இவர்களுடைய கண்கள் எப்படிப்பட்டன ? தாமரை, தங்கம், நெருப்பு போன்றவையாம். உட்கருத்து என்னவென்றால் பெண்களுக்கு இடது கண் துடிப்பது நல்ல ஶகுநம். ஆண்களுக்கு அது அபஶகுநம். வர்ணனையில் சமத்காரம் உச்சகட்டம்.

वाहि वात ! यतः कान्ता तां स्पृष्ट्वा मामपि स्पृश ।
त्वयि मे गात्रसंस्पर्शः चन्द्रे दृष्टिसमागमः ॥ १९ ॥

ஸீதையைப் பிரிந்த ராமன் புலம்புகிறார் - ஏ காற்றே ! ஸீதையிருக்குமிடத்திலிருந்து வீசு. உன் மூலம் தான் எனக்கு அவளுடைய உடலின் ஸம்பந்தம். சந்த்ரன் மூலம் இருவரின் கண்களும் ஸந்திப்பு பெறுகின்றன.

பவபூதி:

न किंचिदपि कुर्वाणः सौख्यैः दुःखानपोहति ।
तत्तस्य किमपि द्रव्यं यो हि यस्य प्रियो जनः ॥ २० ॥

ப்ராண ஸ்நேஹிதர் என்று சொல்வதுண்டு. என்ன அவரிடம் அப்படி விசேஷம் ? கவி கூறுகிறார் - அவர் பக்கத்தில் இருந்தால் போதும். ஒன்றுமே செய்ய வேண்டாம். இன்பமோ இன்பம், கவலைகள் எல்லாம் தீரும். அவர் மற்றவருக்கு விலை மதிக்கமுடியாத ஒரு பொருள்.

போஜன்

यातु नः पदवी सैषा यातु नश्चास्य लक्ष्मण ! ।
या तु कामं तयैवेदं या तु कामं न हन्यताम् ॥ २१ ॥

விராதன் என்பவன் ராமலக்ஷ்மணன் இருவரையும் தோளில் சுமந்து செல்கிறான். அவனைக் கத்தியால் வெட்டிவிட வேண்டுமென்று இளையவர் சொல்ல ராமனின் பதிலிது - இவன் போகும் வழி நாம் செல்ல வேண்டிய திசையே. அவன் விருப்பப்படி செல்லட்டும். இவனைக் கொல்ல வேண்டாம். இதில் சமத்காரம் यातु என்பதற்கு அரக்கன் என்றும் போகட்டும் என்றும் பொருள். இதே சொல்லை या-तु- என்று பிரித்துள்ளார்.

जगदधिपालो मोरो नायो नरियो जयत्यशुभम् ॥ २३ ॥

இந்த ச்லோகம் தமிழ் நாட்டைச் சேர்ந்த ஒருவர் எழுதியதாகக் தெரிகிறது. பாலோ, மோரோ, நாயோ, நரியோ

என்பது தமிழருக்கு மட்டுமே புரியும். இதில் என்ன சிறப்பென்றால் ஜககதிப, அலோ மோர: யோ நா நரி அஸாபம் யோஜயதி என்று எழுத்துக்களைப் பிரித்துச் சொல்லவேண்டும்.

போஜசரிதம்

मान्धाता स महीपतिः कृतयुगालङ्कारभूतो गतः
सेतुर्येन महोदधौ विरचितः क्वाऽसौ दशास्यान्तकः ? ।
अन्ये चापि युधिष्ठिरप्रभृतयः याताः दिवं भूपते !
नैकेनापि समं गता वसुमती नूनं त्वया यास्यति ॥ २४ ॥

ஒரு காலத்தில் ஓர் அரசன் தனக்குப் பின் பதவிக்கு வர இருந்த இளைஞனைத் தூக்கிலிட உத்திரவிட்டான். அப்பொழுது இளைஞன் கூறிய ஶ்லோகமிது. அரசே ! க்ருதயுகத்தில் மாந்தாதா என்பவனிருந்தான். கடலில் அணை கட்டிய மஹான் ராமனும் இருந்தார். பின்பு யுதிஷ்டிரர் முதலிய அரசர்களும் இந்த பூமியை ஆண்டனர். ஆனால் அவர்கள் போனபோது போகாத இந்த பூமி உன்னுடன் நிஶ்சயமாக வரப் போவதாக நினைக்கிறேன். இதைக் கேட்டுத் தலை குனிந்த அரசன் அவனை விடுதலை செய்தான் என்று சொல்லப்படுகிறது.

लक्ष्मीनेत्रोत्पल श्री सततपरिचयादेष संवर्धमानः
नाभीनालीकरिङ्गन्मधुकर पटली दत्तहस्तावलम्बः ।
अस्माकं संपदोघान् अविरलतुलसीदामसञ्जातभूमा
कलिन्दीकान्तिहारी कलयतु कुशलं कालिमा कैटभारेः ॥ २५ ॥

ஸ்வாமி தேஶிகன் **கவிதார்கிகஸிம்ஹம்.** அவருடைய வர்ணனையில் நவரத்நங்கள் ஜ்வலிப்பது போல் சொல்லலங்காரம், பொருளலங்காரம் நிறைந்திருக்கும். இந்த ஶ்லோகம் க்ஷீராப்தி ஶாயியைப் பற்றியது. திருமேனியே நீலம். அதில் மேலும் நீலம், பச்சை சேர்கின்றன. திருமகளின் கருணை போன்ற பார்வை எப்போதும் படுகிறது. நாபியில் தோன்றிய தாமரையை வண்டுகள் சுற்றிச் சுற்றி வருகின்றன. அடர்த்தியான துளஸி மாலை அழகு சேர்க்கிறது. மேலும் யமுநா நதியின் நிறத்தை வெற்றி கொள்கிறது.

இத்தகைய கறுமை நிறம் நமக்கு க்ஷேமத்தையும் செல்வத்தையும் தருமாக. இது குவலயாநந்தத்தில் ஸ்ரீ அப்பய்ய தீக்ஷிதரால் ஓர் அலங்காரத்திற்கு உதாஹரணமாகக் காட்டப்பட்டிருக்கிறது.

போஜ சரிதம்

माता कुप्यति न मया न स्नुषया सापि नाम्बया न मया।
अहमपि न तया न तया वद राजन्! कस्य दोषोऽयम्॥ २६॥

போஜனிடம் வந்த ஒரு கவி தன் வறுமையை நேரடியாகச் சொல்லாமல் ''அரசே! தாய்க்குக் கோபம் வருகிறது. அதற்கு நானோ, மாற்றுப் பெண்ணோ காரணம் அல்ல. அவளுக்கும் கோபம் வருகிறது, அதற்குத் தாயோ நானோ காரணமல்ல. எனக்கும் கோபம் வருகிறது. அதற்கு அவ்விருவரும் காரணம் அல்லர். இதற்குக் காரணம் என்ன?'' இதைக் கேட்ட அரசன் வறுமைதான் காரணமென்று வாரி வாரிக் கொடுத்தான். அக்ஷர லக்ஷம் என்று சொல்லப்படுவது.

தேசிகன்

प्रथमसुजनाय पुंसे मह्यमपि प्रथमदुर्जनाय नमः।
सर्वं हतः कृतं यौ सकृदुपकारापकाराभ्याम्॥ २७॥

ஸ்வாமி தேசிகன் சுருக்கமாக ஸுபாஷிதம் எழுதினார். ஒன்பது பத்ததிகள். ஒவ்வொன்றிலும் 9 ஶ்லோகங்கள். இது முதல் ஶ்லோகம் - நல்லவர்களின் முதன்மையான நாராயணனுக்கும் முதன்மை துஷ்டனான எனக்கும் நமஸ்காரம். அவர் எத்தனை தீமைகள் செய்தவர்களையும் ஒரு நன்மை செய்திருந்தால் மன்னித்து விடுவார். நானும் அவ்வாறே எத்தனை நன்மைகள் செய்தவர்களையும் ஒரு தீமையைக் கொண்டு வெறுத்து விடுவேன். முதல் ஶ்லோகத்திலேயே ஸுபாஷிதம் அமைந்துவிட்டது. பரமனுடன் தன்னை ஒப்பிட்டுத் தனக்கும் நமஸ்காரம். செய்ததும் ஸுபாஷிதமே!

ஸபைக்கு இலக்கணம்

வ்யாஸ மஹாபாரதம்

न सा सभा यत्र न सन्ति वृद्धाः वृद्धा न ते ये न वदन्ति धर्मम्।
धर्मः स नो यत्र न चास्ति सत्यं सत्यं न तत् यच्छलमभ्युपेतम्॥ २८॥

இக்காலத்தில் லோக் ஸபா போன்ற பல பல ஸபைகள் உள்ளன. வைதிக விஷயத்தில் கூட ஸபைகள் உள்ளன. ஸபை என்றால் அது எப்படி இருக்க வேண்டும் என்று கூறுகிறது இந்த ஶ்லோகம். ஸபையில் பெரியோர் இருக்க வேண்டும். தர்மத்தைச் சொல்லாதவர் பெரியோர் அல்ல. ஸத்யம் கலவாதது தர்மம் அல்ல. சூது வாது கலந்தது ஸத்யமல்ல. இதிலிருந்து தெரியும் விஷயம் என்ன எனில் சூது கலவாததே ஸத்யம். ஸத்யத்துடன் சேர்ந்ததே தர்மம். தர்மத்தைப் பேசுபவரே பெரியோர். அத்தகைய பெரியோர் உள்ளதே ஸபை என்பது திரண்ட பொருள்.

பாகவதம்

जीर्यन्ति जीर्यतः केशाः दन्ताः जीर्यन्ति जीर्यतः।
जीविताशा धनाशा च जीर्यतोऽपि न जीर्यति॥ २९॥

உடல் தளர்ச்சி ஏற்பட்டால் கேஶங்களுக்கு நரை ஏற்படுகிறது. பற்களும் அவர்களுக்கு ஆடிச் சிதைகின்றன. ஆனால் வயோவ்ருத்தர்களுக்கு வாழ்க்கையில் ஆசையும் பணத்தில் ஆசையும் மட்டும் தளர்ச்சி அடைவதில்லை.

காளிதாஸன்

निधानगर्भामिव सागराम्बरां शमीमिवाभ्यन्तरलीनपावकाम्।
नदीमिवाऽन्तस्सलिलां सरस्वतीं नृपः ससत्वां महिषीममन्यत॥ ३०॥

ரகுவம்ஶம் 3வது ஸர்கத்தில்(9-வது ஶ்லோகத்தில்) திலீபனின் மனைவி கர்ப்பம் தரித்தாள் என்கிறார். அந்த கர்ப்பம் புதையல்களை உள்ளே கொண்ட பூமி போலவும், உள்ளே நெருப்பை வைத்துக் கொண்டிருக்கும் அரணி மரம் போலவும், பூமிக்குக் கீழே மறைந்து ஓடும் நீரைக் கொண்ட ஸரஸ்வதி நதி

போலவும் பெருமை வாய்ந்தது என்கிறார். இது ஆஶ்சர்யமான உவமை - இதை மாலோபமா என்பர்.

விஶாக தத்தன் - முத்ராராக்ஷஸம்

वहति जलमियं पिनष्टि गन्धान् इयमियं उद्ग्रथते स्रजो विचित्राः।
मुसलमियमिदञ्च पातकाले मुहुरनुयाति कलेन हुङ्कृतेन॥ ३१॥

ஒரு விழா நடக்கிறது. அதை வர்ணிக்கிறார் - ஒருத்தி தீர்த்தம் கொண்டு வருகிறாள். மற்றொருத்தி சந்தநம் அரைக்கிறாள். இன்னும் ஒருத்தி பல வகைப் பூக்களை மாலையாகக் கட்டுகிறாள். அங்கொருத்தி மாவு இடிக்கிறாள். உலக்கையைத் தூக்கி உரலில் போடும்போது அவளும் ஹூம் என்கிறாள். உலக்கை விழும் அழகிய சத்தமும் ஹூம் என்கிறது.

மாகன் - ஶிஶுபாலவதம்

बिंबोष्टं बहु मनुते तुरङ्गवक्त्रः चुम्बन्तं मुखमिह किन्नरं प्रियायाः।
श्लिष्यन्तं मुहुरितरोऽपि तं निजस्त्रीं उत्तुङ्गस्तनभरभङ्गभीरुमध्याम्॥ ३२॥

ஸ்ரீ க்ருஷ்ணன் தாருகன் என்கிற பாகன் தேரோட்ட த்வாரகையிலிருந்து ஹஸ்திநாபுரம் செல்கிறார். போகும் வழியில் ரைவதகம் என்கிற மலையைப் பார்க்கிறார். அங்கு ஒரு விந்தையான காட்சி. கிந்நரர் - கிம்புருஷர் என்று இருவகை உண்டு. கிந்நரருக்கு மனிதமுகம். உடல் குதிரையைப் போன்றது. மற்றவனுக்கு முகம் குதிரை போன்றது- மனித உடல். கிம்புருஷன், கிந்நரன் தன் மனைவியின் முகத்தில் முத்தமிடுவதைப் பார்த்து அந்த பாக்யம் நமக்கில்லையே என்று ஏங்குகிறான். ஆனால் கிந்நரனோ மனித உடல் கொண்ட கிம்புருஷன் தன் மனைவியைக் கட்டித் தழுவுவதைப் பார்த்து அந்த பாக்யம் நாம் பெறவில்லையே என்று ஏங்குகிறான்.

நைஷதம் (ஸ்ரீஹர்ஷன்)

याचमानजनमानसवृत्तेः पूरणाय बत ! जन्म न यस्य।
तेन भूमिरतिभारवतीयं न द्रुमैः न गिरिभिः न समुद्रैः॥ ३३॥

நளனைப் பற்றிய சரித்ரம் இங்கு பேசப்படுகிறது. அவனுக்கு இல்லை என்று சொல்லவே தெரியாதாம். அவன் எழுத்து படித்தபோது ந என்பதே படிக்கவில்லையா? படித்திருந்தும் மறந்து விட்டானா? என்று மக்கள் பேசினர். அந்த நளன் தானே பேசுகிறான் - ''கொடு என்று கேட்பவர்களின் விருப்பத்தை எவன் ஒருவன் நிறைவேற்றாமல் இருக்கிறானோ, அவன் தான் இந்த பூமிக்கு பாரம். மரங்களோ, மலைகளோ, கடல்களோ கூட பூமிக்குச் சுமை இல்லை''

புராண ஶ்லோகம்

सत्यं ब्रूयात् प्रियं ब्रूयात् न ब्रूयात् सत्यमप्रियम्।
प्रियं च नानृतं ब्रूयात् एष धर्मस्सनातनः ॥ ३४ ॥

தமிழில் வாய்மை என்கிற சொல் உள்ளது. அதை ஸம்ஸ்க்ருதத்தில் ஸத்யம் என்கிறார்கள். ஒருவன் கண்ணால் கண்டதைக் காதால் கேட்டதை எல்லாம் அப்படியே சொல்வது ஸத்யமன்று. பிறருக்கு மநக்லேஶம் (துயரம்) உண்டாகாதபடி பேச வேண்டும் என்பதை இந்த ஶ்லோகம் விளக்குகிறது. மனிதன் ஸத்யம் பேச வேண்டும். அவன் இன்பமான வார்த்தை பேச வேண்டும். பிறருக்கு வருத்தம் தரக்கடிய பேச்சை உண்மையானாலும் பேசக் கூடாது. இன்பமாகப் பேசுவதைக் கூடப் பொய் கலவாமல் பேச வேண்டும். இது பெரியோரின் விளக்கம். செய்தித் தாளில் நண்பனுடைய தேர்வு எண் வரவில்லை என்பது உண்மையாயினும் அதைச் சொல்வது கூடாது. அதே போல் வராத தேர்வு எண்ணை உன் எண் வந்திருக்கிறதுடா என்று சொல்வதும் கூடாது. தன் வயலில் ஒரு பசு மேய்ந்துவிட்டது என்பதற்காக அதை அடிக்க ஒருவன் ஓடுகிறான். பசுவும் ஓடி ஓர் மூலையில் திரும்பி ஓடிவிட்டது. இப்படி ஒரு பஶு போயிற்றா என்று கேட்டால் அதைப் பார்த்தவர் ஆம் என்று சொல்லக் கூடாது. இதுதான் ஸத்யம்.

இனி வருபவை என் ச்லோகங்கள்

रत्नानि धान्यानि महाधनानि गावस्तुरङ्गा इति सर्वसिद्धिः ।
सैषापि संपत् बहुधापि पूर्णा विना न शोभेत हि धर्मपत्नीम् ॥ ३५ ॥

ஒருவருக்கு நவரத்நங்கள், தாந்யங்கள், ஏராளமான பணம், பசுக்கள், குதிரைகள் முதலிய இந்தச் செல்வங்கள் பலவகையில் நிறைந்திருந்தாலும் தர்மபத்நீ என்பவள் இல்லாவிடில் இவையெல்லாம் மகிழ்ச்சி தராது.

श्रीकरग्रहणात् स्वामिन् ! श्रीपतिस्त्वं नु पूज्यते ।
मातृदेवा वयं पूर्वं पितृदेवास्ततः परम् ॥ ३६ ॥

ஆசிரியர் பெருமாளுடன் நேரில் பேசுகிறார் - அப்பனே! பிராட்டியினுடைய கையைப் பிடித்ததால்தானே உமக்கு ஸ்ரீபதி என்ற பெருமை ஏற்பட்டது ? ஆகையால் வேதம் சொன்னபடி நாங்கள் முதலில் மாதாவைத் தெய்வமாகக் கருதுவோம், பிறகுதான் பிதா.

घटिकारो न निद्राति नक्तञ्चैव दिवापि वा ।
तं मन्ये बालकं पुत्रं क्रीडन्तं वर्धमानकम् ॥ ३७ ॥

கடிகாரம் இரவிலும் பகலிலும் தூங்காமல் இருக்கிறது. அதை நான் விளையாடிக் கொண்டே வளரும் குழந்தையாகவே நினைக்கிறேன். (குறிப்பு:- இங்கு 1 முதல் 12 மணிவரை வளருவதால் வளரும் குழந்தை என்று ஆசிரியர் கருதுகிறார்.)

वन्देऽहं वानरेन्द्रान् ये सेतुबन्धं व्यधुः पुरा ।
रामस्यार्थे कृतत्यागाः समरेष्वनिवर्तिनः ॥ ३८ ॥

ராமாவதாரத்தில் வாநரங்கள் கடலில் அணை கட்டின. ராமனுக்காகவே ஸுகத்தையெல்லாம் துறந்தவர்கள். போரில் பின் வாங்காதவர்கள். அவர்களை வணங்குகிறேன்.

वायुपुत्रमहं वन्दे रामदासं महामतिम् ।
कार्यसिद्धिकरं देवं सूर्यशिष्यं सुखाप्तये ॥ ३९ ॥

தன்னை ராமதாஸன் என்று பறைசாற்றிக் கொண்டும், ஸூர்யனுடைய ஶிஷ்யனும், மஹாமதி நுட்பம் உடையவரும், நாம் எடுக்கும் கார்யத்தில் வெற்றி தருபவருமான வாயு புத்ரனை நமஸ்கரிக்கிறேன்.

अचतुरविचतुरमुख्यैः विरचितमेवं नु पाणिनीयमिदम्।
यत्र श्वयुवमघोनां एकत्र पदं लिखितमक्रमतः ॥ ४० ॥

யாரோ ஒரு பண்டிதர் கருகமணியையும் தங்கமணியையும் ஒரு பெண் ஒரு நூலில் கோர்ப்பதைப் பார்த்தவர் 'இது ஒன்றும் வியப்பில்லை. ஏனெனில் பாணிநி என்பவரே ஶ்வாநம் யுவாநம், மகவாநமூசே- நாயையும், வாலிபனையும், இந்திரனையும் ஒரே ஸூத்ரத்தில் கோர்த்திருக்கிறார்' என்று சொன்னார். ஶ்வ யுவ மகோநாம் அதத்திதே என்பது பாணிநியின் ஸூத்ரம். அந்த வழியில் அமைந்தது இந்த ஶ்லோகம்.

त्वां च मां च पृथक् चापि समुच्चित्य च संनुतिम्।
कृते मयि दयां दासे युवां न कुरुथो हरे ! ॥ ४१ ॥
(अत्र मां इत्यस्य रमां इत्यर्थः । कृते इति कर्तरि क्तः कृतवति इत्यर्थः ।)

இது பண்டிதர்களுக்கு மட்டுமே ரஸிக்கும்.

किं वा नरसमूहेन ? किं वा नरबलेन वा ? ।
हरेर्दृष्टिः कृपा यत्र तत्र सिद्धिर्ध्रुवो जयः ॥ ४२ ॥

நரர்கள் கூட்டமாக மட்டும் இருந்தால் என்ன? குரங்குகள் கூட்டமாக இருந்தால் என்ன ? யாரிடம் எம்பெருமானின் கடாக்ஷம் விழுகிறதோ அவர்களுக்கு மட்டுமே செயலில் வெற்றியும் செல்வமும் நிஶ்சயம்.

पुरा दमधना विप्राः आसन् सर्वे जितेन्द्रियाः ।
अद्यत्वे तु मनोदासाः सर्वे मदधनाश्च ते ॥ ४३ ॥

முன் காலத்தில் அந்தணர் என்பவர் மனதை அடக்கி ஶாந்தியையே செல்வமாகக் கொண்டிருந்தனர். இக்காலத்திலோ மனதுக்கு அடிமையாகி விட்டனர். அதனால் மதமே (திமிரே) அவர்களுக்குத் தநமாகிவிட்டது. (தம என்பது மத என்று மாறிவிட்டது!).

ऋणमग्निः व्रणः सूनुः अवश्यो गर्ह्यकर्मकृत्।
पतिस्तु मद्यपो नूनं योषितां नरकं क्षितौ ॥ ४४ ॥

இது பண்டிதர்களுக்கு மட்டுமே ரஸிக்கும்.

सद्गुणां सच्चरित्रां च स्मितपूर्वाभिभाषिणीम्।
पत्नीं प्राप्य पतिर्विन्देत् ध्रुवं स्वर्गसुखं क्षितौ ॥ ४५ ॥

நற்குணங்களுடனும் நல்ல ஒழுக்கத்துடனும் கூடிய புன்முறுவலுடன் பேசும் மனைவி ஒருவனுக்குக் கிடைத்துவிட்டால் இந்த பூமியே அவனுக்கு ஸ்வர்கம்தான்.

இது ஒரு ப்ரார்த்தனை ஶ்லோகம்

विप्राः अधीतिनो वेदे सर्वे हुतहुताशनाः।
सर्वे शान्तिप्रपूर्णाश्च सन्तु लोभविवर्जिताः ॥ ४६ ॥

அந்தணர் அனைவரும் வேதங்களைக் கற்றுணர்ந்து அக்நி கார்யங்களைச் செய்து பேராசையை விட்டவர்களாய் ஶாந்தியுடன் வாழ்வார்களாக.

अवधीरितशारदारविन्दे नयने ते हरिवल्लभे ! स्मरामः।
करुणापरिणामवीक्षितैः स्वैः भुवनान्यम्ब ! तनोषि ऋद्धिमन्ती ॥ ४७ ॥

தாயே! மஹாலக்ஷ்மீ! ஶரத் காலத்துத் தாமரையை வெற்றி கொள்ளும் உன் திருக்கண்களை நாங்கள் எப்போதும் நினைப்போம். தாயே! உன் கடைக்கண் பார்வையால் இந்த எல்லா உலகங்களையும் செழிப்பு உடையவைகளாகச் செய்கிறாய்.

शठजितश्चरणद्वयमाश्रये पठनतो मतिमान्द्यमपाकरोत्।
यत् द्वयमस्य सुधोपमवाग्झरी वकुलसौरभमाद्रियते च या ॥ ४८ ॥

ஸ்ரீ நம்மாழ்வாரின் திருவடிகளை எப்பொழுதும் ஆஶ்ரயிப்பேன். ஏனெனில் மகிழம்பூ மணம் நிறைந்ததும் அமுதத்தை நிகர்த்ததுமான அவருடைய திருவாய்மொழி என்னும் சொல்லருவி நம்முடைய புத்தியிலுள்ள மந்த நிலையை அகற்ற வல்லது. இது த்ருத விலம்பிதம் வ்ருத்தத்தில் அமைந்தது. காதில் கேட்பதற்கே மதுரமாயிருக்கும். பொருட்சுவை சேர்ந்து விட்டாலோ இன்பமோ இன்பம்!

समे विवेकशून्यानां न्याय्यं वाऽन्याय्यमेव च।
जात्यन्धानां समो ह्येतौ रात्रिर्वाप्यहरेव वा॥ ४९॥

நல்ல விவேக மில்லாதவர்களுக்குத் தீயதும் நல்லதும் ஒன்றாகவே தோன்றும். பிறவிக் குருடர்களுக்குப் பகலும் இரவும் ஒன்று போலத்தான்.

स्निह्यन्ति पशवः पक्षी सौम्यं सर्वोपकारिणम्।
पापी वरबलैर्मत्तः सुदूरस्थोऽपि हन्यते॥ ५०॥

பார்க்கப் பயங்கரமில்லாத உருவத்தை உடையவனும், எல்லோருக்கும் உபகாரம் செய்பவனுமான ஒருவனை ம்ருகங்களும் பறவைகளும் கூட நேசிக்கின்றன. பாபியான ஒருவன் வரங்கள் பெற்றுத் திமிர் கொண்டவனாய் இருந்தால் அவன் எங்கிருந்தாலும் கொல்லப்படுவான்.

குறிப்பு :- பவபூதி உத்தரராமசரிதத்தில் எழுதிய

यान्ति न्यायप्रवृत्तस्य तिर्यञ्चोऽपि सहायताम्।
अपन्थानं तु गच्छन्तं सोदरोऽपि विमुञ्चति॥ ५१॥

என்கிற ஶ்லோகத்தை அடியொற்றி எழுதப்பட்டது.

नवरात्रोत्सवो भाति कुमारिभिरलङ्कृतः।
वेषैर्नवनवैर्युक्तः नृत्तगीतादिसंयुतः॥ ५२॥

நவராத்ரி ஸமயம். அது பற்றி வர்ணனை இது. சின்னஞ்சிறு பெண் குழந்தைகள் விதவிதமான ஆடை

ஆபரணங்கள் அணிந்து இங்குமங்கும் செல்கின்றனர். நடநம், பாட்டுகள் எங்கும் குறைவின்றி நடைபெறுகின்றன. இவ்வாறாக அந்த விழா கண்ணுக்குக் கவர்ச்சியாக விளங்குகிறது.

நகைச் சுவை ஶ்லோகம்

कपयः सन्ति निभृताः फलं चास्ति महाद्भुतम्।
माहेश्वरेषु सूत्रेषु पाणिन्युद्धारितेषु हि॥ ५३ ॥

ஏதோ ஒருவகையான உணர்வினால் உந்தப்பட்டு இந்த ஶ்லோகத்தை எழுதினேன். அ இ உ க என்று தொடங்கி ச ஷ ஸ ர் ஹல் என்று பதிநான்கு ஸூத்ரங்கள். ஒரு ஸந்த்யா காலத்தில் நடநமாடிய சிவன் தன் கையிலுள்ள உடுக்கையை இசைத்ததாகவும் பதிநான்கு முறை இசைத்த போது மேல்காட்டியபடி பதிநான்கு ஸூத்ரங்கள் அமைந்ததாகவும் அதை அடிப்படையாக வைத்துக் கொண்டு பாணிநி என்பவர் வ்யாகரண ஶாஸ்த்ரத்தை எழுதினார் என்றும் சொல்லப்படுகிறது. இப்படிப்பட்ட ஸூத்ரங்களில் குரங்குகள் கைகட்டிச் சும்மா இருக்கின்றன. ஆனால் அவைகளுக்கு வியப்பைத் தரும் அளவுக்குப் பழங்கள் கிடைக்கின்றன. இது கருத்து. அந்த ஸூத்ரங்களின் இடையே க ப இ என்கிற சொல் குரங்கைக் குறிப்பதாகவும், அவற்றிற்குக் கிடைத்த பழம் பாணிநி வ்யாகரணம் என்று பொருள் கொள்ள வேண்டும்.

பாசுரத்தின் மொழிபெயர்ப்பு

यः शैलोद्धरणेन नः सुसुमहावृष्टे ररक्षाऽऽत्मवान्
यो लोकत्रयमाशु वा स्वचरणेनाऽऽक्रान्तवान् वामनः।
अद्धा वेङ्कटनामकं चरणतो यायाम तं पर्वतं
श्रद्धाभक्तिसमन्विताववृजिनकं तूलायतेऽग्नौ हि नः॥ ५५॥

குன்றமேந்தி குளிர் மழை காத்தவன்
அன்று ஞாலமளந்த பிரான் பரன்

சென்னுசேர் திருவேங்கடமாமலை
ஒன்றுமே தொழ நம் வினை ஓயுமே

ஆழ்வாரின் இந்தப் பாசுரத்துக்கு மேலே கண்ட ஶ்லோகம் மொழி பெயர்ப்பு.

अकिञ्चनधनं देवं धनञ्जयविवर्धनम् ।
देवकीपरमानन्दं नन्दसूनुं नमाम्यहम् ॥ ५५ ॥

ஏதுமில்லாத ஏழைக்கு அவனே செல்வம். தநஞ்ஜயன் என்கிற அர்ஜுநனைக் கைகொடுத்துக் காத்தான். தேவகியின் பாக்யத்தினால் அவளுக்குப் பிறந்தான். கோகுலத்தில் நந்த கோபனுக்குக் குழந்தையாக வளர்ந்தான். அவனை வணங்குகிறேன்.

उपचयापचयौ हि जनुष्मतां नियतभावितया विहितौ भुवि ।
मरणमप्यथ नैव निरुध्यते शरणमत्र सखे हरिमाश्रय ॥ ५६ ॥

இந்த உலகில் பிறந்த எந்த உயிரினங்களுக்கும் வளர்ச்சி தளர்ச்சி என்பது தவிர்க்க முடியாதவை. மரணமும் அப்படியே. ஆகையால் தோழனே ! ஸ்ரீ ஹரியை அடைக்கலமாய்ப் பற்று.

चिरप्रवासे रामस्य चीरकृष्णाजिनाम्बरम् ।
वीरचिह्नं धनुश्चैव तूणीरं चापि पावनम् ॥ ५७ ॥

ராமனுக்கு 14 ஆண்டுகள் நீண்ட வநவாஸம் கிடைத்தது. உடுத்தியது மரவுரி, மான்தோல். கையில் வீரன் என்பதற்கு அடையாளமான வில், தோளில் அம்புறாத் தூணி. இவை அத்தனையுமே நாம் நினைக்க நினைக்க நம்மைப் புனிதமாக்கும்.

குருவின் பெருமை

गुरुः श्रेष्ठो गुरुः श्रेष्ठः गुरुःश्रेष्ठो जगत्त्रये ।
सूर्येण सदृशं ज्योतिः नैव दृष्टं न वा श्रुतम् ॥ ५८ ॥

இந்த மூன்று உலகங்களிலும் குருவே மேலானவர். இது ஸத்யம். ஸூர்யனுக்கு ஸமமாக வேறொரு ஜோதியை நாம் கண்டதுமில்லை, கேட்டதுமில்லை.

दुर्गन्ध दूषितदुराग्रहमत्सरादि पूर्णं वपुः परमहेयमभूत् बुधानाम्।
स्तीपुंभिधा परमवैरनिदानमत्रहं हो जनाः किमिति मुह्यत कर्दमेषु ? ॥ ५९

இந்த மனித உடம்பு துர்நாற்றம் மிகுந்தது. இதில் தவறான பிடிவாதம், பொறாமை, முதலியவை நிறைந்திருக்கின்றன. இதை வெறுக்க வேண்டும் என்று ஞானிகள் கூறினர். மேலும் ஆண் பெண் என்கிற படைத்த படைப்பு பெரும் பகையையும், சண்டையையும் வளர்க்கக் காரணமாகிறது. ஐயோ ! மக்களே ! ஏன் இந்தச் சேற்றில் நின்று மயங்குகிறீர்கள்?

कमले ! कमलाक्षिपादहस्ते ! कमहं त्वां हरिमन्तरेण याचे ? ।
यमदूतभयं निवारयेथाः तमसः पारमिमं तथा नयेथाः ॥ ६० ॥

நின் கண், பாதம், கை, கமலம் என்பது போல எல்லா அங்கங்களும் உனக்குத் தாமரையே. உன்னையும் ஹரியையும் தவிர வேறு யாரிடம் நான் யாசிப்பேன்? கடைசி காலத்தில் யமனின் தூதர்கள் வருவர் என்கிற பயத்தை நீ விலக்க வேண்டும். இந்த ப்ரக்ருதி மண்டலத்துக்கப்பால் என்னைத் தாண்டுவிக்க வேண்டும்.

नरसिंह ! नमस्तेऽस्तु प्रह्लादमिव पाहि माम्।
संसाररक्षसाऽत्यन्तं बाधितं प्रियपुत्रकम् ॥ ६१ ॥

ஓ நரஸிம்ஹனே ! உன்னை ஸேவிக்கிறேன். ப்ரஹ்லாதனைப் போல் என்னைக் காக்க வேண்டும். பிறப்பு இறப்பு என்கிற அரக்கன் என்னை ஹிம்ஸிக்கிறான். நான் உனக்கு ப்ரியமான புத்ரன் அன்றோ? **மணிவர இவ ஶௌரே: நித்யஹ்ருத்யோபி ஜீவ:** என்கிற ஸ்வாமி தேஶிகனின் ஸ்ரீ ஸூக்தி நினைவில் கொள்ளத்தக்கது.

निरस्ताखिलदोषाय समस्तगुणसिन्धवे।
पुलस्त्यपौत्रनाशाय अगस्त्यशिष्याय ते नमः ॥ ६२ ॥

எந்தவிதமான தீயகுணங்களுமில்லாத அந்த எம்பெருமான் ஸகலமான நற்குணங்கள் கடலென நிறைந்தவர். புலஸ்த்யருடைய

பேரனுன ராவணனை ஸம்ஹரித்தவர். அகஸ்த்யருடைய ஶிஷ்யர். இப்படிப்பட்ட அவருக்கு நமஸ்காரம். இங்கு ப்ரஹ்ம ஸூத்ரத்தில் உபய லிங்காதிகரணத்தில் சொல்லப்பட்ட விஷயம் ஸூசிதம்.

यदा तु सख्यं रामस्य सुग्रीवेण सहाऽभवत्।
तदा बिभाय पौलस्त्यः कालाग्नेरिव राघवात्॥ ६३॥

ஶ்ரீ ராகவன் எப்பொழுது ஸுக்ரீவனுடன் ஸ்நேஹம் செய்து கொண்டானோ, அப்பொழுது ராவணன், ப்ரளய கால அக்நி என்பார்களே அதே போல ராமனை நினைத்து நடுங்கினான்.

ஹநுமத் ப்ரபாவம்

अब्धिं लिलङ्घयिषता हनुमन्! त्वया तत्
रक्षो महद्विनिहतं सुरसा जिता च।
रक्षोगणाश्च निहताः नगरं प्रदग्धं
संभाषितौ जनकजा च दशास्यनामा॥ ६४॥

(अत्र चकारः भिन्नक्रमः)

இலங்கைக்கு ஹநுமான் செல்ல நினைத்துக் கடலைத் தாண்டியபோது ஸிம்ஹிகா என்பவளை அழித்தும், ஸுரஸா என்பவளை வென்றும் பிறகு பற்பல அரக்கர்களை அழித்தும் ஸீதையுடனும் ராவணனுடனும் பேசினார். அப்படிப்பட்ட பெருமை வாய்ந்தவர். இங்கு ஸுந்தரகாண்டக் கதை ஒரே ஶ்லோகத்தில் அமைந்தது.

रघुधुरन्धरनाम सदा जपेत् अलघुपापपुनर्भवनाशनम्।
हरविरिञ्चिमुखैरनुसेवितं चरमकालसदौषधमद्भुतम्॥ ६५॥

இது द्रुतविलम्बितम् வ்ருத்தம். ஶ்ரீ ராமனுடைய நாமத்தை ஒருவர் எப்பொழுதும் ஜபிக்க வேண்டும். அது பெரிய

பாபங்களையெல்லாம் போக்குவதுடன் மறு பிறவியும் வராமல் தடுக்கிறது. மேலும் இது ஶிவன், பிரமன் முதலியவர்களால் எப்பொழுதும் ஜபிக்கப்படுகிறது. எல்லாவற்றுக்கும் மேலாகக் கடைசி காலத்தில் ஒரு நல்ல மருந்தாகும். அத்புதமான பலன் கிடைக்கும்.

जाने त्वां जानकीजाने ! एकपत्नीव्रतं भृशम् ।
अथापि कथमत्याक्षीः वनवासेप्यनुव्रताम् ॥ ६६ ॥

ஜாநகியின் மணாளனை ஸ்ரீ ராம ! உன்னை நான் அறிவேன். நீ ஏகபத்நீவ்ரதன் அவ்வாறிருந்தும் வநவாஸத்தில் உன்னைத் தொடர்ந்து வந்த அந்த ஸீதாதேவியைக் கடைசியில் எப்படி விலக்கினாய் ?

குறிப்பு:- தெலுங்கில் ஒக மாட - ஒக பாணம் - ஒக தாரம் என்று சொல்வர். இந்த ஶ்லோகத்தில் ज எனும் எழுத்து 3 இடங்களில் அமைந்துள்ளது.

ஸ்ரீ கருணாகரனின் பெருமை

धीरः शूरो गुणज्ञश्च रसज्ञो ब्रह्मवित्तमः ।
भाग्यात् प्राप्तोऽस्ति मेधावी सखा मे करुणाकरः ॥ ६७ ॥

வில்லூர் ஸ்ரீS.கருணாகரன் என்பவரைப் பலரும் அறிவர். லௌகிகத்தில் பெரிய பதவி வஹித்தும் கூட நல்ல ஸம்ஸ்க்ருத ஜ்ஞாநத்துடன் ஸம்ப்ரதாய விஷயங்களை ஆங்காங்கு உபந்யாஸம் செய்கிறார். அவருடன் எனக்கு நட்பு ஏற்பட்டது. இதை ஒரு நாள் நினைத்தேன். இந்த ஶ்லோகம் பிறந்தது. அவருடன் நட்பு ஏற்பட்டது எனது பாக்யம் என்பது கருத்து.

பெண்ணைப் பெற்றவரின் கவலை

कन्यैका न हि मे प्रजा तदितरा विद्याऽनवद्या भृशं
रूपेणाप्यनिमेषदृष्टिविषयीभूता जगन्मोहिनी ।

कोऽस्याः साधुवरः ? क्व वेति ? विमृशन् व्याघूर्णमानोऽभवं
दिष्ट्या प्राप्त इहैव तादृशवरः कन्या हि धन्या मम ॥ ६८ ॥

ஒரு நாள் மாலைப் பொழுது. வாயிலில் நின்று கொண்டிருந்தேன். **கந்யா ஹி தந்யா மம** என்று மனதில் தோன்றியது. அந்தக் கருத்தை வைத்து இந்த ஶ்லோகத்தை முடித்தேன். எனக்கு ஒரே பெண். வேறு குழந்தை இல்லை. நல்ல படிப்பு. நல்ல அழகு. பார்ப்பவர் மயங்குவர். இப்படிப்பட்டவளுக்கு நல்ல வரன் யார்? எங்கே ? என்று குழம்பிக் கொண்டிருந்த எனக்கு நல்ல வரன் அருகிலேயே கிடைத்து விட்டான். என் பெண் அத்ருஷ்டஶாலியே.

गुरुपादरजस्नानदग्धनिश्शेषकिल्बिषः ।
सोऽहं दुर्जनमूर्धन्यः पावनोऽस्मि सतां मतः ॥ ६९ ॥

ஆசார்யரின் திருவடித் தூளிகளால் ஸ்நாநம் செய்து அனைத்துப் பாபங்களும் நீங்கப் பெற்ற நான் பாபிகளின் தலைவனாக இருந்தேன். இப்பொழுது புனிதனாகி ஸாதுக்களுடைய கருணைக்குப் பாத்ரனாக இருக்கிறேன்.

பதிபக்தி.

पतिसेवापरा नारी गतिं प्राप्नोत्यनुत्तमाम् ।
सती सा पूज्यते सर्वैः मतिरेषा त्रयीविदाम् ॥ ७० ॥

கணவனின் ஸேவையிலேயே ஈடுபட்டிருக்கும் ஒரு பெண் உத்தமமான கதியை அடைவாள். அவளை **ஸதீ** என்று எல்லோரும் போற்றுவர். இது வேதாந்தம் அறிந்த பெரியோரின் கருத்து.

ராமபக்தியின் ஏற்றம்

वानरो वृक्षमारोहेत् वृक्षाद्वृक्षं प्लवेत च ।
उदधौ सेतुबन्धं तं व्यदधू रामभक्तितः ॥ ७१ ॥

குரங்குகள் மரங்களின் மேல் ஏறும். மரத்துக்கு மரம் தாவும். அப்படிப்பட்ட குரங்குகளே முக்காலத்திலும்

போற்றப்படுகிற நள ஸேதுவைக் கட்ட உதவின என்றால் அதுதான் ஸ்ரீ ராமபக்தியின் சிறப்பு. ஸ்ரீ ஸத்குரு த்யாகராஜர் **கபி வாரிதி தாடுந, கலிகி ரோட கட்டுன** என்று பேசியதை இங்கு நாம் நினைவு கூறத்தகும்.

सागरोऽपि न कम्पेत वातो रुद्धगतिर्भवेत्।
सूर्योऽपि विश्रमाकाङ्क्षी *रामो द्विर्नाभिभाषते*॥ ७२॥

ராமன் ஒரு போதும் சொன்ன சொல் மாறமாட்டான் என்று ஸ்ரீ ராமன் தன்னைப் பற்றியே பேசினான். அதே விஷயத்தை இங்கு ஆசிரியர் அழகுபடக் கூறுகிறார். கடலும் அசையாமலிருக்கும் ! காற்றும் தடைப் பட்டு நின்றுவிடும் ! ஸூர்யனும் ஒருநாள் ஓய்வு பெற்று நின்றுவிடலாம் ! ஆனால் ராமன் சொன்ன சொல் தவறமாட்டான்.

कामगां कल्पवृक्षं वा चिन्तारत्नं न वाऽर्थये।
अपुनर्भवमोक्षाय कल्पन्ते न कदापि ते॥ ७३॥

காமதேநு, கல்பவ்ருக்ஷம், சிந்தாமணி இவற்றினிடம் நான் எதுவும் கேட்க விரும்பவில்லை. அவற்றால் மறு பிறவியற்ற மோக்ஷம் என்பது ஒருபோதும் கிடைக்காது.

स्वयं विशीर्णपत्रोपि पुनरुत्पन्नपल्लवः।
प्रत्यब्दं नूत्नतां याति वृद्धोऽपि स महातरुः॥ ७४॥

அது இலை உதிர் காலம். மரத்துக்கு ஐம்பது வயதுக்கு மேல் இருக்கும். ஒரு இலை கூட இல்லாமல் அனைத்தும் உதிர்ந்து விட்டன. என்ன ஆப்சர்யம் பாருங்கள் ! மறுநாள் தொடங்கிச் சிறிது சிறிதாக 10 நாட்களில் மரம் நிறைய இலைகள் தோன்றிவிட்டன. இப்பொழுது அது வாலிபமாகக் காணப்படுகிறது.

லகு நிறைந்த வ்ருத்தம்

उपहृतमिह मधु रिपुमधुघातिन्!
स्वीकुरु कुरुकुलक्षतिकृतिहेतो!।

तारय जनमृतिजलनिधिपोत !
स्तुतिकृति मयि कुरु सकरुणवीक्षाम् ॥ ७५ ॥

அப்பனே! மது என்கிற பகைவனை அழித்தவரே! இதோ உமக்குத் தேன் ஸமர்ப்பிக்கின்றேன். கௌரவர்களை அழிக்கும் வேலைக்கு முக்ய காரணமாக இருந்தவரே ! இதை ஸ்வீகரிப்பீராக. இந்த மக்கள் பிறந்து இறந்து படும் ஸம்ஸாரக் கடலைத் தாண்டுவதற்குப் படகு போன்றவரே ! கரையேற்றி விடும். தேவரீரைப் போற்றிப்பாடும் அடியேன் மீது கருணையுடன் கூடியகடாக்ஷத்தைச் செலுத்த வேண்டும்.

மாத்ருவந்தநம்

सुमहत्यपराधेऽपि यस्याः मातुः प्रसादतः ।
प्रसन्नो भगवान् श्रीशः तस्यै मात्रे नमो नमः ॥ ७६ ॥

எந்தப் பிராட்டியின் அநுக்ரஹத்தினால் கோரமான பாபங்கள் செய்தவனிடம் கூட எம்பெருமான் அநுக்ரஹம் செய்கிறாரோ, அப்படிப்பட்ட ஜகந்மாதாவுக்கு மீண்டும் மீண்டும் வந்தநம்.

சீ ! இவன் சோம்பேறி

किं करोमि ? किमश्नामि ? कुत्र यामि ? वदामि किम् ? ।
किं पिबामि ? विधे ! धिक् त्वां इति मन्दस्य भाषणम् ॥ ७७ ॥

சோம்பலால் சிலர், என்ன செய்வது? சாப்பாடு எப்படிக் கிடைக்கும்? எங்கே செல்வேன் ? என்ன பேசுவேன்? குடிப்பதற்குக் கூட ஒன்றுமில்லையே, இப்படியுமா என் தலை விதி? என்று புலம்பித் தவிப்பர். இது சோம்பேறிகள் பேச்சு.

உழைப்பின் பெருமை

यत्नं कुर्यात् विधिर्दद्यात् यो गर्भेऽपि ररक्ष माम् ।
इतीयं सुभगा वाणी धीराणां मतिचोदिता ॥ ७८ ॥

நான் முயற்சி செய்வேன். பகவான் கொடுப்பான். தாயின் கருவறையில் என்னை அவன் காத்தான் அன்றோ?

இத்தகைய அழகான சொற்கள் அறிவு பூர்வமாகச் சில தீரர்கள் பேசும் பேச்சு.

குறிப்பு :- "यो मे गर्भगतस्याऽपि वृद्धिं कल्पितवान् प्रभुः" என்கிற வாக்யத்தை அடியொற்றியது.

मधुपो मधुपायी च द्वौ समौ न हि संमतौ।
परोपकारकः पूर्वः द्वितीयो लोकनाशनः ॥ ७९ ॥

தேனீயும், கள் குடிப்பவனும் ஒரு போதும் சரி ஸமமாக மாட்டார்கள். முதலில் சொல்லியது ஸமூஹ ஸேவகன். இரண்டாமவன் ஸமூஹ விரோதி.

पत्न्याः पितृगृहं तुभ्यं रोचतेऽत्यन्तमुच्यते।
किं ब्रूमोऽद्य नृणां त्वं च शंकरो मार्गदर्शिनौ ॥ ८० ॥

எம்பெருமானே ! மனைவியின் பிறந்தகம் உனக்கு எப்பொழுதும் ப்ரியமாக உள்ளது. இக்காலத்தில் மனிதர்களைப் பற்றி என்ன சொல்ல? நீயும் ஶங்கரனும் தான் முன் உதாரணமாக அமைந்து விட்டீர்கள்.

हरिभजनामृतपानसुतृप्तैः
भवभयभीतिसुदूरविमुक्तैः।
करिणि कृताभयकेशवभक्तैः
सह वसतिं कुरु सद्भिरिहाऽऽप्तैः ॥ ८१ ॥

அப்பனே ! ஹரி பஜநமென்கிற அமுதத்தைக் குடித்து மிகவும் த்ருப்தியுடன் இருப்பவர்களும், பிறப்பு இறப்பு என்கிற பயத்தை விட்டு வெகு தூரம் விலகி இருப்பவர்களும், கஜேந்த்ரனுக்கு அபயம் தந்த கேசவனிடம் பக்தி நிறைந்தவர்களும் எல்லோருக்கும் நல்லவர்களுமான ஸாதுக்களுடன் கூடிப் பழகும் வாய்ப்பை எனக்குத் தந்தருள்வாயாக. (இந்த ஶ்லோகத்தில் நான்கு பாதங்களின் இறுதியில் तैः என்று அமைந்திருப்பது சிறப்பு).

क इति ब्रह्मणो नाम ईशोऽहं सर्वदेहिनाम्।
आवां तवाङ्गे संभूतौ तस्मात् केशवनामवान्॥ ८२॥

கேஶவன் என்கிற திருநாமம் வந்ததற்கு விளக்கம் கூறி அதன் பெருமையை ருத்ரனே பேசியிருக்கிறான் என்பது நினைவில் கொள்ளத்தகும்.

दयाऽदया वास्ति वदाऽद्य यादवे पुरे रिपूणां प्रलयाग्निमादधाः।
करे करीन्द्रस्य करं व्यधाः पुनः निशाकरस्येव सुधामयं वपुः॥ ८३॥

கேள்வி - பதில்

राजा - किमिच्छसि मुने! ब्रूहि! मुनिः - शान्तिं याचामहे विभुम्॥ ८४॥

ஓர் அரசன் முநிவரிடம் 'தேவரீருக்கு என்ன வேண்டும்' என்றான். முநிவர் 'எம்பெருமானிடத்தில் ஶாந்தியை ப்ரார்த்திக்கிறேன்' என்றார்.

நிலாவின் களங்கம்

कुङ्कुमपङ्ककलङ्कितदेहः सङ्गमदोषवशात् गुरुपत्न्याः।
चिह्नमिदं कवयो मृगमाहुः केचिदिदं शशमाहुरथाऽन्ये॥ ८५॥

சந்த்ரனில் இருக்கும் ஒரு வகையான கருமை நிறம் பற்றிச் சிலர் அது மான் என்றும், சிலர் அது முயல் என்றும் பேசினர். **ம்ருகாங்க: ஶஶாங்க:** என்ற பெயர்களே உள்ளன. ஆனால் குரு பத்நியிடம் இவன் சேர்ந்ததால் அவள் மார்பில் பூசியிருந்த குங்குமப்பூ கலந்த சந்தநம் இவன் மீது கறையாகப் படிந்தது என்று இங்கு ஆசிரியர் கருதுகிறார். ஆனால் ஆந்திர கவி ஒருவர் இரவு முழுவதும் அவன் உண்ட இருளே அவன் வயிற்றில் தெரிவதாகக் கருதுகிறேன் என்றார்.

श्रीवैष्णवाग्र्यकुलसंभव! सौम्य! विद्वन्!
श्रीकूत्तपाक्करघुनन्दन! भागधेय!।
पाणौ वसन्ततिलकाभवधूं गृहाण!
सत्सन्ततेः प्रजननाय कुलस्य भूत्यै॥ ८६॥

ஸௌம்யன் என்கிற ஒரு வாலிபன், CA படித்தவன், நல்ல ஸம்ஸ்க்ருத ஜ்ஞாநம் உள்ளவன். அவனுக்கு விவாஹம் நடக்க இருப்பதை அறிந்து என் ஆஶீர்வாதமாக இந்த ஶ்லோகத்தை எழுதி அனுப்பினேன். இந்த ஶ்லோகம் அமைந்தது **வஸந்த திலகா** வ்ருத்தத்தில்.

विश्वविख्यातवैराग्यन्यायशीलस्य देहतः ।
प्राप्तो ज्ञानं च शीलं च सौम्य ! त्वं विजयस्व भोः ! ॥ ८७ ॥

இதுவும் அவனுக்கு அனுப்பிய ஆஶீர்வாதமே.

वापीकूपतटाकाद्याः सरितो जाह्नवीमुखाः ।
सर्वास्ताः सागरं यान्ति हरिं सर्वनमस्कृतिः ॥ ८८ ॥

கங்கை யமுனை போன்ற எல்லா நதிகளும் கடலிலே போய்ச் சேருகின்றன. அதே போல் எந்த தேவதையை நமஸ்கரித்தாலும் அது ஶ்ரீமந் நாராயணனையே சேருகிறது.

पयोधरमहं वन्दे मातृवक्षोजसन्निभम् ।
यन्निस्सृतेन पयसा रूढो मर्त्यास्य ओषधिः ॥ ८९ ॥

மழை பொழிவதனால் பயிர்கள், மரங்கள் வளர்கின்றன. பயோதர என்கிற சொல்லுக்கு மேகம் என்றும் ஸ்தநம் என்றும் பொருள். இந்த உலகத்தில் பிறந்த அனைவரும் தாயின் பாலை உண்டுதானே வளர்கின்றனர் ? ஆகையால் மேகத்தையும் நான் வணங்குகிறேன் என்பது கருத்து.

अङ्गं विशीर्णमखिलं शीर्णा दन्तास्समस्तशः ।
दृष्टिर्वाक् दुर्बले तस्य तथाप्याशा बलीयसी ॥ ९० ॥

அங்கங்கள் தளர்ந்தன. பற்கள் எல்லாம் உதிர்ந்தன. கண் பார்வையும் பேச்சும் கூடப் பலவீனம். ஆயினும் மனிதனை ஆசை என்பது பலமாகப் பற்றியிருக்கிறது.

विधिशिवमुखा देवा यस्य प्रभोरभिमन्दकाः
पदनलिनयोरर्चां कर्तुं दृढं च समुत्सुकाः ।

तमिह मनुजाः केचित् दोषात् समत्वधिकान्विताः
प्रपदनविधेर्भ्रष्टाः कष्टं लुटन्ति च संसृतौ ॥ ९१ ॥

ஸ்ரீமத் பாகவதத்தில் யத்பாதபங்கஜ ரஜஸ் ஸ்நாநம் மஹாந்த: குர்வந்தி உமாபதிரிவ ஆத்மதமோபஹத்யை என்று உள்ளது. அதாவது ஶிவன் எப்படி நாராயணனுடைய திருவடித்தூளிகளின் ஸ்நாநத்தில் தன் தமோகுணம் நீங்க வேண்டும் என்று விரும்பினாரோ, அது போலவே மஹான்கள் அனைவரும் விரும்புகின்றனர் என்று கூறப்பட்டுள்ளது. அதே கருத்து தான் இங்கும் உள்ளது.

गुरूणां वचनं पथ्यं यावत्ते शक्तिशालिनः ।
वचनं शक्तिहीनानां न लभेताऽनुमोदनम् ॥ ९२ ॥

உடம்பில் ஶக்தி உள்ளவரையில் ஆசார்யர்களுடைய வார்த்தை நன்மை பயப்பதாகத் தோன்றும். ஶக்தி இல்லாதவனுடைய பேச்சு மதிப்பைப் பெறாது.

नृसिंहजननीं स्थूणां वन्दे वाञ्छितसिद्धये ।
या ताडिता हिरण्येन प्रसूताऽद्भुतपुत्रकम् ॥ ९३ ॥

ந்ருஸிம்ஹனைப் பெற்ற தாயான அந்தத் தூணை, நமஸ்கரிக்கிறேன். என் கோரிக்கை நிறைவேறுமாக. ஏனெனில் ஹிரண்யகஶிபுவினால் அடிக்கப்பட்ட அந்தத் தூண் தானே யாரும் வியக்கத்தக்க குழந்தையைப் பெற்றெடுத்தது ?

श्रीशठकोपसूरिवैभवम्

परमविशिष्टो विप्रः भागवतेऽत्यन्तभक्तिमान् जयति ।
शठजित्समाननामा तन्मासे चैव तदुडुसंजातः ॥ ९४ ॥

பம்பாயில் ஶடகோபாசார்யர் என்கிற திருநாமமுடைய ஒரு ஸ்வாமி ஞாநத்திலும் ஶீலத்திலும் சிறந்தவராய் பாகவதர்களிடம் பரம ப்ரீதி உள்ளவராய் இருந்தார்.

திருநாமத்துக்கேற்ப அவர் ஸ்வாமி நம்மாழ்வார் அவதரித்த வைகாசி விஶாகத்திலேயே பிறந்தார்.

इरुकरैग्रामाभिजनः नारायणसूरिसुकृतसुतनुर्जातः ।
भारद्वाजकुलीनः भरत इव अत्यन्तभक्तिमान् श्रीशे ॥ ९५ ॥

இதுவும் அந்த ஸ்வாமியைப் பற்றியதே.

ज्ञानं शीलं च दाक्षिण्यं दया दानं दमः शमः ।
अशोभयन्त यं सर्वे नन्दनं व सुरद्रुमाः ॥ ९६ ॥

அந்த ஸ்வாமியிடம் ஸகல குணங்களும் தேவலோகத்திலுள்ள மரங்கள் நந்தநம் என்கிற தோட்டத்துக்கு அழகு சேர்த்தது போல் குடி கொண்டிருந்தன.

वृत्त्यर्थं क्वापि कर्माणि कुर्वाणोऽसौ निशामुखे ।
स्नात्वा सन्ध्यादिकं कर्म समाप्याहारभाक् भवेत् ॥ ९७ ॥

ஏதோ ஒரு தஶாபுக்தியின் வஶமாக உத்யோகத்துக்குச் சென்று வந்த அந்த ஸ்வாமி அலுவலகத்தில் தீர்த்தம் கூட அருந்துவதில்லை. இல்லம் திரும்பிய பின் தீர்த்தமாடி ஸந்த்யா வந்தநம் முடித்துத் தான் ஆஹாரம் உட்கொள்வார்.

दम्भासूयादिमुक्तः सरसमृदुवचाः संप्रदायान्तरेषु
त्यक्त्वा वैषम्यबुद्धिं सममतिरनघः साधुसेवी गुणाढ्यः ।
मुंबापुर्यां चिरात्प्राक् श्रुतिशिखरगुरोः नाम्नि संमेल्य संस्थान्
सेवां प्राचीकशत्सः द्रमिडसुरगिरा कानिचित् पुस्तकानि ॥ ९८ ॥

அந்த ஸ்வாமி மும்பையில் வேதாந்த தேசிக ஸம்ப்ரதாய ஸபா என்ற பெயரில் ஒரு ஸபை அமைத்துத் தமிழிலும் ஸம்ஸ்க்ருதத்திலும் பல புத்தகங்கள் அச்சிட்டு வெளியிட்டார்.

कारिजाभिधमुपास्महे सदा वारिजाक्षपदपद्मषट्पदम् ।
वारिताखिलतदन्यदैवतं मारिताङ्गरहिताशुशुक्षणिम् ॥ ९९ ॥

புண்டரீகாக்ஷனுடைய திருவடித் தாமரைகளில் வண்டுபோல் ஈடுபட்டவரும், அவனைத் தவிர மற்ற தேவர்களை விலக்கியும், காமம் என்கிற அக்நியை அடக்கியும், காரி என்பவருக்குப் புத்ரனாக அவதரித்த நம்மாழ்வாரைத் தொழுவோம்.

ஸாதுக்களின் பெருமை

मत्स्यन्दि कारुण्यधनाः शास्त्रनिःशङ्कधीवराः ।
मायाजालच्छिदः सन्तः ज्ञानामृतदुघाः सदा ॥ १०० ॥

சில மஹான்கள் மேகம் பொழிவது போல் என் மீது கருணையைப் பொழிந்தனர். இவர்கள் ஶாஸ்த்ரங்களில் தெளிந்த சிறந்த ஞானம் உள்ளவர். நமக்கு உள்ள மாயை என்கிற வலையை அறுத்து விடுவர். இப்படிப்பட்டவர்கள் ஞானம் என்றும் அமுதத்தை நமக்குச் சுரக்கின்றனர். இங்குள்ள தீவர என்பதற்கு செம்படவர் (மீனவன்) என்றும், ஜால என்பதற்கு மீன் பிடிக்கும் வலை என்றும் மற்றொரு பொருள் உண்டு. தந என்பது மேகத்தைக் குறிக்கும். மத்ஸ்யந்தி என்கிற இடத்தில் மத்ஸ்யாவதாரம் நமக்கு நினைவுக்கு வருகிறது. இது ஒரு வகை ஶப்தசித்ரம். யதிராஜ ஸப்ததியில் நியதோந்நதிரோஷதீஶ: என்று ஸ்வாமி ஸாதித்த வகையில் இதுவும் அமைந்திருக்கிறது.

असिद्धो बाधितः कश्चित् सत्प्रतीपक्षकामुकः ।
विरुद्धगर्हिताचारः विरतो व्यभिचारतः ॥ १०१ ॥

ந்யாய ஶாஸ்த்ரத்தில் ஹேத்வாபாஸம் என்று ஒன்று உண்டு. அது ஐந்து வகை ஸவ்யபிசார, ஸத்ப்ரதிபக்ஷ, அஸித்த, விருத்த, பாதித என்பவை. அந்த வார்த்தைகளை வைத்து ஆசிரியர் ஒரு மனிதனிடம் இத்தனையும் இருப்பதாகச் சாதுர்யமாகப் பேசுகிறார்.

दयानिधे ! मया युक्तः शयानोऽसि महोदधौ ।
कयाधुसुतवत् पाहि भयापोहं विधाय माम् ॥ १०२ ॥

எம்பெருமானே ! கருணைக் கடலே ! லக்ஷ்மியுடன் சேர்ந்து திருப்பாற்கடலில் எப்போதும் பள்ளிகொண்டு இருக்கிறீர். என்னுடைய பயத்தை நீக்கி ப்ரஹ்லாதனைப் போல் என்னைக் காப்பீராக. இங்கு தயா, ஶயா, பயா என்பவை ஶப்த சித்ரச் சிறப்பு.

रसिकजनमनोभिरञ्चकं यत् तदिह पुरस्क्रियते जनैरथाऽन्यैः ।
नटपतिशिरसा धृतेऽर्धचन्द्रे विपिनशिवा बहु मन्वते तमिन्दुम् ॥ १०३ ॥

உலகத்தில் ரஸிகர்களான பெரியோர்களுக்கு எது மநோரஞ்ஜகமாக இருக்குமோ அதையே மற்றவர்களும் ஆதரித்து ஆமோதித்துத் தலையசைத்துப் பாராட்டுவர். சந்த்ரனின் சிறுபாகம் ஶிவன் தலையில் இருப்பதால் அதைப் பார்த்துக் காட்டிலுள்ள குள்ள நரிகளும் பாராட்டி ஊளையிடுகின்றன. **கதாநுகதிகோ லோக: ந லோக: பாரமார்த்திக:-** சந்த்ரனைப் பார்த்த குள்ள நரி ஊளை இடுதல் ஸஹஜம்.

पदत्राणं वन्दे परमवृजिनानां क्षयकृते
सदाहं श्रीरङ्गप्रमुखशठजिद्योगिनृपतेः ।
रमायुक्तश्रीमन्नृहरिपदसेवां कृतवतः
नृसिंहप्रेयस्या सह सुरगिरां पाठनकृतः ॥ १०४ ॥

ஆசார்யர்களுடைய திருவடி நிலை இவற்றை என்னுடைய மஹாபாதகங்கள் தீர்வதற்காக எப்பொழுதும் த்யாநம் செய்கிறேனென்பது குறிப்பு.

नास्ति ज्ञानसमो मोदः नास्ति पित्रोः समः सखा ।
नास्त्याचार्यसमो देवः न वैराग्यसमं सुखम् ॥ १०५ ॥

ஞாநத்துக்கிடான ஆநந்தம் இல்லை. பெற்றோர்க்கு ஸமமான நண்பர்களில்லை. குருவுக்கு மிஞ்சின தெய்வமில்லை. பற்றற்ற நிலைக்கிடான ஸுகம் இல்லை.

कमलनिलयं कमनीयतनुं करुणाजलधिं करिराजगुरुम् ।
कलशाब्धिशयं कमलाक्षमहं करयुग्मशिरा कलये सततम् ॥ १०६ ॥

ஶ்ரீமந் நாராயணனை ஶிரஸில் அஞ்ஜலி வைத்து எப்பொழுதும் த்யாநிக்கிறேன் என்பது கருத்து. இங்கு க என்பது எட்டு இடங்களில் அமைந்துள்ளது சிறப்பு.

तनुत्राणं शिरस्त्राणं पादत्राणमथाऽपरे।
दधुः समे हि सर्वत्र स्वात्मत्राणं विसस्मरुः ॥ १०७ ॥

ஶரீரத்துக்குக் கவ்சம், தலைக்கு ஹெல்மெட், காலுக்குக் காலணி இப்படிப் பலரும் எங்கும் அங்கங்களைக் காப்பதற்காக அணிகின்றனர். இந்த ஆத்மாவைக் காப்பது பற்றி நினைப்பதே இல்லை.

अनन्तगुणसंपन्नं अनन्तशयनं विभुम्।
अनन्तलीलादिकृतं वन्दे अनन्तसुखप्रदम् ॥ १०८ ॥

இதில் நாலுபாதங்களிலும் அநந்த என்றிருப்பது சிறப்பு.

अपथप्रवृत्तिपरिहारभेषजं प्रमिलत्सुभक्तिकुसुमैः सुवासितम्।
निगमान्तसूरिवचनैर्विशोधितं मम मानसं हि शुभमद्य राजते ॥ १०९ ॥

யதிராஜஸப்ததியிலுள்ள பருஷாதிவாத என்கிற ஶ்லோகம் மனதில் தோன்றியது. இதையே திருப்பித் திருப்பிச் சொல்லிக் கொண்டிருந்த எனக்கு இதே வ்ருத்தத்தில் ஒரு ஶ்லோகம் பண்ண வேண்டும் என்று அவா பிறந்தது. இந்த ஶ்லோகம் வந்தது. தப்பு வழியில் செல்வதை விலக்கிக் கொள்ள மருந்து போன்றதும், நல்ல பக்தி என்னும் புஷ்பங்களோடு சேர்ந்து நல்ல வாஸனை உள்ளதும், ஸ்வாமி தேஶிகனுடைய க்ரந்தங்களால் ஶுத்தம் செய்யப் பட்டதுமான என் மனது இப்பொழுது நல்லபடி தெளிந்து செயல்படுகிறது.

भवद्गुणसुधाम्बोधौ भवसन्दीपिताङ्गकः।
मग्नोऽहं सर्वदा श्रीश ! भग्नाः मे पापराशयः ॥ ११० ॥

எம்பெருமானே ! தேவரீருடைய கல்யாண குணங்கள் என்கிற பாற்கடலில் நான் அமிழ்ந்து குளித்தேன். அதனால் ஸம்ஸார அக்நியினால் உடம்பெல்லாம் எரிச்சல் கொண்ட நான்

என்னுடைய மலை போன்ற பாபங்களெல்லாம் தீர்ந்து இப்போது ஸுகம் பெற்றேன்.

श्रीपतेः पदनखेन्दुनिस्सृता जाह्नवी त्रिपथगा पयस्विनी।
इन्दुशेखरकपर्दपावनं भूषणं समभवद्यदृच्छया॥ १११॥

எம்பெருமானின் சந்திரன் போன்ற திருவடி நகங்களிலிருந்து பெருகிய நீர் ஜாஹ்நவீ என்றும், த்ரிபதகா என்றும், பெயர் பெற்று பாபங்களை நீக்கிப்புனிதமாக்கும் ஶக்தி பெற்றது. இது ஶிவனுடைய ஜடை.

पत्या सहैव शोभेत शृङ्गारो न तु जारतः।
मधु स्वादु न रोचेत मद्यपात्रेण योगतः॥ ११२॥

ஒரு மனைவிக்குத் தன் கணவனுடன் கூட இருப்பது போற்றத் தக்கது. கள்ளக் கணவனால் ஏற்படுவது ரஸிக்கத்தக்கது அன்று. நல்ல இனிய தேனைக் கள் வைத்த பாத்திரத்தில் சேர்த்தால் அதன் சுவை எல்லாம் கெட்டு விடும்.

समानेऽपि कृते कार्ये भिन्नं फलमवाप्नुतः।
उत्तरीयं भवत्येकं अन्तरीयमथेतरत्॥ ११३॥

இருவர் ஒரே வகையான கார்யத்தைச் செய்த போதிலும் அவர்களுக்குக் கூலியோ மற்ற பாராட்டுதலோ மாறுபட்டதாகவே இருக்கும். வஸ்த்ரத்தில் இரண்டு வகை. அது செய்யும் வேலை உடலை மறைப்பது தான். ஆனால் இடையில் கட்டிய வஸ்த்ரம் மதிப்பில் குறைந்ததாகவும் மேல் வஸ்த்ரம் ஜபத்துக்கு ஏற்றதாகவும் அமைகிறது.

रामस्तु पादुके! राज्यं भेजातेऽन्यास्तु दूसराः।
राजानं स्नापयत्येकः महिषांस्तु तदेतरः॥ ११४॥

பாதுகை என்ற பெயர் பொது தான். ஆனால் ராமனுடைய பாதுகைகள் அரசாட்சி செய்தன. நம்முடைய பாதுகைகள் தூசியினால் ஸ்நாநம் செய்கின்றன ! ஒருவன் அரசனைக் குளிப்பாட்டுகிறான் - மற்றொருவன்

सदा सदाराधितपादपङ्कजं रमे रमे तेऽर्पितभारनिर्भरः।
कदा कदाराधनदुष्टमर्भकं वशे स्वशेषं कमले ! करिष्यसि ॥ ११५ ॥

தாயே ! மஹாலக்ஷ்மி ! உன்னை ஸாதுக்கள் எப்பொழுதும் அடி பணிந்து தொழுகின்றனர். உன் திருவடிகளில் என்னைக் காக்கும் பொறுப்பை ஒப்படைத்து விட்டேன். வேறு தெய்வங்களைப் போற்றி வணங்கிய குற்றமுள்ள உன் அடிமையான இந்தக் குழந்தையை எப்பொழுது நீ உன் வஶமாக்கி ஏற்றுக் கொள்ளப் போகிறாய் ?

வநத்தில் விடப்பட்ட ஸீதா தேவி

मिथ्यापवादचकितेन तिरस्कृतां तां
पत्या नृपेण विनिशाम्य वने सुदूरात्।
नीत्वा स्वमाश्रमपदं परिसान्त्व्य पश्चात्
वल्मीकसंभवमुनिः मुदितामकार्षीत् ॥ ११६ ॥

தன் மீது சிலரால் கூறப்பட்ட பழிக்குப் பயந்த அரசன் ஸ்ரீ ராமனால் காட்டில் கொண்டு விடப்பட்ட ஸீதையைப் பார்த்து வால்மீகி முநிவர் அவளைத் தன் ஆஶ்ரமத்துக்கு அழைத்துச் சென்று ஆறுதல் கூறி அவளை அங்கு ஸந்தோஷமாக இருக்கச் செய்தார்.

गुणहीनाः न शोभन्ते माला अपि च मानवाः।
यदि वा म्लानतां प्राप्ताः श्लाघ्यन्ते ते पुरा श्रिया ॥ ११७ ॥

குணமில்லாத மாலைக்கோ மனிதர்களுக்கோ மதிப்பில்லை. குணம் என்பதற்கு நார் என்றும் பொருள். வாடிய மாலையானாலும் மகிழம்பூ போன்ற மாலைகள் மதிக்கப்படுகின்றன. ஏனென்றால் அங்கு குணம் இருக்கிறது. இது ஒரு சமத்காரம்.

कौशिकाय मुनीन्द्राय नमः प्राचेतसाय च।
वैदेह्याः चक्रतुर्यौ हि विवाहं प्रसवादिकम् ॥ ११८ ॥

(अत्र चक्रतुः इति अन्तर्भावितणिजन्तं - कारयमासुः इति भावः)

விஶ்வாமித்ர முநிவருக்கும் வால்மீகிக்கும் எனது நமஸ்காரங்கள் உரித்தாகும். ஏனெனில் முதல்வர் ஸீதையின் விவாஹத்தையும், இரண்டாமவர் அவளுடைய ப்ரஸவம் முதலிய கார்யங்களையும் செய்து வைத்தனரன்றோ?

ஸ்ரீ நாராயணயதீந்த்ரர்

नमो नारायणाख्याय योगिनेऽद्भुतकर्मणे।
सिद्धान्तस्थापनार्थाय यतते यो दिवानिशम्॥ ११९॥

பரமஹம்ஸேத்யாதி ப்ரக்ருதம் ஸ்ரீமதழகியசிங்கர் லக்ஷ்மீந்ருஸிம்ஹ பாதுகா ஸேவக ஸ்ரீ வண்ஶடகோப ஸ்ரீமந் நாராயண யதீந்த்ர மஹாதேஶிகனுக்கு ப்ரணாமங்கள். ஏனெனில் இவர் ஸ்ரீ ராமாநுஜ ஸித்தாந்தத்தை ஸ்தாபிப்பதற்காக அல்லும் பகலும் ஓயாமல் உழைக்கின்றார்.

अश्रान्तभूभ्रमणपूर्वकशिष्यवर्ग-
तप्ताङ्कनप्रपदनप्रमुखैरुपायैः।
संस्थापयन्निह गुरूत्तमलक्ष्मणार्य-
सिद्धान्तमद्भुतयतिर्जयतात् गुरुर्नः॥ १२०॥

ஓயாமல் பலமுறை ஸேது முதல் ஹிமாசலம் வரை யாத்ரை செய்து ஸம்ஸ்காரம், ஶரணாகதி போன்றவைகளால் ஆங்காங்கு உள்ள ஶிஷ்யர்களை உஜ்ஜீவிக்கச் செய்து ஸ்ரீ ராமாநுஜ ஸித்தாந்தத்தை நிலை நாட்டி அத்புதம் செய்யும் இந்த யதிவரர் பல்லாண்டு பல்லாண்டுகள் வாழ்க.

महयामि हयग्रीवं महामायानिवृत्तये।
महायज्ञभुजं देवं महालक्ष्मीसखं हरिम्॥ १२१॥

பெரிய யாகங்களில் கொடுக்கப்படும் ஹவிர் பாகங்களை ஸ்வீகரித்து உகப்பவரும், பெரிய பிராட்டியாருடன் கூடியவருமான ஸ்ரீ ஹயக்ரீவரை இந்த ஸம்ஸார பந்தம் நீங்குவதற்காக நினைக்கிறேன்-நமஸ்கரிக்கிறேன்.

गृहद्वारे च सन्ध्यायां ऊरौ कृत्वा तु राक्षसम्।
दारयामासिथ नखैः त्वं नृसिंह! तदद्भुतम्॥ १२२॥

அப்பனே ! நரஸிம்ம ! அரக்கனை அரண்மனை வாயிற்படியில் ஸூர்யன் மறையும் வேளையில், தொடையின் மீது அவனை வைத்து உம்முடைய நகங்களால் கிழித்தீர். இது என்ன ஆச்சர்யம் !

शिशुर्वेत्ति न मञ्चं वा वीथ्याः प्रान्तमथाऽपि वा।
समं स्वपिति सुप्रीतः पीत्वा मातुः स्तनौ मुदा॥ १२३॥

தாயின் பாலைக் குடித்து உறங்கும் பச்சிளம் குழந்தைக்கு, தான் இருக்குமிடம் தெருவில் நடைபாதை என்றோ, பஞ்சணையோடு கூடிய கட்டிலென்றோ தெரியாது. தாயின் பாலேக் குடித்து விட்டு அது ஸுகமாக உறங்குகிறது.

विद्वानपि वृणोत्येव गुरुं न्यूनस्वलक्षणम्।
महाफलमभिप्रेप्सुः समर्थः सुसमीक्षया॥ १२४॥

ப்ரக்ருதம் ஸ்ரீமதழகியசிங்கர் ஆம்ரமங்களில் நான்காவதான ஆம்ரமத்தை ஸ்வீகரித்துக் கொண்டு ஆஸ்தாநத்தில் அமர்ந்த செய்தியைக் கேட்டு நான் எழுதி அனுப்பிய ம்லோகம் சொக்கனாவூர் ஸ்வாமி மூலம் திருச்செவி சாற்றும்படிச் செய்யப்பட்டது. பண்டிதர்களுக்கு ம்லோகம் விளங்கும்.

शुद्धवीरं महावीरं रघुवीरं नमाम्यहम्।
यस्य पत्नी च वाक्यञ्च बाणश्चैक इति प्रथा॥ १२५॥

இந்த ம்லோகம் ராமனைப் பற்றியது. ஒரு வார்த்தை, ஒரு பாணம், ஒரு மனைவி-என்பது ராமனிடமிருந்த சிறப்பு. அது இங்கு குறிக்கப்பட்டது.

त्वदितराः निखिलाः अपि देवताः सदितराः इति नाथ! दृढं ब्रुवे।
निहितमन्दरशैलमधोगतं त्वरितमुन्नयति स्म तदा नु कः?॥ १२६॥

எம்பெருமானே ! உன்னைத் தவிர மற்ற தெய்வங்கள் மேலானவரல்ல என்று உறுதியாகச் சொல்வேன். ஏனெனில் பாற்கடல் கடைவதற்கு மந்தரமலையைத் தேவர்களும் அஸுரர்களும் மத்து போல் தூக்கிப் போட்டனர். அது கீழே போய்க் கொண்டே இருந்தது. உன்னைத் தவிர வேறு யார் அதை மேலே தூக்கி நிறுத்தினர் ?

मन्दरमहीधरसमुन्नयनदक्षं सन्ततमुपासितुममुं स्मरत कृष्णम् ।
कच्छपवपुर्धरमदुष्टजनभोग्यं स्वच्छमनसां सुलभमच्छ हरिवेषम् ॥
१२७ ॥

மந்தர மலையைத் திறம்பட மேலே கொண்டு வந்தார். ஆமையாக அவதாரம் எடுத்தார். ஸாதுக்களுக்கு மிகவும் இன்பமானவர். தெளிந்த மனத்தினருக்கு எளிதில் கிடைப்பவர். தெள்ளிய சிங்கமாக உருவெடுத்தவரான எம்பெருமானை எப்பொழுதும் த்யாநம் செய்வோமாக.

सरांसि सरितस्तथा ह्रदजलाशयाश्चाऽपरे
भवन्ति मुखभेदतः खगभकादिसंरक्षकाः ।
किरातधरणीश्वरप्रभृतिभिर्भयेऽपि स्थिते
खगाः सुकृतिनः सदा सुखभरेण जेजीविताः ॥ १२८ ॥

குளங்கள், ஆறுகள், ஏரிகள், குட்டைகள் இன்னும் மற்றவை எல்லாம் ஒவ்வொரு வகையில் பறவைகளுக்கும் வாத்துக்களுக்கும் பாதுகாப்பாக உள்ளன. வேடர்கள், ராஜாக்கள் இவர்களால் வேட்டை என்கிற பெயரில் தங்களுக்கு ஆபத்து வரும் என்பது தெரிந்தும் அந்தப் பறவைகள் அதை மறந்து நிம்மதியாக வாழ்கின்றன.

सीतापते ! रघुपते ! जगतीपते ! त्वां जानन्ति दाशरथिमेव जनाः समे त्वाम् ।
काके प्रयुक्तपरमास्त्रमहाप्रभावं सेतुं च वीक्ष्य हरिमेव समर्थयामि ॥ १२९ ॥

ராமனின் பெருமையைப் பற்றியது இது. ராமா ! உன்னை எல்லோரும் தஶரத புத்ரன் என்னே நினைக்கிறார்கள். ஆனால்

நானோ காகத்தின் மீது நீ எய்த ப்ரம்ஹாஸ்த்ரத்தையும், நீ அமைத்த ஸேதுவையும் நினைக்கையில் நீ திருமாலே என்று உறுதியாகக் கூறுகிறேன்.

जानकी राघवं ब्रूते योषित् त्वामिति साहसात्।
मन्ये भजति मालिन्यं मतिः स्वार्थपरा यदि॥ १३०॥

ராமன் காட்டுக்குச் செல்லும் போது உடன் வர இருந்த ஸீதையை வேண்டாம் என்று தடுத்தார். அப்போது ஸீதை நீ ஒரு பெண். ஆனால் என் தந்தை உன்னைப் புருஷன் என்று எண்ணி விட்டார் என்று கடுமையாகப் பேசினாள். சுயநலம் என்பது குறுக்கிடும் பொழுது எல்லோருக்கும் மதி கெட்டு விடும் போல் இருக்கிறது.

अवाप्तसर्वकामस्य निरपेक्षजगत्पतेः।
दूर्वादिनोपचारः स्यात् ताम्बूलतुलसीमुखैः॥ १३१॥

எம்பெருமானைப் பெரியோர் அவாப்த ஸமஸ்த காமன் என்பர். न मे पार्थाऽस्ति कर्तव्यं त्रिषु लोकेषु किञ्चन । नाऽनवाप्तं अवाप्तव्यं' என்பது கீதா வாக்யம். அப்படிப்பட்ட எம்பெருமானுக்கு நாம் தங்கத் தட்டு, நெய்யில் பக்ஷணம் போன்றவை ஸமர்ப்பிக்கத் தேவையில்லை. நம் பக்தியை விளக்க அருகம்புல், வெற்றிலை, துளஸி இவைகளைக் கொண்டே உபசாரம் செய்யலாம். பக்தி தான் முக்யம் - பண்டங்களல்ல.

प्रिया जया तयोर्मध्ये भेदो मम न दृश्यते।
इयं भिषक् असौ वैद्या को भेदोऽत्र ? समे उभे॥ १३२॥

என்னுடைய பௌத்ரீ ப்ரியா. என் பேரன் மனைவியின் பெயர் ஜயா. இவர்களிருவருமே மருத்துவர்கள். இவர்களிடையே எந்த வேற்றுமையும் தெரியவில்லை. இது ஒரு நகைச்சுவை ஶ்லோகம்.

ग्रन्थः स एव महितः येन जनाः प्राप्नुयुः परां प्रीतिम्।
परभृतगणान् हि सुखयन् चूततरुर्भजति नाम रसाल इति॥ १३३॥

ஒரு நூல் நன்றாக இருக்கிறது என்று பல பேருக்கு உகப்பை ஏற்படுத்தினால் மட்டுமே அது போற்றப்படும். பாருங்கள் ! குயில் எல்லோரும் இன்புறத் தக்க நல்ல குரலுடன் கூவுகிறது. அந்தக் குரல், அதற்கு அமையக் காரணம் மாந்துளிர்களே ! ஆனால் அந்த மாமரத்துக்குப் பெருமை-ரஸாலம் என்று அதற்குப் பெயர்.

गुरुं प्रकाशयेत् धीमान् मन्त्रं यत्नेन गोपयेत्।
अप्रकाशप्रकाशाभ्यां क्षीयेते संपदायुषी ॥ १३४ ॥

எல்லோரும் தன் குருவை விளங்கப்படுத்த வேண்டும். மந்த்ரத்தைக் கட்டாயமாக மறைத்தே வைத்திருக்க வேண்டும். வெளிப்படையாகச் சொல்லலாகாது என்று கருத்து. இதற்கு மாறாக ஒருவன் குருவின் பெருமையைப் பேசாமலோ, மந்த்ரத்தை வெளிப்படையாகச் சொன்னாலோ, செல்வமும் ஆயுளும் குறைந்து போகும். இது ஸ்வாமி தேஶிகனின் வாக்கு, இரண்டு பலனும் ஒவ்வொன்றுக்குமே பொருந்தும்.

देवानामपि दुर्लभा इह दशाः सन्तीति मे सर्वदा
तुष्यामीव भृशं परं न तु पुनर्दृप्यामहं किञ्चन।
दोषश्लिष्टहृदः कलङ्कितमिति ब्रूयुर्यदीह क्वचित्
तुष्यादेव मधुद्रवाद्भुतपदः पद्मासहायो दृढम्॥ १३५ ॥

இது முன்னோரின் ஶ்லோகம். மிகவும் அத்புதமாக உள்ளது. வெள்ளைப் பரிமுக தேஶிகராய் என்கிற பாசுரத்தின் பொருள் இங்கு அப்படியே விளக்கப்பட்டது.

कृष्णोऽपि भक्तरक्तः तामसदूरोऽपि तामसीजातः।
पूर्णोऽप्यपूर्णकुक्षिः सर्वस्मिन् भक्षितेऽपि लोकेऽस्मिन्॥ १३६ ॥

அவர் க்ருஷ்ணன் என்கிற பெயரை உடையவர் தான். ஆனால் பக்தரிடம் சிவப்பானவர் (அன்புள்ளவர்) ! தமோகுணத்துக்கு அவர் வெகுதூரம். ஆனால் தாமஸியில் (நள்ளிரவில்) அவதரித்தவர். அவரே பூர்ணர் என்று வேதம் முதலியவை கூறுகின்றன. ஆனால் இந்த உலகங்கள்

அனைத்தையும் அவர் உண்டாலும் அவர் வயிறு நிரம்புவதில்லை. இது ஒரு நகைச்சுவையுடன் கூடிய ப்லோகம்.

माता पित्तं पिता वातः स्वसारो भगिनी तथा।
श्लेष्ममद्य हि मर्त्यानां श्वश्रूगेहं सुखायते॥ १३७॥

இக்காலத்தில் மனிதர்களுக்குத் தாய் பித்தமாகவும், தந்தை வாதமாகவும், தமக்கை, தம்பி ப்லேஷ்ம (கபம்)மாகவும் தோன்றுகிறது. மாமியார் வீடு ஸ்வர்கம் போல் காட்சி தருகிறது.

नैवाऽऽकृतिः नैव कुलं न विद्या नैवाऽम्बरं धवलवस्त्रसुकुङ्कुमाद्यैः।
भाग्यं पुराकृतसुकृत्तममेव पुंसां तस्मात्तदेव कुरु धर्मपथानुयातम्॥ १३८

அழகான உருவமோ, நல்ல குலமோ, நல்ல கல்வியோ, தூய வெண்ணிறமான வஸ்த்ரங்களோ, நல்ல வாஸனை பூசுவதோ பலனைத் தராது. முன் ஜந்மத்தில் செய்த , நல்வினைகளின் பயனான பாக்யமே மனிதர்களுக்கு நற்பயனைத் தரும். ஆகையால் நல்ல வழியில் நல்ல கார்யங்களை யாவரும் செய்ய வேண்டும்.

अहृदयं क्रियते यदि सत्क्रिया न खलु तज्जनता गणयेत् सखे!।
तदिह तत्कुरु कर्म हृदा मुदा लिपिगता स्वदते न हि शर्करा॥ १३९॥

அன்பனே ! மர்யாதை, தாநம் போன்றவை அந்தரங்க பரக்தி இன்றி விளம்பரத்துக்காகச் செய்யப்படுமானால் அதை மக்கள் பொதுவாகப் பாராட்ட மாட்டார்கள். ஆகையால் நல்ல கார்யங்களை மகிழ்ச்சியுடன் மனத்தோடு இணைந்து செய். சர்கரை என்று காகிதத்தில் எழுதிவிட்டால் அது இனிக்காது.

अद्वितीयमहं वन्दे विशिष्टाद्वैतदैवतम्।
लक्ष्मीसहचरं नाथं चराचरशरीरकम्॥ १४०॥

விஶிஷ்டாத்வைத ஸித்தாந்தப்படி தெய்வமென்று கருதப்படுபவரும் இந்த உலகத்தை எல்லாம் ஶரீரமாகக் கொண்டவரும் பிராட்டியுடன் கூடியவருமான தன்னிகரற்ற தெய்வத்தை வணங்குகிறேன்.

कः प्रियः ? श्रोत्रियो विद्वान्, का पत्नी ? पतिदेवता।
को देवः ? मानसं शुद्धं, कः, सखा ? समशुक्सुखः ॥ १४१ ॥

மதிப்புக்குரியவர் யார் ? வேத ஶாஸ்திரங்களில் பயின்றவர். யார் பத்நீ ? பதியைத் தெய்வமாகக் கருதுபவள். யார் உயர்ந்த தெய்வம் ? ஶுத்தமான மனமே. தோழன் யார் ? இன்ப துன்பங்களில் ஸமமாக இருப்பவன்.

கேள்வி - பதில்

किं सत्यं ? मितभाषितं, प्रीतिर्निष्कपटादरः ।
का मुक्तिर्भोगवैराग्यं कः शत्रुः ? परुषाऽतिवाक् ॥ १४२ ॥

ஸத்யம் என்பது என்ன ? அளவாகப் பேசுவதே. ப்ரீதி என்பது எது ? உள்ளொன்று வைத்துப் புறமொன்று பேசாதிருத்தல். மோக்ஷம் என்பது என்ன ? இஹலோக ஸுகங்களில் பற்றற்ற நிலை. பகைவன் எது ? கடுமையாகவும் அளவுக்கு அதிகமாகவும் பேசுதல்.

ज्ञानाचरणशिक्षासु पठीयान् गुरुरिष्यते।
शङ्खो दग्धोऽपि धवलः सन्तःसन्तो विपत्स्वपि ॥ १४३ ॥

குரு எனப்படுபவர் அறிவு, ஒழுக்கம், கற்பித்தல் இவற்றில் சிறந்தவராக இருத்தல் வேண்டும். சங்கு சுட்டாலும் வெண்மை தரும். ஸாதுக்கள் ஆபத்து வரும் நிலையிலும் தன் நிலை மாறமாட்டார்கள்.

கடும் வெய்யில்

उष्णरश्मिकरैस्तप्तान् जन्तूनालोक्य सर्वतः ।
निर्वेदं प्राप्तवान् मेघः वर्षतीवाऽश्रुबिन्दुकान् ॥ १४४ ॥

ஸூர்யனுடைய வெப்பத்தால் துடிக்கின்ற உயிரினங்களை எங்கும் கண்ட மேகம் வருத்தத்தினால் கண்ணீர் வடிப்பது போல் மழை பொழிகிறது.

கடும் குளிர்

शिशिरे शीतवातेन बाधितान् वीक्ष्य मानवान्।
मन्ये ज्योत्स्नापटेनेमान् छादयन् भाति चन्द्रमाः ॥ १४५ ॥

பனிக் காலத்தில் குளிர்க் காற்றினால் நடுங்கி ஒடுங்கி நிற்கும் மனிதர்களைக் கண்டு அன்பினால் சந்திரன் நிலா என்கிற போர்வையைக் கொண்டு அவர்களைப் போர்த்தி வருகிறான்.

निजहाररुचिं चन्द्रकलामिव सितत्विषम्।
सीताया दन्तपङ्क्तिः सा नितान्तधवला दृढम् ॥ १४६ ॥

(अत्र क्रियापदं वक्तुः सत्क्रियां कुर्महे सदा)

தன்னுடைய முத்து மாலை போன்ற நிறத்தைச் சந்திரன் கொண்டிருப்பது போல் நினைத்து அவனைக் கேலி செய்வது போல் ஸீதை சிரித்தாள். அந்த முத்துப் பற்கள் வரிசை ஒளி வீசிற்று. இங்கு நிஜஹார (नि+जहार) என்பது வினைச் சொல்.

சென்னையில் ஒரு மாமுநிவர்

सुब्बुकृष्णः सोमयज्वा साङ्गाध्यायी कविस्तथा।
सौम्यो भाति हि नः काले अग्निहोत्री दृढव्रतः ॥ १४७ ॥

ஸ்ரீ ஸுப்புக்ருஷ்ணன் என்கிற திருநாமம் உடைய ஒருவர் ஸோமயாகம் செய்தவர். வேதம், ஶாஸ்த்ரங்கள் கற்றவர். கவிதா ஶக்தியும் நிறைந்தவர். அமைதி தவழும் முகத்தினர். மேலும் தார்யாக்நி என்று சொல்லப்பட்ட அக்நிஹோத்ரத்தைத் திநமும் இரண்டு வேளைகளும் செய்து வருகிறார். இந்த வ்ரதத்திலிருந்து தவறுவதில்லை. இப்படிப்பட்டவர் நம் காலத்திலேயே இருக்கிறார் என்பது சென்னையின் பாக்யம்.

மற்றொரு பெரியவர்

वात्स्यश्रीशठकोपार्यः धीरो विद्वच्छिखामणिः।
भाति साङ्गश्रुतेर्वेत्ता मठे श्रीकार्यधूर्वहः ॥ १४८ ॥

ஸ்ரீ வத்ஸ கோத்ரத்திலவதரித்தவரும் ஸ்ரீ ஶடகோபாசார்யர் என்கிற திருநாமம் உள்ளவருமான ஒரு ஸ்வாமி மஹாதீரர். ஶாஸ்த்ரங்கள் எல்லாம் கற்றவர். வேதம் பயின்று கநம் என்கிறவரை அப்யாஸம் செய்தவர். இப்படிப்பட்டவர் ஸ்ரீ அஹோபில மடத்தில் ஸ்ரீ கார்யம் என்கிற பதவியில் அமர்ந்து நிர்வாஹம் செய்கிறார்.

यद्यदिच्छसि तत्सर्वं करिष्येऽहं तपोधन !।
गृह्णीष्व दास्यभावेन कटाक्षय च मां विभो ! ॥ १४९ ॥

ஜநகனைப் போன்ற நல்ல வேதாந்தியான அரசன் ஒரு முநிவரைப் பார்த்து ஸ்வாமிந் ! தேவரீருக்கு என்னவெல்லாம் தேவையோ அத்தனையும் செய்கிறேன், ஏற்றுக் கொள்ள வேண்டும். அடியேனை ஆட்கொள்ள வேண்டும் என்று கேட்கிறான்.

रघुकुलतिलकं त्वां जानकीप्राणनाथं मुनिवरमखरक्षाबद्धकक्षं नितान्तम्।
वरमुनिवनितायाः दोषनाशं पवित्रं दशमुखमुखगुच्छच्छेदकारं नमामः ॥
१५० ॥

ஸ்ரீ ராமா ! நீ ரகுகுலத்துக்கே திலகம். ஜாநகிக்கு ப்ராணநாயகன். கௌஶிகருடைய யாகத்தைக் காப்பதற்காக வரிந்து கட்டிக் கொண்டாய். கௌதமரின் பத்நி பாபங்களைப் போக்கிய புனிதன். ராவணனுடைய பத்துத் தலைகளையும் கொத்தென உதிர்த்தவன், உன்னை வணங்குகிறோம்.

सोऽयं पश्चात् कनकहरिणीभूय नः कार्यकारी-
त्येवं मत्वा मुनिवरमुखे दुष्टमारीचमद्धा।
वायोरस्रात् विघटितममुं पातयामासिथाऽब्धौ
तेन ब्रह्मन्नहह ! सहसा प्रस्फुटं ते परत्वम् ॥ १५१ ॥

கௌசிகரின் யாகத்தைக் கெடுக்க வந்த இருவரில் ஒருவனை மாய்த்து மற்றவனான மாரீசனை வாயு அஸ்திரத்தினால் கடலில் விழும்படி வீழ்த்தினாய். அதற்குக் காரணம் என்ன என்பதை இங்கு ஆசிரியர் விளக்குகிறார். இவன் நம் கார்யத்துக்குத் தங்கமானாக வந்து உதவி செய்யப் போகிறான் என்று நினைத்தே அப்படிச் செய்தாய். நீ ஸாக்ஷாத் பரம் பொருளே. உன் பரத்வம் நன்ருக வெளிப்பட்டது என்கிறார்.

पुरी लङ्का दूरे जलधिरभवत् दुस्तरतमः
कपीनां सेना सा दशवदन एषोऽतिबलवान्।
तथाप्यद्धा रामो विजयमभजत् सेतु पथतः
क्रियासिद्धिः सत्वे भवति महतां नोऽपकरणे॥ १५२॥

லங்காபுரீ வெகு தூரத்தில் உள்ளது. இடையிலிருக்கும் கடலோ தாண்டுதற்கரியது. ஸேனையோ குரங்குகள் நிறைந்தது. எதிரியான ராவணன் வரபலம், புஜபலம் மிகுந்தவன். ஆயினும் ராமன் அணை கட்டி வெற்றி பெற்றான். மஹான்கள் வெற்றிபெறுவது அவர்களின் திறமை, தீரம் இவற்றைச் சார்ந்தது. பக்கபலத்தினால் அல்ல.

पुरा पुरारातिमुखान् विजिग्ये सतां सदानन्दथुमातनोत् यः।
रमा सुरम्यावसथस्थलोराः कृपामपारां मयि संविदध्यात्॥ १५३॥

முன்பு த்ரிபுரம் எரித்தவன் முதலியவரை வென்றவர், ஸாதுக்களுக்கு நிலையான மகிழ்ச்சியைத் தந்தவர், பிராட்டிக்கு அழகிய இருப்பிடமாக அமைந்த திருமார்பை உடையர் யாரோ அவர் என் மீது எல்லையற்ற கருணையைச் செய்வாராக.

पुरा मषी पृथग्भूता लेखनीत्वपरा स्थिता।
अद्यत्वे तु मषीयुक्तलेखनी समुपस्थिता॥ १५४॥

முற்காலத்தில் மசி (Ink) தனியாகவும் எழுதுகோல் தனியாகவும் இருந்தது. இக்காலத்திலோ மசியோடு கூடிய எழுதுகோல் வந்து விட்டது. இது காலத்தின் மாற்றம்.

शठाः भजन्ति साधुत्वं यत्नेन परिवर्धिताः ।
पश्य शस्त्रं च शास्त्रं च किंचिद्यत्नेन बुद्धिमत् ॥ १५५ ॥

நாம் முயற்சி எடுத்து நல்ல முறையில் வளர்த்தால் துஷ்டர்கள் கூட ஸாதுக்களாகி விடுவர். ஶஸ்த்ரம் (ஆயுதம்) இருக்கிறது. இதையே கொஞ்சம் வளர்த்தால் (நீட்டினால்) அது ஶாஸ்த்ரமாகிறது. அதனால் நன்மையே பிறக்கும்.

நகைச்சுவை

क्षुधानिवृत्तये ब्रूहि भिषग्वर्य ! सुभेषजम् ।
नद्याः सुसिकताः खाद कदाऽपि न भवेत्पुनः ! ॥ १५६ ॥

ஒருவன் வைத்தியரை அண்டி ஐயா! இந்தப் பசி என்பது இல்லாமலிருக்க மருந்து சொல்லுங்கள் என்று கேட்டான். அவர் கூறியது - ஆற்றில் மிகவும் வெண்மையான வண்டல் மணல்கள் உள்ளனவே, அவைகளைச் சாப்பிடு. இனி பசியே உனக்கு வராது! என்றார்.

संसारदुःखजलधेः सुविचित्रोर्मिमालिनः ।
सुदृढोऽयं हरिः पोतः निर्व्यपेक्षः सुपारगः ॥ १५७ ॥

இந்த ஸம்ஸாரமென்கிற துக்கக்கடல் பலவகையான அலைகள் கொண்டது. இதிலிருந்து ஸுகமாகக் கரையைச் சேர்க்க வல்ல உறுதியான கப்பல் **ஸ்ரீ ஹரி**யே.

नव पञ्च च वर्षाणि वनवासे दृढव्रतः ।
नवो नवो भवेदेवं श्रुतिवाक्यमसार्थयत् ॥ १५८ ॥

14 ஆண்டுகள் வநவாஸம் செய்வதாக உறுதியான வ்ரதம் எடுத்துக் கொண்டார் ராமன். அவர் அங்கு கவலையின்றி இன்பமாகவே காட்சியளித்தார். வேதம் சொல்லும் வாக்யத்தைத் தன் வாழ்க்கை மூலம் நமக்குத் தெளிவாக்கினார். **(நவோ நவோ பவதி ஜாயமாந: என்பது** வேதம்).

सन्ध्याहीनाशुचेर्लोके ललाटेऽपुण्ड्रधारिणः ।
संप्रदायैः किमाचारैः ? किं गोत्रेण ? कुलेन वा ? ॥ १५९ ॥

ஸந்தி கிடையாது, நெற்றியில் எந்தச் சிந்நமும் கிடையாது. அவன் உருவமே தூய்மையற்றது. இப்படிப்பட்டவனுக்கு ஶாஸ்த்ரம், ஸம்ப்ரதாயம், ஆசாரம் குலம், கோத்ரம் இவற்றைப் பற்றி என்ன கவலை ?

मारः कुमारः सुकुमारः इत्थं वितर्कितस्त्वं बहुधा कवीन्द्रैः ।
सुविभ्रमारक्षकदिव्यधामन् ! पुनीहि मां पूतनयाप्यधृष्यः ॥ १६० ॥

எம்பெருமானே ! உன்னைக் கவிகள் மாரன், குமாரன், ஸுகுமாரன் என்றெல்லாம் பலவிதமாக வர்ணித்தனர். பூதனை எனும் அரக்கியினுல் கூட மாய்க்க முடியாத எம்பெருமானே ! அழகிய லீலைகளையும் ஸ்ரீ வைகுண்டம் என்னும் திவ்யலோகத்தை உடைய கண்ணு ! என்னைப் புனிதனுக்கு.

किं यमैरनियमैर्नियमैर्वा ? किं तपोभिरथ तीर्थगतैर्वा ? ।
खिद्यतां बहुकुटुम्बिसतां ये पूजनं विदधते न यथावत् ॥ १६१ ॥

ஸாதுக்களுக்கு முறைப்படி உபசாரங்களைச் செய்யாமல் பெரிய குடும்பத்துடன் வருந்துபவர்களுக்கு யமம், நியமம், தவம் புண்ய தீர்த்த ஸ்நாநம் இவற்றால் என்ன பயன் ?

सद्भिः सङ्गं कारयस्व प्रभो ! मे धृष्टैः सङ्गं दूरय श्रीश ! सद्यः ।
यत्र त्वां च त्वत्कथाश्चापि लीलाः ब्रूयां भूयः श्रावितो वा भवेयम् ॥ १६२

ஸ்ரீமந் நாராயண ! ஸாதுக்களின் சேர்க்கையை எனக்குக் கொடு. ஸ்வாமிந் ! துஷ்டர்களுடன் சேர்க்கையில்லாதபடி என்னை விலக்கி வை. உன்னையும் உன் சரித்ரங்களையும் லீலைகளையும் எங்கு நான் கேட்பேனோ, எங்கு நான் சொல்வேனோ, அந்த இடத்தில் என்னை அமர்த்து.

போர்க்கள வர்ணனை

चमूस्त्रपातो विनिवृत्तपृष्ठा धावत्यलं तीव्रमहास्त्रपातात् ।
रुषा च योधाः परुषाणि वाक्यान्याहुः पतङ्गा इव कङ्कमुख्याः ॥ १६३ ॥

பயங்கரமான அஸ்த்ரங்களைக் கண்டு பயந்து ஸேனை வெட்கத்துடன் புறமுதுகு காட்டி ஓடுகிறது. வீரர்கள் கழுகு முதலிய பறவைகளைப் போல் ரோஷத்தில் கடும் சொற்களை வீசுகிறார்கள்.

चमूस्त्रपातः - चमू + त्रपातः என்று பதம் பிரிக்க வேண்டும்.

गोदावर्याख्यया ख्यातां आपगां प्रणमाम्यहम्।
सभार्यो राघवो यस्यां विजहार बहून् ऋतून्॥ १६४॥

ஸ்ரீ ராமன், மனைவி ஸீதையுடன் பல மாதங்கள் எங்கு தங்கிக் களிப்புடன் இருந்தாரோ அப்படிப்பட்ட கோதாவரி என்கிற பெருமை வாய்ந்த அந்த நதிக்கு நமஸ்காரம்.

रथानां च गजानां च तुरगाणां पदातिनाम्।
मध्ये योऽवर्तत रथी कृष्णेनैव स रक्षितः॥ १६५॥

தேர்கள், யானைகள், குதிரைகள், கால் நடை வீரர்கள், இவற்றின் இடையே எந்த ஒரு மஹா வீரன் இருந்தானோ அவன் க்ருஷ்ணனாலேயே காப்பாற்றப்பட்டான்.

பெரியோரின் பெருமை

इन्द्रगोपाः प्रकाशन्तां कोटिशो वा परार्धशः।
चन्द्रसाम्यं वहेयुर्वा दिवा तेषां तु का गतिः ?॥ १६६॥

கோடிக் கணக்கிலும், பரார்த்தம் (எண்ணிக்கையின் முடிவு) என்கிற கணக்கிலும் மின்மினிப் பூச்சிகள் ஒளி வீசிப் பறக்கட்டும். ஒரு சந்த்ரனுக்கு நிகரமாகுமா ? பகலில் தான் அதன் நிலை என்ன ?

ஶபரியின் பெருமை

या ब्रह्मर्षिगणान्तवासरसिका शुश्रूषणे चाऽऽस्थिता
या रामस्य कृते फलानि सुरुचिराण्याहृत्य चोपाहरत्।
या तस्यैव पुरोऽग्निसात् हुतवती स्वात्मानमत्यादरात्
मुक्तिं चाऽभजदुत्तमां गतिमहो तस्यै शबर्यै नमः॥ १६७॥

ஶபரீ என்பவள் கீழ்க்குடியில் பிறந்தவளாயினும் பல பல ப்ரம்ம ருஷிகளுக்கு அன்புடன் பணிவிடை செய்தாள். மிகவும் சுவையான பல பழங்களைச் சேகரித்து ஸ்ரீ ராமனுக்கு ஸமர்ப்பித்தாள். மேலும் அக்நியை மூட்டி வலம் வந்து ராமனைப் பார்த்தவாறே அதில் தீக்குளித்தாள். உத்தமமான கதியைப் பெற்றாள். அந்த ஶபரிக்கு நமஸ்காரம். குறிப்பு:- இது எனக்கு மிகவும் பிடித்தது. பண்டிதர்களும் பாராட்டுவர்.

वन्दिषीय मम देवतां परां मन्दिरं च मधुरं ममाऽद्भुतम्।
सन्दुदोह करुणां मयि स्थिरां सन्धिनोमि तिलतर्पणैरिमाम्॥ १६८॥

மாத்ருதேவோ பவ - யாரொருத்தி எனக்கு முதலில் ஆச்சர்யமான இருப்பிடமாக அமைந்தாளோ, என் மீது நிலையான அன்பைப் பொழிந்தாளோ, என்னுடைய மேலான தெய்வமான அந்தத் தாய் எனும் தெய்வத்தை எப்பொழுதும் நான் வணங்கக் கடவேன். அவளுக்கு எள்ளும் தீர்த்தமும் விட்டு மகிழ்விப்பேன். இந்த வ்ருத்தம் மிக அத்புதமானது.

भवान् भवानीपतिमेव वा गतिं हरिं सदा वा नृहरिं परं प्रभुम्।
विधिं तथा वा विदधातुमानसे कदापि मा भूत् शपथेन नास्तिकः॥१६९

தேவரீர் பவாநிக்குக் கணவனாக இருக்கட்டும் ஆனால் எப்பொழுதும் உயர்ந்த தெய்வமாக ஸ்ரீமந் நாராயணனே கதி என்றும் நினைப்பவராக இருப்பினும் சரி, ப்ரஹ்மனை மனத்தில் கொண்டிருந்தாலும் சரி - ஸத்யம் செய்து சொல்கிறேன், நாஸ்திகனாக மட்டும் இல்லை. குறிப்பு:- ஈஶ்வரன் சொன்னது:- ஸ்ரீ ராம ராம ராமேதி ரமே ராமே மநோரமே । அவர் எப்போதும் திருமாலையே த்யாநம் செய்பவராகையால் இதுவே நமக்கெல்லாம் வழிகாட்டி.

गुरुस्तरुः समानौ द्वौ शान्तौ सौख्यप्रदायिनौ।
ज्ञानच्छायाप्रदातारौ नैव प्रतिफलार्थिनौ॥ १७०॥

குருவும் மரமும் இருவரும் ஸமமே. ஶாந்தியையும் ஸௌக்யத்தையும் தருபவர்கள். ஞாநத்தையும் நிழலையும் தருபவர்கள். ப்ரதிபலனை எதிர்பாராதவர்கள்.

महाफलप्रदातारौ प्रीतौ पादप्रपूजया।
जनितारौ स्वसदृशान् शाखास्कन्धोपबृंहितौ ॥ १७१ ॥

Note:अत्र 'स्वसदृशान्' इति द्वितीयैव साधुः। कृत् प्रत्यये त्रिन् त्रिच् इति द्वौ स्तः। 'त्रिन्' प्रयोगे षष्ठी भवति। 'त्रिच्' प्रयोगे द्वितीयैव। 'वक्त्री वेदान्' इति वेदान्तदेशिकस्य प्रयोगः इति विवेकः।

பெரிய பயனைத் தருபவர். பாதங்களில் வணங்குவதன் மூலம் மகிழ்ச்சியடைபவர். தன்னைப் போன்றவர்களை உற்பத்தி செய்பவர்கள். சிறு கிளைகள் பெருங்கிளைகள் இவற்றால் விரிவு அடைந்தவர்கள்.

प्रहेलिका

नगराज शिरो भाति यत्र पूः सा तिरोहिता।
अलङ्काराश्च बहवः यस्तद्वेद स बुद्धिमान् ॥ १७२ ॥
नभः सतिमिरं भाति यत्र मीनस्तिरोहितः।
पयोधाविव गम्भीरः यस्तं वेद स बुद्धिमान्।
गृहीष्ये तं मतिवरं किंचिद्वृद्धां च मातरम् ॥ १७३ ॥

ப்ரஹேலிகா என்பது ஒரு வகையான சமத்காரம். மனதுக்கு வேலை கொடுப்பது. தமிழில் புதிர் போன்றது.

1. இங்கு நகராஜ ஶிர: என்கிற ஶ்லோகத்தில் 'மலை உச்சியில் ஒரு பட்டணம் மறைந்திருக்கிறது. அங்கு பல அலங்காரங்களும் உள்ளன. இங்கு இதை யார் புரிந்து கொள்கிறார்களோ அவரை நான் சிறிது வளர்ந்த மாதாவாக்கிக் கொள்வேன்' என்பது மேலெழுந்த வாரியான பொருள். மற்றொரு பொருள் – பட்டணம் என்ற சொல் நகர என்று மறைந்திருப்பதும், அலங்கார என்பதில் லங்கா என்பது மறைந்திருப்பதும் பொருட்கள். சிறிது வளர்ந்த மாதா என்பது

ஜாமாதா-மாப்பிள்ளை ஆக்கிக் கொள்வேன். மறைந்த பொருளைச் சொல்பவனுக்கு என் பெண்ணைப் பரிசாகக் கொடுப்பேன் என்பது கருத்து.

2. வானம் இருள் நிறைந்து காணப்படுகிறது. அங்கு ஒரு மீன் மறைந்திருக்கிறது. அது என்ன ? இது **கேள்வி. திமிர** என்பதில் **திமி** என்பது ஒரு வகையான மீனைக் குறிக்கும். இதை முழுங்கக் கூடியது மற்றொரு மீன் உண்டு **(திமிங்கிலம்).** இது தான் மறைந்த மீன்.

இது என் சொந்தமான **ப்ரஹேலிகா** - புதிராகும். ஸம்ஸ்க்ருத வித்வான்கள் ரஸிக்க வேண்டும்.

मुकुन्द ! कुन्ददन्तं त्वां गोविन्दं च समे विदुः ।
अहं तु मकरन्दं वा(अ)रविन्दं वा मुखे ब्रुवे ॥ १७४ ॥

என் கொள்பேரனுக்கு முகுந்தன் என்பது பெயர். ஒரு நாள் அவனைப் பார்த்த போது கண்ணனை வர்ணிக்க வேண்டுமெனத் தோன்றிற்று. ஶ்லோகம் மேலே கண்டவாறு பிறந்தது.

एको वटुर्दर्भतिलाग्रपाणिः वनं वनैस्सिञ्चति चूतपादपान् ।
आम्राश्च सिक्ताः पितरश्च तृप्ताः एका क्रिया द्व्यर्थकरी बभूव ॥

ஓர் அமாவாஸை திநம் ப்ரம்மசாரி ஒருவன் தர்பங்களேயும் எள்ளேயும் எடுத்துக் கொண்டு தன் வீட்டுப் புழக்கடையில் இருந்த மாஞ்செடியின் அடியில் தர்பணம் செய்தான். ஒரு கார்யம் செய்தால் இரண்டு பலன்கள் கிடைக்க வேண்டும். நாம் செய்யும் பித்ரு தர்பணத்தை மாஞ்செடியின் அடியில் செய்ததால் தர்பணமும் ஆயிற்று, செடிக்கும் தண்ணீர் ஊற்றியபடி ஆயிற்று. இது பெரியோர் சொன்ன பழமொழி. இதற்கு நான் எழுதிய சில உதாரணங்கள் பின்வருமாறு-

a) **बन्धुत्वरक्षाऽऽलयदर्शनं च**

b) **बन्धुत्वरक्षा लिखिता परीक्षा**

c) कार्यालयार्थो हरिपादसेवा

d) कार्यालयार्थो धनवद्दिदृक्षा

e) श्वशुरगृहगतिः हरेर्दिदृक्षा

छादयन्तु रविं मेघाः शतशोऽथ सहस्रशः।
सर्वोन्नतस्य का हानिः ग्रहाधीशस्य भास्वतः ॥ १७६ ॥

இந்த ஶ்லோகம் பல வருடங்களுக்கு முன்பு பிறந்தது. இதனுடன் பிறந்த மற்ற குழந்தைகளின் கதி என்ன ? எனக்கே தெரியவில்லை. ஆகாயத்தில் மேகங்கள் நூற்றுக் கணக்கில், ஆயிரக் கணக்கில் ஸூர்யனை மறைக்கலாம். அதனால் மிகமிக உயரத்திலிருக்கும் ஸூர்யனுக்கு என்ன குறை ? இது அந்யாபதேஶம். மஹான்களைச் சிலர் அவமதித்துப் பேசுவர். அதனால் அவர்களுடைய மதிப்பு குறையாது என்கிற கருத்து இங்கு தொக்கி நிற்கிறது.

विप्रा अधीतिनो वेदे सर्वे हुतहुताशनाः।
सर्वे शान्तिप्रपूर्णाश्च सन्तु लोभविवर्जिताः ॥ १७७ ॥

ப்ராம்மணர்களுக்கு மேலே சொன்னபடி ப்ரார்த்தனை.

பழமொழிகளுக்கு மொழி பெயர்ப்பு.

1. தெள்ளிய ஆலின் சிறு பழத்தொரு விதை

शिशुमीनाक्षितोऽत्यन्तं सूक्ष्मं न्यग्रोधशाखिनः।
बीजं तथापि छायादं ससैन्यस्य महीपतेः ॥

2. நாளைய பலாப்பழத்தை விட இன்றைய களாப்பழம் மேல்

श्वो भाविनः पनसफलात् यत्तत् कच्छाफलं श्रेष्ठम्।

3. கெடுவான் கேடு நினைப்பான்.

यो वाञ्छति परद्रोहं स विनश्येत् न संशयः।

4. காதற்ற ஊசியும் வாராது காண் அக்கடை வழிக்கே

नोपयुक्ताऽन्त्ययात्रायां निर्द्वारापि च सूचिका।

5. கற்றதினாலான பயன் என் கொல் வாளறிவாளன் நற்றான் தொழாரெனின்

किं तेन मनुजेनाऽत्र विद्यासंपन्नमेधसा।

यद्यसौ भगवत्पादतल्लजौ न समाश्रयेत्॥

6. தும்பை விடுத்து வாலைப் பிடித்தாற் போல்

घ्राणरज्जुं समुत्सृज्य वालधेर्ग्रहणं यथा।

7. கீழோராயினும் தாழ உரை.

नीचा यद्यपि मन्दं वद

8. கிட்டாதாயின் வெட்டென மற

दुर्लभं यदि ते तत् स्यात् सद्यो विस्मर तत् सखे !।

9. யாழினிது குழலினிது என்பர் - தம் மக்கள் மழலைச் சொல் கேளாதவர்.

यैर्न श्रुता कलावाणी स्वार्भकानां सुदुर्भगैः।

ते ब्रूयुः मुरलीं वीणां मधुरां च मनोहराम्॥

10. ஆண்டாண்டு தோறும் அழுது புரண்டாலும் மாண்டார் வருவரோ மாநிலத்தே.

बहु विप्रलप्य लुठनेऽपि वत्सरान् न हि यात एति पुनरत्र भूतले।

11. ஒரு நாளைக்கு ஒழியென்றால் ஒழியாய் - இரு நாளைக்கு ஏலென்றால் ஏலாய், மட வயிரே ! உன்னுடன் வாழ்வது அரிது.

दिनमेकं विरामं च कुक्षे न कुरुते भवान्।

दिनद्वयाय चाऽऽहारं स्वीकरोति न दुर्मते !॥

12. எண்ணும் எழுத்தும் கண்ணெனத்தகும்.

गणना विद्या गण्यते नयनम्।

13. கற்கை நன்றே கற்கை நன்றே - பிச்சை புகினும் கற்கை நன்றே.

विद्या संयक् विद्या संयक् भिक्षां अट वा विद्या संयक् ।

14. எட்டி பழுத்தாலென்ன ? ஈயாதார் வாழ்ந்தாலென்ன ?

पक्वैर्वा सखि ! किन्नु भो विषफलैः दानेन हीनैर्जनैः ?

15. பருவத்தாலன்றிப்பழா

विना ऋतुं न पच्यन्ते ।

16. புலி பசித்தாலும் புல் தின்னாது.

क्षुधितोऽपि हि शार्दूलो क्षुद्रं नैवात्ति शाद्वलम् ।

17. கானமயிலாடக் கண்டிருந்த வான்கோழி

नृत्यन्तं केकिनं दृष्ट्वा वने तद्भावभावितः ।
अग्निभक्षोऽण्डजो नृत्येत् तादृशी कुकवेः कृतिः ॥

முடிவுரை

इत्थं चिरेण कालेन कृतानीमानि खण्डशः ।
पद्यानि भगवत्प्रीत्यै श्रियःपत्ये समर्पये ॥

आमध्यरात्रं क्रीडित्वा द्वन्द्वं तत् प्रीतिमाययौ ।
मेघहेमसमच्छायं शेषपर्यङ्कभूषणम् ॥

पत्रपुष्पोपहारेण प्रीयते भगवान् सदा ।
कवितोद्यानसंज्ञेन काव्येनाऽपि स तृप्यतु ॥

प्रीयतां भगवान्

वासुदेवः

सर्वात्मकः

ஶுபம்

எம்பெருமான் ஒவ்வொரு காலத்தில் ஒவ்வொருவரைக் கொண்டு ஒவ்வொரு கார்யத்தைச் செய்வித்து மகிழ்கிறான். **லோகவத்து லீலாகைவல்யம் என்று ப்ரம்ஹஸூத்ரத்தில்** பகவான் வ்யாஸர் அருளிச் செய்தார். இந்த உலகங்களை எல்லாம் படைப்பதும் காப்பதும் அழிப்பதும் கூட அவருக்கு விளையாட்டே என்றார். ஆகையால் என்னைக் கொண்டு இந்தக் கவிதோத்யாநத்தைச் செய்வித்து அந்த பகவான் மகிழ்ச்சி அடைகிறார் என்றால் அது என் பேச்சல்ல, தவறல்ல.

இதைத் தொடர்ந்து முன்னோர்களின் காவ்யங்கள் ஸ்தோத்ரங்களிலிருந்து சிற்சில பாகங்களை உங்களுக்கு விருந்தாக்குகிறேன்.

1. ஆதி ஶங்கர பகவத்பாதர்
2. ஸ்ரீ ஹர்ஷன் - நைஷதம்
3. பாரவி- கிராதார்ஜுநீயம்
4. பவபூதி-உத்தரராமசரிதம்
5. மாகன்-ஶிஶுபாலவதம்
6. அப்பய்யதீக்ஷிதர்
7. அரசாணிபாலை வேங்கடாத்வரி-ஹஸ்திகிரிசம்பு-விஶ்வ குணாதர்ஶம்
8. நீலகண்ட தீக்ஷிதர்-நீலகண்ட விஜய சம்பு
9. சேட்டலூர் ஸ்ரீநிவாஸமூர்த்தி ஸ்வாமி வேதாந்தாசார்ய விஜயநாடகம்
10. V.S.ஸுந்தரபாஹு I.A.S. Retd.-ரஜகஸ்ய பாக்யம்
11. வேதாந்த தேஶிகர்

ஆதிஶங்கர பகவத்பாதர்

ஸ்ரீ ஆதிஶங்கர பகவத் பாதரின் திருநாமத்தை அறியாதவர் யாரும் இலர். அவர் ப்ரம்மசாரியாக இருந்த போது கங்கையில் ஸ்நாநம் செய்து கொண்டிருக்கையில் முதலை ஒன்று அவர் காலைப் பற்றிவிட்டதென்றும் உடனே

அவர் அப்பொழுதே உலகப்பற்றை அறுத்து ஸந்யாஸம் செய்து கொள்ளத் தீர்மானித்தார் என்றும் அதனால் வேறு பிறவி போல் ஆகிவிட்டபடியால் அந்த முதலை காலை விட்டு விட்டதென்றும் சொல்லக் கேட்டிருக்கிறேன்.

ஒரு ஸமயம் இவர் கூடு விட்டுக் கூடு பாய்தல் என்கிற தம்மிடமிருந்த ஶக்தியைப் பயன்படுத்தி உடலைப் பாதுகாக்கும்படிச் சீடர்களிடம் சொன்னதாகவும், ஆனால் அரசனின் ஆட்கள் வந்து அந்த உடலுக்குத் தீ வைத்ததாகவும் இதை உணர்ந்த ஸ்ரீ ஶங்கரர் பழைய உடலுக்குள்ளேயே வந்து அந்தத் தீயை அணைக்க **ஸ்ரீ லக்ஷ்மீ ந்ருஸிம்மனை** ப்ரார்த்தித்து **கராவலம்ப ஸ்தோத்ரம்** செய்தார் என்றும் கூறப்படுகிறது. இவருடைய பெருமை அபாரம், அவரைப் பற்றிய **த்யாந ஶ்லோகம்** ஒன்றே போதும். அது பின் வருமாறு-

श्रुति स्मृति पुराणानां आलयं करुणालयम्।
नमामि भगवत्पादशङ्करं लोकशंकरम्॥

श्री लक्ष्मीनृसिंह करावलम्ब स्तोत्रम्

श्रीमत्पयोनिधिनिकेतन ! चक्रपाणे !
भोगीन्द्रभोगमणिरञ्जित ! पुण्यमूर्ते !।
योगीश ! शाश्वत ! शरण्य ! भवाब्धिपोत !
लक्ष्मीनृसिंह ! मम देहि करावलम्बम् ॥ १ ॥

ब्रह्मेन्द्ररुद्रमरुदर्ककिरीटकोटि-
सङ्घट्टिताङ्घ्रिकमलामलकान्तिकान्त !
लक्ष्मीलसत्कुचसरोरुहराजहंस !
लक्ष्मीनृसिंह ! मम देहि करावलम्बम् ॥ २ ॥

संसारघोरगहने चरतो मुरारे !
मारोग्रभीकरमृगप्रवरार्दितस्य।
आर्तस्य मत्सरनिदाघनिपीडितस्य
लक्ष्मीनृसिंह ! मम देहि करावलम्बम् ॥ ३ ॥

संसारकूपमतिघोरमगाधमूलं
संप्राप्य दुःखशतसर्पसमाकुलस्य।
दीनस्य देव ! कृपया पदमागतस्य
लक्ष्मीनृसिंह ! मम देहि करावलम्बम् ॥ ४ ॥

संसारवृक्षमघबीजमनन्तकर्म-
शाखाशतं करणपत्रमनङ्गपुष्पम्।
आरुह्य दुःखफलिनं पततो दयालो !
लक्ष्मीनृसिंह ! मम देहि करावलम्बम् ॥ ५ ॥

संसारसागरविशालकरालकाल-
नक्रग्रहग्रसितनिग्रहविग्रहस्य।
व्यग्रस्य रागनिचयोर्मिनिपीडितस्य
लक्ष्मीनृसिंह ! मम देहि करावलम्बम् ॥ ६ ॥

संसार सर्पविषदग्ध महोग्रतीव्र-
दंष्ट्राग्रकोटि परिदष्ट विनष्टमूर्ते !।
नागारिवाहन ! सुधाब्धिनिवास ! शौरे !
लक्ष्मीनृसिंह ! मम देहि करावलम्बम् ॥ ७ ॥

संसारदावदहनातुर भीकरोरु-
ज्वालावलीभिरतिदग्ध तनूरुहस्य।
त्वत्पादपद्म सरसी शरणागतस्य
लक्ष्मीनृसिंह ! मम देहि करावलम्बम् ॥ ८ ॥

संसारजालपतितस्य जगन्निवास !
सर्वेन्द्रियार्तबडिशार्थझषोपमस्य।
प्रोत्खण्डितप्रचुरतालुकमस्तकस्य
लक्ष्मीनृसिंह ! मम देहि करावलम्बम् ॥ ९ ॥

संसार भीकरकरीन्द्रकराभिघात-
निष्पिष्टमर्मवपुषः सकलार्तिनाश ! ।
प्राणप्रयाणभवभीतिसमाकुलस्य
लक्ष्मीनृसिंह ! मम देहि करावलम्बम् ॥ १० ॥

बद्ध्वा गले यमभटा बहु तर्जयन्तः
कर्षन्ति यत्र भवपाशशतैर्युतं माम् ।
एकाकिनं परवशं चकितं दयालो !
लक्ष्मीनृसिंह ! मम देहि करावलम्बम् ॥ ११ ॥

अन्धस्य मे हृतविवेकमहाधनस्य
घोरैः प्रभो ! बलिभिरिन्द्रियनामधेयैः ।
मोहान्धकूपकुहरे विनिपातितस्य
लक्ष्मीनृसिंह ! मम देहि करावलम्बम् ॥ १२ ॥

लक्ष्मीपते ! कमलनाभ ! सुरेश ! विष्णो !
वैकुण्ठ ! कृष्ण ! मधुसूदन ! पुष्कराक्ष ! ।
ब्रह्मण्य ! केशव ! जनार्दन ! वासुदेव !
लक्ष्मीनृसिंह मम देहि करावलम्बम् ॥ १३ ॥

प्रह्लादनारदपराशरपुण्डरीक-
व्यासादि भागवत पुङ्गवहृन्निवास ! ।
भक्तानुरक्तपरिपालनपारिजात !
लक्ष्मीनृसिंह ! मम देहि करावलम्बम् ॥ १४ ॥

लक्ष्मीनृसिंहचरणाब्जमधुव्रतेन
स्तोत्रं कृतं शुभकरं भुवि शङ्करेण ।
ये तत्पठन्ति मनुजाः हरिभक्तियुक्ताः
ते यान्ति तत्पदसरोजमखण्डरूपम् ॥ १५ ॥

भज गोविन्दम्

भज गोविन्दं भज गोविन्दं गोविन्दं भज मूढमते !।
संप्राप्ते सन्निहिते काले न हि न हि रक्षति डुकृञ् करणे ॥ १ ॥

मूढ ! जहीहि धनागमतृष्णां कुरु सद्बुद्धिं मनसि वितृष्णाम्।
यल्लभसे निजकर्मोपात्तं वित्तं तेन विनोदय चित्तम् ॥ २ ॥

नारीस्तनभरनाभीदेशं दृष्ट्वा मा गाः मोहावेशम्।
एतन्मांसवसादिविकारं मनसि विचिन्तय वारं वारम् ॥ ३ ॥

नलिनीदलगतजलमतितरलं तद्वज्जीवितमतिशयचपलम्।
विद्धि व्याध्यभिमानग्रस्तं लोकं शोकहतं च समस्तम् ॥ ४ ॥

यावद्वित्तोपार्जनसक्तः तावन्निजपरिवारो रक्तः।
पश्चाज्जीवति जर्जरदेहे वार्तां कोऽपि न पृच्छति गेहे ॥ ५ ॥

यावत्पवनो निवसति देहे तावत्पृच्छति कुशलं गेहे।
गतवति वायौ देहापाये भार्या बिभ्यति तस्मिन् काये ॥ ६ ॥

अर्थमनर्थं भावय नित्यं नास्ति ततस्सुखलेशस्सत्यम्।
पुत्रादपि धनभाजां भीतिः सर्वत्रैषा विहिता रीतिः ॥ ७ ॥

बालस्तावत्क्रीडासक्तः तरुणस्तावत्तरुणीसक्तः।
वृद्धस्तावत् चिन्तासक्तः परे ब्रह्मणि कोऽपि न सक्तः ॥ ८ ॥

का ते कान्ता ? कस्ते पुत्रः ? संसारोऽयमतीव विचित्रः।
कस्य त्वं वा ? कुत आयातः ? तत्वं चिन्तय तदिह भ्रातः ! ॥ ९ ॥

सत्सङ्गत्वे निस्सङ्गत्वं निस्सङ्गत्वे निर्मोहत्वम्।
निर्मोहत्वे निश्चलतत्वं निश्चलतत्वे जीवन्मुक्तिः ॥ १० ॥

वयसि गते कः कामविकारः ? शुष्के नीरे कः कासारः ? ।
क्षीणे वित्ते कः परिवारः ? ज्ञाते तत्त्वे कस्संसारः ? ॥ ११ ॥

मा कुरु धनजनयौवनगर्वं हरति निमेषात् कालस्सर्वम् ।
मायामयमिदमखिलं हित्वा ब्रह्मपदं त्वं प्रविश विदित्वा ॥ १२ ॥

दिनयामिन्यौ सायं प्रातः शिशिरवसन्तौ पुनरायातः ।
कालः क्रीडति गच्छत्यायुः तदपि न मुञ्चत्याशावायुः ॥ १३ ॥

द्वादशमञ्जरिकाभिरशेषः कथितो वैयाकरणस्यैषः ।
उपदेशोऽभूद्विद्यानिपुणैः श्रीमच्छंकरभगवच्चरणैः ॥ १४ ॥

ஸ்ரீ ஹர்ஷன்

ஸ்ரீ ஹர்ஷன் என்கிற பெயரையுடைய இந்தக் கவி வட இந்தியாவைச் சேர்ந்தவர் என்று தோன்றுகிறது. புண்ய-ம்லோகோ நளோ ராஜா புண்யம்லோகோ யுதிஷ்டிர: என்பர். நளன் என்கிற பெயரைச் சொன்னாலே பாபங்களெல்லாம் தீருமாம், அப்படிப்பட்ட நளனைப் பற்றி இவர் நைஷத சரிதம் என்கிற மஹா காவ்யத்தை இயற்றியிருக்கிறார். இது ஸம்ஸ்க்ருதத்தில் புகழ் பெற்ற ஐந்து மஹா காவ்யங்களில் ஒன்றாகும்.

ஒரு ஸமயம் ஒரு தாமரைத் தடாகத்தில் நளன் அதிகாலையில் சென்று அங்குள்ள ஒரு பூவின் மீது ஒரு அந்நப்பறவை உட்கார்ந்து உறங்கிக் கொண்டிருந்ததைக் கண்டான். உடனே ஆவலால் அதைப் பிடித்து விட்டான். அந்த அந்நம் பேசுகிறது - ''மீன்கள் சிறியவற்றைப் பெரியவை விழுங்கி விடுகின்றன. பறவைகள் தாங்கள் கூடு கட்டி வாழும் அந்த மரத்தையே அஶுத்தம் செய்து விடுகின்றன. ஆடு மாடு போன்றவைகள், பாவம், ஒன்றுமறியாத பசும் புற்களைத் தின்று விடுகின்றன. ஆகையால் இவற்றையெல்லாம் வேட்டையாடுவது அரசர்களுக்குப் பாபமாகாது. ஆகையால் நீ என்னைப் பிடித்தது பற்றி கூட நான் கோபப்படவில்லை''

என்கிற போக்கில் அவனைப் புகழ்ந்து ஒரு ஶ்லோகம் சொல்லிற்று.

अवलम्बकुलाशिनो झषान् निजनीडद्रुमपीडिनः खगान्।
अनवद्यतृणादिनो मृगान् मृगयाऽघाय न भूभृतां घ्नताम्॥

அடுத்து அது பேசுகிறது. என் தாய் மிகவும் முதுமை அடைந்தவள். அவளுக்கு நான் ஒருவனே புதல்வன். என் மனைவி ப்ரஸவித்திருக்கிறாள். பாவம், எங்கும் செல்ல முடியாது. ஹா ! தெய்வமே ! என்னை இப்படி வாட்டுகிறாயே ! உன் நெஞ்சில் கருணை இல்லையா ? இப்படிப் புலம்பிவிட்டுச் சொல்கிறது - ''அரசே ! தமயந்தி என்று ஒரு ராஜகுமாரி இருக்கிறாள். அவளுக்கு நிகர் அவளே. அவளிடம் சென்று உன்னையே மணக்கும்படிச் சொல்கிறேன்'' என்றது. அரசனும் பறவையை விட்டுவிட்டான். பறவை தூது சென்றது. சொன்னவாறே செய்தது. தமயந்தீ ஸ்வயம்வரத்தில் நளனுக்கே மாலையிட்டாள் என்பது பாரதத்தில் உள்ள சரித்ரம்.

ஸ்ரீ ஹர்ஷன் தந்தையின் பெயர் ஹீரன். தாயின் பெயர் **மாமல்ல தேவீ** என்று சொல்கிறான். ஒவ்வொரு ஸர்கத்தின் இறுதியிலும் தன் பெயரை வைத்து ஶ்லோகம் எழுதுகிறான்-

श्रीहर्षं कविराजराजमकुटालङ्कारहीरः सुतं
श्रीहीरः सुषुवे जितेन्द्रियचयं मामल्लदेवी च यम्।

ஶ்லோகத்தில் முதல் ஸர்கம் முற்றிற்று- இரண்டாவது ஸர்கம் முற்றிற்று என்பது போல் அமைக்கிறான்.

இந்த நளன் யார் எதைக் கேட்டாலும் இல்லை என்று சொல்லாமல் கொடுத்து வந்ததனால் இவனைப் பற்றி மக்கள் சமத்காரமாகப் பேசினார்கள். இதைக் கீழே 33-வது ஶ்லோகத்தில் விளக்கியிருக்கிறேன்.

பாரவி:

'भारवेरर्थगौरवं' இவருடைய ஶ்லோகங்களில் நல்ல நல்ல கருத்துக்கள் இருக்கும் என்று முன்னோர்கள் பேசினர். ஓர்

உதாஹரணம்:-

उचितमनुचितं वा कुर्वता कार्यजातं
परिणतिरवधार्या यत्नतः पण्डितेन।
अतिरभसकृतानां कर्मणां आविपत्तेः
भवति हृदयदाही शल्यतुल्यो विपाकः॥

நாம் செய்யும் கார்யம் எதுவாக இருந்தாலும் அதன் விளைவு எப்படி இருக்கும் என்று ஆராய்ந்த பிறகே அதைச் செய்ய வேண்டும். அவஸரம் அவஸரமாகச் சில கார்யங்கள் செய்துவிட்டால் அதன் பலன் கடைசி வரை ஹ்ருதயத்தில் பாய்ந்த முள் போல வேதனையைத் தரும் என்கிறார். இது மிக்க நல்ல கருத்து தானே!

பவபூதி:

பவபூதி என்பவர் நல்ல ஆசாரஶீலர். ராமாயணத்தின் உத்தரகாண்டத்தை உத்தர ராம சரிதம் என்கிற பெயரில் நாடகமாக எழுதியிருக்கிறார். அதில் மங்கள ஶ்லோகம் என்கிற பெயரில் எழுதப்பட்ட முதல் ஶ்லோகத்தை மட்டும் இங்கு கவனிப்போம்-

यान्ति न्यायप्रवृत्तस्य तिर्यञ्चोऽपि सहायताम्।
अपन्थानं तु गच्छन्तं सोदरोऽपि विमुञ्चति॥

நாடகம் எழுதுபவர்கள் முதல் ஶ்லோகத்தில், தான் எழுதப்போகும் விஷயத்தைப் பற்றிச் சிறிது குறிப்பு தரவேண்டும் என்பது நாடக லக்ஷணம். ந்யாயமாக நடப்பவனுக்கு விலங்கினங்களும் உதவி புரியும். தீய வழிகளில் செல்பவனை உடன் பிறந்தவன் கூடக் கை விட்டுவிடுவான் என்பது ஶ்லோகத்தின் கருத்து.

இங்கு பாருங்கள் - ராமனுக்குக் குரங்குகள் உதவி செய்ததையும் ராவணனை விபீஷணன் விட்டு விலகி வந்ததையும் குறிப்பாகத் தெரிவிப்பது மிக அத்புதம்.

किमपि किमपि मन्दं मन्दमासक्तियोगात्
अविगलितकपोलं जल्पतोरक्रमेण।
अशिथिलपरिरम्भं व्यापृतैकैकदोष्णोः
अविदितगतयामा रात्रिरेवं व्यरंसीत्॥

இந்த ஶ்லோகம் ஸீதையும் ராமனும் இரவில் ஒருவரோடு ஒருவர் கட்டித் தழுவியும் பேசிக் கொண்டே கழித்தனர். தூங்கவில்லை என்ற கருத்தைத் தெரிவிக்கிறது.

மாகன் (ஶிஶுபாலவதம்)

ஸ்ரீ க்ருஷ்ணன் தேரிலேறிக் கொண்டு ஹஸ்திநாபுரம் செல்கையில் த்வாரகை வர்ணநம் செய்கிறார்.

''ஒரு மாடமாளிகை அக்காலத்தில் மாடியின் முன்புறத்தில் கொடுங்கை என்கிற பெயரில் (Projection) ஒன்று அமைப்பார்கள். அதில் பல கூடு போன்ற த்வாரங்கள் அமைக்கப்பட்டிருக்கும். அவற்றில் கிளி, புறா போன்ற பறவைகள் வந்து தங்கும். ஆனால் ஒரு மாடியில் அந்த த்வாரங்களில் புறா, கிளி போன்ற பதுமைகள் தத்ரூபமாக அமைக்கப்பட்டிருந்தன. இவற்றைப் பார்த்த உண்மையான பூனைகள், பதுமைகளை உயிருள்ளவை என்று நினைத்துப் பாய்வதற்குத் தயாராக உடம்பை நீட்டி அசையாமல் நின்று கொண்டிருந்தன. இதைப் பார்த்த ஜநங்கள் பறவைகளைப் பிடிக்கும் நோக்கில் பூனையைப் போல் பதுமை செய்திருக்கிறார்கள் என்று நினைத்தார்கள். இதையே உங்களுக்கு விளக்குகிறேன்.

ஒரு கிளி உட்கார்ந்திருந்தது. அதன் அலகு சிவப்பாக இருப்பதால் அதைப் பலாஶம்பூ என்று நினைத்து ஒரு வண்டு அதை நோக்கிப் பாய்ந்ததாம். அதைக் கண்ட கிளி வண்டை நாவல்பழம் என்று நினைத்துப் பிடிக்க முயன்றதாம். இதெல்லாம் ஒன்றின் ப்ரமையால் மற்றொன்றின் ப்ரமை ஏற்படுகிறது.

चिक्रंसया कृत्रिमपत्रिपङ्क्तेः कपोतपालीषु निकेतनानाम्।
मार्जालमप्यायतनिश्चलाङ्गं यस्यां जनः कृत्रिममेव मेने ॥

उपमा कालिदासस्य भारवेरर्थगौरवम्।
दण्डिनः पदलालित्यं माघे सन्ति त्रयो गुणाः ॥ என்பர்.

அப்பய்ய தீக்ஷிதர்

எந்த தேவியின் கடாக்ஷத்தை த்யாநிப்பதால் பக்தனுக்கு ஸகல விதமான பொருட் செல்வத்தையும் மேன்மேலும் அதிகரிக்கச் செய்கிறதோ அப்படிப்பட்ட முராரியின் ஹ்ருதயத்தை ஆள்கின்ற உன்னை வார்த்தைகளாலும் உடல், மநம் என்னும் கரணங்களாலும் ஸேவை செய்கிறேன்.

सरसिजनिलये ! सरोजहस्ते ! धवलतमांशुकगन्धमाल्यशोभे ! ।
भगवति ! हरिवल्लभे ! मनोज्ञे ! त्रिभुवनभूतिकरि ! प्रसीद ! मह्यम् ॥ १८

தாமரையில் இருப்பவளே ! தாமரையைக் கையில் வைத்துக் கொண்டிருப்பவளே ! மிகவும் வெளுப்பான பட்டு வஸ்த்ரம், சந்தநம், மாலை முதலியவைகளோடு விளங்குபவளே ! மனதுக்கு உகந்தவளே ! பெருமை மிக்கவளே ! தாயே ! ஹரிக்குப் ப்ரியமானவளே ! மூவுலகுக்கும் செல்வமளிப்பவளே ! எனக்கு அருள் புரிவாயாக.

दिग्धस्तिभिः कनककुम्भमुखावसृष्ट-
स्वर्वाहिनीविमलचारुजलाप्लुताङ्गीम् ।
प्रातर्नमामि जगतां जननीमशेष-
लोकाधिनाथगृहिणीममृताब्धिपुत्रीम् ॥ १९ ॥

எட்டு திக்கு யானைகளால் தங்கக் குடங்களின் வாயிலாகப் பொழியும் ஆகாஶ கங்கையின் நிர்மலமான,

அழகிய ஜலங்களால் அபிஷேகம் செய்யப்பட்ட திருமேனியை உடையவளும், உலகின் தாயானவளும், அனைத்து உலகங்களின் நாயகனான நாராயணனின் மனைவியும், அம்ருதக் கடலின் மகளுமான மஹாலக்ஷ்மியை நமஸ்காரம் செய்கிறேன்.

कमले ! कमलाक्षवल्लभे ! त्वं करुणापूरतरङ्गितैरपाङ्गैः ।
अवलोकय मामकिञ्चनानां प्रथमं पात्रमकृत्रिमं दयायाः ॥ २० ॥

செந்தமாரைக் கண்ணனின் நாயகியே ! கமலையே ! ஏழைகளுக்கெல்லாம் முதல்வனும் தயைக்கு இயற்கையாகப் பாத்ரமானவனுமாக அமைந்துள்ள என்னைக் கருணை வெள்ளத்தின் அலைகளாகிற உன் கடைக் கண் பார்வைகளாலே பார்த்து ரக்ஷிப்பாயாக.

स्तुवन्ति ये स्तुतिभिरमीभिरन्वहं त्रयीमयीं त्रिभुवनमातरं रमाम् ।
गुणाधिकाः गुरुतर भाग्यभागिनः भवन्ति ते भुवि बुधभाविताशयाः ॥ २१

மூன்று வேதங்களின் (ருக், யஜுர், ஸாம) உறைவிடமாக இருப்பவளும், மூவுலகங்களின் தாயுமாகிய லக்ஷ்மியை இந்த ஸ்தோத்ரங்களால் எவர்கள் திநந்தோறும் ஸ்தோத்ரம் செய்கிறார்களோ, அவர்கள் குணம் நிரம்பியவர்களாகவும், மிகவும் அதிகமான பாக்யம் பெற்றவர்களாயும், நல்லவர்களின் மனதில் புகுந்து பாராட்டப்பட்டவர்களாகவும் இவ்வுலகில் ஆகிறார்கள்.

அநுபந்தம்-2 (தொடர்ச்சி)

शरणं वृणवाम शार्ङ्गपाणिं शतकोटिशताप्रमेयसारम् ।
शतपत्रनिभेक्षणं रमेशं शतमन्युप्रभृतीश्वरैर्निषेव्यम् ॥ ३१ ॥

सदा बालरूपापि विघ्नाद्रिहन्त्री महादान्तिवक्त्रापि पञ्चास्यमाना ।
विधीन्द्रादिमृग्या गणेशाभिधाना विधत्तां श्रियं काऽपि कल्याणमूर्तिः ॥ ३२

अगजाननपद्मार्कं गजाननमहर्निशम् ।
अनेकदन्तं भक्तानां एकदन्तमुपास्महे ॥ ३३ ॥

மல்லிநாதன்

इन्दीवरदलश्यामं इन्दिरानन्दकन्दलम्।
मन्दारुजनमन्दारं वन्देहं यदुनन्दनम्॥ ३४॥

ஸு²பாஷிதநீவி (கவிதார்கிக ஸிம்ஹம்)

नवदलपुटे कलया यस्य प्रभोरपि तल्पधी-
नटपरिबृढो यस्याधस्ताच्छ्रमं शमयिष्यते।
वटविटपिनस्तस्याङ्कूराननुत्कटपल्लवान्
स्थपुटचटकापेक्षी भिक्षुः प्रतिक्षणमीक्षते॥ ३५॥

யாதவாப்யுதயம் 4-123 (கவிதார்கிக ஸிம்ஹம்)

लोलापतच्चरणलीलाहतिक्षरितहालाहले निजफणे
नृत्यन्त मप्रतिघकृत्यन्तमप्रतिममत्यन्तचारुवपुषम्।
देवादिभिः समयसेवादरत्वरितहेवाकघोषमुखरैः
दृष्टावधानमथ तुष्टाव शौरिमहिरिष्टावरोधसहितः॥ ३६॥

कामोऽस्मि दृष्टिविकलः स्थविरश्च गाठं अष्टाभिरूनशतवार्षिक एव भूयः।
गन्तुं च वा चलितुमक्षम एवमद्य श्री वासुदेव ! मम देहि करावलम्बम्॥ ३७

த்ருஷ்டி பரிஹாரம்

புதிய மணமக்களுக்குக் கன்னத்தில் பொட்டு வைப்பார்கள். பிடி சுற்றிப் போட்டு, நீர் சுற்றி த்ருஷ்டி தோஷ பரிஹாரம் செய்வர். பெரிய வீடுகள், கோபுரம் முதலியவை கட்டத் தொடங்கும் பொழுது துணியால் ஒரு பொம்மை போல் செய்து முகப்பில் வைத்திருப்பார்கள். அது போல இந்தக் கவிதோத்யாநத்தில் நவரஸங்களும் அடங்கியுள்ளன. எல்லாம் அந்த வெள்ளைப் பரிமுகரின் அநுக்ரஹமே. இந்தக் கவிதைப் பூங்காவுக்கு த்ருஷ்டி தோஷம் வராமல் இருக்கக் கீழே ச்லோகங்கள் தருகிறேன்-

भोजनं देहि राजेन्द्र ! घृतसूपसमन्वितम्।
माहिषञ्च शरच्चन्द्रचन्द्रिकाधवलं दधि ॥ ३८ ॥

போஜ மஹாராஜாவின் ஸபையில் ஒரு ஸாதாரண மனிதன் ஶ்லோகம் சொல்ல நினைத்தான். மேலே உள்ள ஶ்லோகத்தின் முன்பாதி மட்டும் அமைந்தது. பின்பாதி அவனுக்குத் தோன்றவில்லை. அதனால் காளிதாஸனிடம் சென்று அவனிடம் பூர்த்தி செய்யும்படிக் கேட்டுக் கொண்டான். பின்பாதியைக் காளிதாஸன் எழுதித் தந்தான். இதை ஸபையில் ஸாதாரண மனிதன் படித்தான். ஆனால் முன்பகுதிக்குப் பரிசு இல்லை, இரண்டாம் பாதிக்கு மட்டும் பரிசு என்று சொல்லிக் கொடுத்தான் போஜ ராஜா என்று சொல்வார்கள்.

जंबूफलानि पक्वानि पतन्ति विमले जले।
कपिकंपितशाखाभ्यः गुलु गुग्गुलु गुग्गुलु ॥ ३९ ॥

போஜ மஹாராஜன் ஸபையில் அரசன் ஸமஸ்யை கொடுத்துப் பூர்த்தி செய்யச் சொல்வான். அதை யார் வேண்டுமானாலும் பூர்த்தி செய்யலாம். இந்த வகையில் गुलु गुग्गुलुगुग्गुलु என்ற ஸமஸ்யையைக் கொடுத்தான் இதைக் காளிதாஸன் பூர்த்தி செய்ததாகச் சொல்வர். ஒரு குளத்தின் கரையில் நாவல் மரம் நன்கு பழுத்த பழங்களுடன் இருந்தது. அதில் ஒரு குரங்கு ஏறிக் கிளையில் நின்று உலுக்கிற்று. பழங்கள் தண்ணீரில் விழுந்தன. அந்த ஒசையே गुलु गुग्गुलु गुग्गुलु.

राजाभिषेके मदविह्वलायाः हस्ताच्च्युतो हेमघटो युवत्याः।
सोपानमार्गेषु करोति शब्दं ठण् ठण् ठठण्ठण् ठठठण् ठठण्ठण् ॥ ४० ॥

அரசனுக்குப் பட்டாபிஷேகம் நடக்க இருக்கிறது. அதற்காகச் சிலர் தங்கக் குடத்தில் ஜலம் எடுத்துச் செல்கின்றனர். ஒரு பெண்மணிக்கு உற்சாகம் மிகுதி.

அதனால் இடுப்பில் குடத்தை அலக்ஷ்யமாக எடுத்துச் செல்லும் பொழுது மேல் படியில் அக்குடம் தவறி விழுந்து ஒவ்வொரு படியிலும் டண் டண்டண் என்று சப்தம் செய்தது. அது எப்படி இருந்தது என்பதே ஸமஸ்யா பூர்த்தி.

दिल्लीश्वरो वा जगदीश्वरो वा मनोरथं पूरयितुं समर्थः ।
अन्येन केनापि नृपेण दत्तं शाकाय वा स्यात् लवणाय वा स्यात् ॥ ४१ ॥

டில்லியில் அக்பர் ஆண்ட காலம் வந்தவர்களுக்கு ஏதாவது பரிசு கொடுப்பான் அரசன். யாரோ ஒரு பண்டிதன் ஒரு நாள் வந்தான். அரசனும் ஏதோ கொஞ்சம் பணம் கொடுத்தனுப்பினான். அந்தப் பணம் மிகக் குறைவாக உள்ளது என்கிற எண்ணத்தினால் பண்டிதன் வெளியே செல்லும் பொழுது शाकाय वा स्यात् लवणाय वा स्यात् என்று சொல்லிக் கொண்டு போனான். இதன் பொருள்- கறிகாய்க்கோ, உப்புக்கோ தான் அரசன் கொடுத்த இப்பணம் போதுமானது என்பதே. அருகிலிருந்து இதைக் கேட்ட ஒருவன் அரசனிடம் ''தாங்கள் கொடுத்தது மிகக் குறைவு என்று இவ்வாறு பேசினான்'' என்று கூறிவிட்டான். ஆத்திரம் அடைந்த அரசன் 'அந்தப் பண்டிதனைக் கூப்பிடு' என்று ஆணையிட்டான். பண்டிதனும் வந்தான். ''என்ன சொன்னாய் ?'' என்று அரசன் கேட்க அவன் ஸமாளித்துச் சாதுர்யமாக இந்த ஶ்லோகம் சொன்னான். அதன் பொருள் ''டில்லிக்காரனே, உலகங்களுக்கு அதிபதியோ தான் நமக்குக் குறைவில்லாமல் கொடுக்க முடியும். வேறு, யாராவது கொடுத்தால் அது கறிகாய்க்கோ, உப்புக்கோ தான் ஆகும்'' என்று விளக்கினான். அரசனும் மகிழ்ந்து ''அப்படியே !'' என்று மேலும் நிறையப் பணம் கொடுத்தான்.

ராஹு காலம் எந்த நாளில் எந்த நேரம் ?

विधुः शनैश्चरः शुक्रः बुधश्चाथ गुरुर्मतः ।
भौमो दिवाकरश्चेति क्रमात् सार्धाश्च सप्तकान् ॥ ४२ ॥

நான் திருப்பதிக் கல்லூரியில் 70 வருடங்களுக்கு முன் வில்லிவலம் ஸ்ரீ நாராயணாசார்யருடன் படித்த போது இந்த ஶ்லோகத்தை எழுதி அவருக்குச் சொல்லி மகிழ்ந்தோம்.

பிறந்த நாளில் கிழமை சேர்ந்தால் என்ன பலன் ?

अध्वा भोजनमालस्यं विद्यावस्त्रं समागमः ।
मृत्युश्चेति क्रमात् जन्म ऋक्षवासरयोगतः ॥ ४३ ॥

ஸ்ரீ வைகுண்ட வாஸியான மன்னார்குடி ப்ருஹஸ்பதி பம்பாயில் சொல்லக் கேட்டுத் தெரிந்து கொண்டேன்.

நீலகண்ட தீக்ஷிதர் தனி ஶ்லோகம்

मारमण उमारमण फलधरतल्प फणाभरात्कल्पम् ।
मुरमथनं पुरमथनं मारजनकं नौमि कुमारजनकं च ॥ ४४ ॥

अचतुर्वदनो ब्रह्मा द्विबाहुरपरो हरिः ।
अफाललोचनः शम्भुः भगवान् बादरायणः ॥ ४५ ॥

வ்யாஸரின் பெருமையை அழகாக விளக்கும் ஶ்லோகம் இது.

करपृष्टं लिहेत् नूनं मधुक्षौद्रं हरेत्तु यः । ४६
தேனடை அழித்தவன் புறங்கை நக்குவான்.

ஆசிரியர்.

वज्रवल्लीवरं बन्धुं यस्त्वां प्रासौषि कुक्षितः ॥ ४७ ॥

உன்னைப் பெற்ற வயிற்றில் பிரண்டையை வைத்துத் தான் கட்டிக் கொள்ள வேண்டும். சொல்லைக் கேட்காத ஒரு பையனைப் பார்த்து வெறுப்பு கொண்ட தாய் பேசும் பேச்சு இது.

ஆசிரியர்.

विद्वानेव विजानाति विद्वज्जनपरिश्रमम् ।
न हि वन्ध्या विजानाति गुर्वीं प्रसववेदनाम् ॥ ४८ ॥

ஒரு பண்டிதன் பட்ட ச்ரமத்தை மற்றொரு பண்டிதனே அறிவான். ப்ரஸவ வலி எப்படி இருக்குமென்று மலடிக்குத் தெரியாதன்றோ?

मनस्तु स्फटिकच्छायं वाङ्माध्वीकझरी ध्रुवम्।
स्नेहस्य परमा काष्ठा व्यवहारः सतां सदा॥ ४९॥

ஸாதுக்களின் போக்கு எப்பொழுதும் ஒரே மாதிரியாக இருக்கும். மநம் ஸ்படிகம் போலவும், பேச்சு தேனருவி போலவும் அன்பு எல்லை கடந்ததாகவும் இருக்கும்.

ஆசிரியர்.

निश्शेषमम्बरतलं यदि पत्रिका स्यात्?
सप्तार्णवी यदि समेत्य मषी भवित्री?।
वक्ता सहस्रवदनः पुरुषः स्वयं चेत्?
लिख्येत रङ्गपतिपादुकयोः प्रभावः॥ ५०॥

பாதுகாஸஹஸ்ரம் 3-2

तद्रजस्तव तनोति पादुके मानसान्यकठिनानि देहिनाम्।
प्रस्तरस्य पदवीगतस्य यत् व्याचकार मुनिधर्मदारताम्॥ ५१॥

பாதுகா ஸஹஸ்ரம் 13-9

கவிதார்கிக ஸிம்ஹம்

मनीषिणःसन्ति न ते हितैषिणः हितैषिणस्सन्ति न ते मनीषिणः।
सुहृच्च विद्वानपि दुर्लभो जनः यथौषधं स्वादु हितं च दुर्लभम्॥ ५२

மஹாகவிபாஸன்.

आयुःपरिस्रवति भिन्नघटादिवाम्भः।
चकोरपङ्क्तिरिव गच्छति भाग्यपङ्क्तिः॥ ५३॥

மஹாகவிபாஸன்.

इषुक्षयान्निवर्तन्ते नान्तरिक्षक्षितिक्षयात्।
मतिक्षयान्निवर्तन्ते न गोविन्दगुणक्षयात्॥ ५४॥

ஸ்ரீமத்ராமாயணம்

कुपुत्रो जायेत क्वचिदपि कुमाता न भवति॥ ५५॥

ஸ்ரீ ஆதிஶங்கரர்

जीवनग्रहणे नम्राः गृहीत्वा पुनरुन्नताः।
किं कनिष्ठाः ? किमु ज्येष्ठाः ? घटीयन्त्रस्य दुर्जनाः॥ ५६॥

ஏர்க்கவலை கிணற்றில் தண்ணீர் எடுக்கச் செல்லும் போது மெதுவாகவும் எடுத்த பின் வேகமாகவும் மேலே செல்லுகிறது. அப்படியே துர்ஜநனும் (ஜீவநம்) பிறரிடம் தன் கார்யம் ஆக வேண்டிய போது வணங்கியும் ஆனபிறகு தலை நிமிர்ந்தும் செல்கிறான். ஸம்ஸ்க்ருதத்தில் जीवन ஶப்தத்திற்குப் பிழைப்பு என்றும் ஜலம் என்றும் இரண்டு அர்த்தங்கள். இதை ஒட்டியதே இந்த ஶ்லோகம். இந்த ஶ்லோகத்தில் கடீயந்த்ரத்தையும் (ஏர்க்கவலை) துஷ்டர்களையும் சமத்காரமாக ஒற்றுமை கூறப்பட்டுள்ளது. இங்கு எனக்கு பாடபேதம்செய்யலாமென்று தோன்றுகிறது.नम्राः उन्नताः किं कनीयांसः ? किमु दुर्जनाः ज्यायांसः ? தலை வணங்கும் பெரியோர் இளையவர்களா ? தலைவணங்கா துஷ்டர்கள் மூத்தவர்களா ? இவைகளை வைத்துப் பேசும் போது Superlative Degree உசிதமல்ல எனத் தோன்றுகிறது. பண்டிதர்கள் அவச்யம் கவனிக்கவும்.

குவலயாநந்தம்

वन्दिषीय वरदं करिशैले नन्दिताखिलजनं महेश्वरम्।
चन्द्रसूर्यनयनं रमासखं बन्धमोचनकृते दयानिधिम्॥ ५७॥

ஆசிரியர்

परिहृत्य परिच्छिद्य परिवर्त्य परीसृताः ।
परीक्षितास्ते निखिलाः पर्यपृच्छन् सुखं मयि ॥ ५८ ॥

ஆசிரியர்

இந்த ஶ்லோகம் ஹயக்ரீவ ப்ரஸாதமாக வெளிவந்தது. அதனால் எல்லாவற்றையும் பரி சேர்த்து எழுத வேண்டும் என்று தோன்றிற்று. அதனால் ஏதோ எழுதினேன். இதற்கு என்ன கருத்து ? என்று எனக்கே விளங்கவில்லை. ஆனால் அபஶப்தமோ, நிரர்த்தகமோ, காடிந்யமோ ஏதுமில்லை. ஒரு கருத்து எனக்குத் தோன்றுகிறது. இங்கு பரி என்பது ஆறு முறை வந்திருக்கின்றது. ஆறு ருதுக்கள் என்று வைத்துக் கொண்டு அவரவர்க்குத் தோன்றியபடி பொருள் கொள்ளலாம். வித்வான்கள் கவனிக்கவும். ஸ்வாமி தேஶிகன் பாதுகா ஸஹஸ்ரத்தில் 32 எழுத்துக்கள் வைத்து ஶ்லோகம் அமைத்தார். அதுவும் ஸ்ரீ ஹயக்ரீவ ப்ரஸாதமே.

शुचीन् नमामि सुधियः करणत्रितयेऽपि च ।
कालत्रितयके स्मृत्वा कलये कुशलं मम ॥ ५९ ॥
(अत्र कामधेनुं प्रार्थये इति भावः)

ஆசிரியர்

कुशलवगीतं चरितं रघुकुलतिलकस्य रामभद्रस्य ।
वाल्मीकिना प्रणीतं पठाम यायाम सुगतिमचिरेण ॥ ६० ॥

ஆசிரியர்

புதிர்

अपूर्वोऽयं गजः शैलात् जवादवतरेत् स्वयम् ।
नैव यन्त्रात् विमानाद्वा यो जानाति स पण्डितः ॥ ६१ ॥

ஆசிரியர்

अपूर्वोगजः अगजः மலையில் பிறந்த மனிதனோ ம்ருகமோ வேகமாக இறங்கிவிடுகிறது.

சமத்காரம்

छात्राः छत्रसमानास्स्युः गुरूणां प्रीतिवर्धनाः।
सेवां कालोचितां कृत्वा प्रह्वोन्नतदशायुताः ॥ ६२ ॥

ஆசிரியர்

குடை விரிந்தும் மடிந்தும் நமக்கு ஸேவை செய்கிறது. அப்படியே மாணவர்களும்.

ராஸக்ரீடை

अङ्गनामङ्गनामन्तरे माधवो माधवं माधवं चान्तरेण अङ्गना।
इत्थमाकल्पिते मण्डले मध्यगः सञ्जगौ वेणुना देवकीनन्दनः ॥ ६३ ॥

ஸ்ரீமத் பாகவதம்

ப்ருந்தாவநத்தில் ஒரு நாள் ஸ்ரீ க்ருஷ்ணன் புது மாதிரி லீலை செய்தான். ஒரு க்ருஷ்ணன், ஒரு கோபி, மீண்டும் ஒரு க்ருஷ்ணன், ஒரு கோபி, இம்மாதிரி ஒரு வட்டம் அமைத்தான். க்ராமங்களில் கல்யாணம் போன்ற விசேஷங்களில் முன் காலத்தில் கும்மியடிப்பார்கள், அது போல. இரண்டு க்ருஷ்ணனுக்கு நடுவில் ஒரு பெண். இரண்டு பெண்களுக்கு நடுவில் ஒரு க்ருஷ்ணன். வேறொரு உருவம் எடுத்து மத்தியிலும் இருந்து வேணுகாநம் செய்தான்.

अर्थागमो नित्यं अरोगता च प्रिया च भार्या प्रियभाषिणी च।
वश्यश्च पुत्रः सुभृताश्च भृत्याः षट् भागधेयानि मनुष्यलोके ॥ ६४ ॥

(ஆசிரியர் தெரியவில்லை)

திநமும் வருமானம், நோயின்மை, ப்ரியமனைவி, ப்ரியமாகப் பேசுபவள் சொற்படி நடக்கும் குமாரன், நல்ல வேலைக்காரர்கள்- இந்த ஆறும் ஒருவனுக்கு இருந்தால், அதுவே இவ்வுலகில் பெரிய பாக்யம்.

विद्या विवादाय धनं मदाय शक्तिः परेषां परिपीडनाय।
खलस्य, साधोर्विपरीतमेतत् ज्ञानाय दानाय च रक्षणाय ॥ ६५ ॥

நீதி ஶ்லோகம்

वस्त्रेण वपुषा वाचा विद्यया विनयेन च।
वकारैर्पञ्चभिर्हीनः नरो नाऽऽयाति गौरवम्॥ ६६॥

ஒருவனுக்கு மதிப்பு வேண்டுமானால் கீழ்க்கண்ட ஐந்து அம்சங்கள் இருக்க வேண்டும்- நல்ல உடை, கம்பீரமான உடற்கட்டு, நல்ல வாக்கு, நல்ல படிப்பு, அடக்கம் இவைகளே. இவை இல்லாதவனுக்கு மதிப்பில்லை.

सदोपैति शनैर्याति नीलवर्णश्च देवता।
निन्दापात्रं च सर्वेषां कोऽयं ब्रूत विपश्चितः॥ ६७॥

(शनिः)

ஆசிரியர்

विपदस्सन्तु नः शश्वत् यत्र संस्मियते हरिः॥ ६८

பாரதம்–குந்தி வாக்யம்

அப்பா! எங்களுக்கு அடிக்கடி கஷ்டங்களே வரட்டும், அப்பொழுது தான் உன்னை நினைக்கத் தோன்றும்.

पाठशाधनम्

नरः प्रत्युपकारार्थी विपत्तिमभिकाङ्क्षति॥ ६९॥

இந்த ஶ்லோகம் சில புத்தகங்களில் இருப்பதையும் சிலர் சொல்லியும் கேட்டிருக்கிறேன். தனக்கு உபகாரம் செய்பவனுக்குப் பதில் உபகாரம் செய்ய விரும்புபவன், அவனுக்கு ஆபத்து வரவேண்டுமென்றா விரும்புவான்? ஆகையால் सन्दर्भमभिकाङ्क्षति என்று திருத்தம் செய்தால் நன்றாக இருக்கும். பண்டிதர்கள் பரிஶீலிக்க.

सारसवत्ता विहता न वका विलसन्ति चरति नो कङ्कः।
सरसीव कीर्तिशेषं गतवति भुवि विक्रमादित्ये॥ ७०॥

இது வாஸவதத்தா என்கிற சம்பூ க்ரந்தத்தில் உள்ளது. அத்புத்புதமான ஶ்லேஷாலங்காரம். கவியின் பெயர் ஸுபந்து.

விக்ரமாதித்தன் குளம் போல் கீர்த்தி ஶேஷனாய் ஆகிவிட்ட பிறகு பின் கண்ட நிலை உலகத்தில் ஏற்பட்டது என்கிறான். கீர்த்தி என்பதற்கு சேறு (கர்தமம்) என்று பொருள். தண்ணீர் வற்றிச் சேறு மிச்சமிருக்கும் போது ஸாரஸம் எனும் நீர்க் காக்கை வராது, கொக்கு வராது. கழுகு வராது, என்பது அப்ராக்ருதப் பொருள். விக்ரமாதித்தன் போய்விட்ட பிறகு ஸா ரஸவத்தா– ரஸிக்கும் தன்மையே உலகத்தில் இல்லை. न वका विलसन्ति (वबयोरभेदः) புதிய மனிதர்கள் தோன்றுகிறார்கள். कं कः नो चरति யாரை யார் சாப்பிடுவதில்லை ? चर गति भक्षणयोः என்பது பாணினியின் தாது பாடம். பண்டிதர்களுக்கு விருந்து.

दरिद्रदम्पतिभ्यां आच्छाद्यमानः पट इव एकेन कृष्यमाणे अपरं जहाति ।। ७१ ।।

இது மஹாபாஷ்யத்தின் வாக்யம். இது கத்யமானாலும் கவிதைதானே - பாருங்கள் ! பாணிநியின் ஸூத்ரங்களுக்குப் பதஞ்ஜலி மஹாபாஷ்யம் எழுதினார். ஒரு ஸூத்ரத்துக்கு ஒரு வகையில் அர்த்தம் செய்தால், அது மற்றொரு ஸூத்ரத்துக்கு மாறாக உள்ளது என்பதற்கு உதாரணம் காட்டுகிறார். ஏழை தம்பதிகள் பனிக் காலத்தில் ஏழ்மையினால் ஒரே போர்வையைப் போர்த்திக் கொள்கிறார்கள். நன்றாகத் தூங்கும் பொழுது ஒருவர் இழுத்துப் போர்த்திக் கொண்டால் அந்தப் போர்வை மற்றவரை விட்டு விலகி விடுகிறது என்று உதாரணம் காட்டுகிறார் !

यदि सन्ति गुणाः पुंसां विकसन्त्येव ते स्वयम् ।
न हि कस्तूरिकामोदः शपथेन निवार्यते ।। ७२ ।।

நல்ல மனிதர்களிடம் நற்குணங்களிருந்தால் அவை தாமாகவே வெளிப்படும். யாரும் சொல்லித் தெரிய வேண்டாம். இதற்கு உதாரணம் காட்டுகிறார் அப்பய்ய தீக்ஷிதர் குவலயாநந்தத்தில். கஸ்தூரி என்னும் ஒரு வகை வாஸனைப் பொருள் - அதன் வாஸனை, டப்பியில் வைத்தாலும் தடுக்கப்படுவதில்லை.

अर्धं दानववैरिणा गिरिजयाप्यर्धं शिवस्याऽऽहृतं
देवेत्थं जगतीतले पुरहराभावे समुन्मीलति ।

गङ्गा सागरमम्बरं शशिकला नागाधिपः क्ष्मातलं

सर्वज्ञत्वमधीश्वरत्वं अगमत् त्वां मां च भिक्षाटनम् ॥ ७३ ॥

இந்த ஶ்லோகம் குவலயாநந்தத்தில் நிந்தாஸ்துதிக்கு உதாஹரணமாக எடுக்கப்பட்டிருக்கிறது. கவி சொல்கிறார்- ''ஒரு பண்டிதன் அரசனிடம் சென்று, அரசே! த்ரிபுரங்களை எரித்த ஶிவனின் உடம்பில் பாதியை ஸ்ரீ ஹரி எடுத்துக் கொண்டார் (ஹரிஹரன் என்கிற மூர்த்தி). மற்றொரு பாதியைப் பார்வதி எடுத்துக் கொண்டாள் (அர்த்த நாரீஶ்வரர்). ஶிவனே முழுமையாக உருக்குலைந்து போய்விட்ட நிலையில் அவரிடமிருந்த கங்கை கடலுக்கும், சந்திரன் ஆகாயத்துக்கும், வாஸுகி என்கிற நாகராஜன் பாதாளத்துக்கும், அறிவும், ப்ரபுத்வமும் உன்னை அடைந்துள்ளன. அவரிடமிருந்த வஸ்துக்களில் ஒன்று என்னையும் வந்தடைந்தது! அது தான் பிக்ஷாகபாலம் (பிச்சை ஓடு)! என்றான்.

अयि! मुरलिमुकुन्द! स्मेरवक्त्रारविन्द!

श्वसनमधुरसङ्गे! त्वां प्रणम्याऽद्य याचे।

अधरमणिसमीपं प्राप्तवत्यां भवत्यां

कथय रहसि कर्णे मद्दशां नन्दसूनोः ॥ ७४ ॥

ஸ்ரீ க்ருஷ்ணகர்ணாம்ருதம்

मेघैर्मेदुरमम्बरं वनभुवः श्यामास्तमालद्रुमैः

नक्तंभीरुरयं त्वमेव तदिमं राधे! गृहं प्रापय।

इत्थं नन्दनिदेशतश्चलितयोः प्रत्यध्वकुञ्जद्रुमं

राधामाधवयोर्जयन्ति यमुनाकूले रहःकेलयः ॥ ७५ ॥

ஜயதேவர்

वन्दे वाञ्छितलाभाय कर्म किं तं न गच्छति ?।

किं दम्पतिमिति ब्रूयां ? उताहो दम्पती इति ? ॥ ७६ ॥

நீலகண்டதீக்ஷிதர்

ஸ்வாமி தேஶிகன் பிற்காலத்தில் வரப்போகும் **நீலகண்டதீக்ஷிதர்** போன்றவர்களுக்கு 200 ஆண்டுகளுக்கு முன்பே ஸமாதாநம் கூறியிருக்கிறார் என்பதை நினைக்க நம் போல்வாருக்கு மிக்க மகிழ்ச்சியாக உள்ளது. ஸ்வாமி தேஶிகன் ஹம்ஸ ஸந்தேஶத்தில் இரண்டாவது ஆஶ்வாஸத்தின் தொடக்கத்தில் கடலை வர்ணிக்கிறார். பவழப் பாறைகளோடு கூடிய கருத்த கடல் நீர் அர்த்த நாரீஶ்வரர் போல் உள்ளதாம். பல உபமாநங்கள் சொல்கிறார். அதில் ஒன்று देहैनैकं मिथुन என்பது. என்னே கவிதார்கிக ஸிம்ஹத்தின் சிறப்பு ! ஹயக்ரீவ ப்ரஸாதமே.

अतिपरिचयादवज्ञा सन्ततगमनादनादरो भवति ।
मलये भिल्लपुरन्ध्री चन्दनतरुकाष्ठमिन्धनं कुरुते ।। ७७ ।।

ஆசிரியர் தெரியவில்லை

அதிகப் பழக்கத்தினால் அலக்ஷ்ய புத்தி ஏற்படுகிறது. அடிக்கடி ஸந்திப்பதால் மர்யாதைக் குறைவு ஏற்படுகிறது. காட்டில் வேடர் குலத்தைச் சேர்ந்த பெண்மணி சந்தநக் கட்டைகளை அடுப்புக்கு விறகாக எரிக்கிறாள்.

आशैलादद्रिकन्याचरणकिसलयन्यासधन्योपकण्ठात्
आरक्षोनीत सीतामुखकमलसमुल्लासहेतोश्च सेतोः ।
आ च प्राच्य प्रतीच्यक्षितिधरयुवराट् अर्कचन्द्रावतंसात्
मीमांसाशास्त्रयुग्मश्रममुदितमनाः मृग्यतां मादृशोऽन्यः ।। ७८

ஆளவந்தார்

सुरासुराराधितपादपङ्कजा करे विराजत्कमनीयपुस्तका ।
विरिञ्चिपत्नी कमलासनस्थिता सरस्वती नृत्यतु वाचि मे सदा ।। ७९

ஆசிரியர் தெரியவில்லை

இங்கு ஒரு விஷயம் குறிப்பிட வேண்டும். या कुन्देन्दु- என்று தொடங்கும் ஶ்லோகத்தில் या वीणा என்று வீணை

குறிப்பிடப்பட்டுள்ளது. ஆனால் ஸ்ரீமத் பாகவதத்தில் உள்ள ஶ்லோகத்தில் வீணை குறிப்பிடப்படவில்லை. மாறாகப் புத்தகமே குறிப்பிடப்பட்டுள்ளது. அதைக் கீழே தருகிறேன்.

दोर्भिर्युक्ता चतुर्भिः स्फटिकमणिमयीमक्षमालां दधाना
हस्तेनैकेन पद्मं सितमपि च शुकं पुस्तकं चाऽपरेण।
भासा कुन्देन्दुशङ्खस्फटिकमणिनिभा भासमाना समाना
सा मे वाग्देवतेयं विलसतु वदने सर्वदा सुप्रसन्ना ॥ ८० ॥

உப்பு வ்யாபாரிக்கு கற்பூரத்தின் விலை என்ன தெரியும்?

लवणवणिजः कर्पूरार्घं किमित्यभिमन्वते ? ॥ ८१

கவிதார்க்கிக ஸிம்ஹம்

மலையை வாயால் ஊதி அசைக்க முடியாது.

मुहुर्वात्याधूते मुखपवन विस्फूर्जितमिव ॥ ८२ ॥

கவிதார்க்கிக ஸிம்ஹம்

अबलां मृदुलां मत्वा माभूर्मग्नो महीतले।
अवते पात्यते हन्त ! गजेन्द्रः स्तम्बजृम्भिते ॥ ८३ ॥

ஆசிரியர் ஸ்ரீ ஸ்ரீ

பெண்களை மெல்லியலாள் என்று எண்ணி வீணாக பூமியில் மறைந்து போகாதே. வலிமை மிக்க ஒரு யானையும் கூட நாணல் பதுக்கப்பட்ட பெரும் பள்ளத்தில் வீழ்த்தப்படுகிறது.

हयास्यो यस्य जिह्वाग्रे दैवतं च परं मम।
..............यत्सूक्तिर्मे करं ददौ ॥ ८४ ॥

ஆசிரியர் ஸ்ரீ ஸ்ரீ

கல்யாணச் சந்தடியில் தாலி கட்ட மறந்தானாம் ஒருவன் ! அது போல அடியேன் ஸ்வாமி தேஶிகனைப் பற்றி

ஶ்லோகம் எழுதவில்லையே என்கிற எண்ணம் தோன்றிற்று. அதனால் மேலே கண்ட ஶ்லோகத்தை எழுதினேன். இங்கு ஓர் முக்யமான விஷயம் சொல்ல வேண்டும். முதலில் ஶ்லோகத்தைப் பெரியதாக அமைக்க நினைத்து முயற்சித்தேன். ஆனால் ஶ்ரமப்பட்டும் கூட அமையவில்லை. சிறியதே அமைந்தது. நாவல்பாக்கம் மஹாவித்வான் ஸ்ரீ உ.வே.நரஸிம்மாசார்ய ஸ்வாமிக்கு ஶிஷ்யர்கள் தனியன் அமைக்க விரும்பிக் கேட்ட போது "ஸ்வாமி தேஶிகனுக்கே தனியன் சிறியதாக இருப்பதால் எனக்கும் சிறிய ஶ்லோகம் போதுமானது" என்று அந்த விரக்த ஸார்வபௌமர் அருளிச் செய்தாராம் அப்படியேதான் இங்கும் அமைந்தது.

अर्थातुराणां न गुरुर्न बन्धुः कामातुराणां न भयं न लज्जा।
विद्यातुराणां न सुखं न निद्रा क्षुधातुराणां न रुचिर्न वेला॥ ८५॥

பணத்திலேயே ஆர்வம் கொண்டவனுக்கு குருவோ உறவினரோ கிடையாது. காமத்தில் ஈடுபடுவனுக்கு வெட்கமோ பயமோ இராது. கல்வியில் நாட்டமுடையவருக்கு ஸுகமோ தூக்கமோ தேவைப்படாது. பசியால் வாடுபவன் சுவையோ வேளையோ பார்ப்பதில்லை.

நீதி ஶ்லோகம். கும்பகோணம் சாரதாவிலாஸ்

पुराणमित्येव न साधु सर्वं न चाऽपि काव्यं नवमित्यवद्यम्।
सन्तः परीक्ष्याऽन्यतरत् भजन्ते मूढः परप्रत्ययनेयबुद्धिः॥ ८६॥

மாளவிகாக்நிமித்ரம்

காளிதாஸன் சொல்கிறான். ஒரு நூல் பழையது என்றதாலேயே நல்லதாகி விடாது. மற்றொன்று புதிய தென்பதாலேயே மதிப்பு குறைந்து விடாது. பெரியோர் நன்கு பரிஶீலித்து ஒன்றை எடுத்துக் கொள்வர். மூடர் பிறர் பேச்சை நம்பி ஏமாறுவர்.

இதை ஸ்வாமி தேஶிகன் வேறு விதமாக விளக்குகிறார்-

तदात्वे नूतनं सर्वं आयत्यां च पुरातनम्।
न दोषायैतदुभयं न गुणाय च कल्पते॥ ८७॥

கவிதார்க்கிகஸிம்ஹம்-ஸுபாஷிதநீவீ

எது பெரியது ? எது பழையது ? பழையது அந்தக் காலத்தில் புதியதாகத் தான் இருந்தது. புதியது என்பதும் சில காலம் சென்றால் பழையது ஆகிவிடுகிறது. இந்த இரண்டையும் கொண்டு குற்றமென்றோ குணமென்றோ சொல்ல முடியாது.

द्वीपादन्यस्मादपि मध्यादपि जलनिधेर्दिशोप्यन्तात्।
आनीय झटिति धटयति निधिरभिमतमुखीभूतः॥ ८८॥

பாஸன்-ஸ்வப்நவாஸவத்தம்

ஒருவனுக்கு நல்ல காலம் வருமானால் அவன் வேறு தீவில் இருந்தாலும், கடலின் நடுவிலிருந்தாலும், எட்டாத் தொலைவில் எங்கோ இருந்தாலும் கூட அவனை அழைத்து வந்து நண்பர்கள், மனைவி மக்கள் இவர்களுடன் சேர்த்து வைக்கும்.

रत्नैर्महाब्धेस्तुतुषुर्न देवाः न भेजिरे भीमविषेण भीतिम्।
सुधां विना न प्रययुः विरामं न निश्चितार्थात् विरमन्ति धीराः॥ ८९

தேவர்களும் அஸுரர்களும் சேர்ந்து பாற்கடலைக் கடைந்தனர். முதலில் சில ரத்நங்கள் கிடைத்தன. அதைக் கண்டு மகிழ்ச்சி அடையவில்லை. பிறகு காலகூடம் என்கிற கொடிய விஷம் தோன்றியது. அதைக் கண்டு அஞ்சவில்லை. அமுதம் கிடைக்கும் வரை ஓய்வின்றிக் கடைந்தனர். மஹான்கள் நினைத்த கார்யம் கைகூடும் வரை ஓயமாட்டார்கள். *(K.L.V. ஶாஸ்த்ரி புத்தகம்)*

त्रिस्रोतसं वहति यो गगनप्रतिष्ठां
ज्योतींषि वर्तयति न प्रविभक्तरश्मिः।

तस्य द्वितीयहरिविक्रमनिस्तमस्कं
वायोरिमं परिवहस्य वदन्ति मार्गम्॥ १०॥

சாகுந்தலம் 7-6

துஷ்யந்தன் ஸ்வர்க லோகம் சென்று திரும்பி வரும் பொழுது ஸாரதியைப் பார்த்து இப்பொழுது நாம் எங்கு வந்து கொண்டு இருக்கிறோம் என்று கேட்டான். ஸாரதி பதில் உரைக்கிறான்- ஏழுவகைக் காற்றுகளில் பரிவஹம் என்பது ஒன்று. அது ஆகாயத்தில் கங்கையைத் தாங்கிக் கொண்டிருக்கிறது. நக்ஷத்ரங்கள் அனைத்தும் ஒன்றின் ஒளி மற்றொன்றுடன் கலக்காமல் பிரித்து வைத்திருக்கிறது. பகவான் பலிச் சக்ரவர்த்தியிடம் மூன்று அடி மண் கேட்டு முதலில் பூமியை அளந்து, இரண்டாவது திருவடியால் இந்த இடத்தை இருளில்லாமல் செய்திருக்கிறார். அங்கு வந்து கொண்டிருக்கிறோம் என்றான். காளிதாஸன் வர்ணனை அத்யத்புதம்!

அர்ஜுனன் தீர்த்த யாத்ரையில் தமிழ்நாட்டுப் பெண்ணை மணந்தார்.

एलालवङ्गतरुपिप्पलिकापटीरान्
ताम्बूलिकाक्रमुकदंपतिभावरम्याम्।
उद्यानभूमिमभिगम्य तया स पार्थः
सुख्यन् पितुःपदममन्यत बर्बरेभ्यः॥ ११॥

பாரத சம்பூ

அந்தப் பெண்ணின் ஊரின் பெயர் கூடக் குறிப்பிட்டிருக்கிறார். மணலூர் புரம் என்றும் குறிப்பிடுகிறார். அங்குள்ள தோட்டத்தில் கொடிகளுக்கும் திருமணமானது போலத் தோன்றுகிறது. ஏலக்காய், கொடி, லவங்க (கிராம்பு)ச் செடியையும், திப்பிலிக் கொடி, சந்தந மரத்தையும், வெற்றிலை பாக்கு மரத்தையும் தழுவியபடிக் காட்சியளிக்கின்றன. அவற்றைப் பார்த்துப் பேரின்பம்

கொண்ட அர்ஜுநன் தன் தந்தையான இந்திரனுடைய ஸ்வர்கத்தைக் கூட மட்டமாக நினைத்தான் என்கிறார்.

அர்ஜுநனின் 10 பெயர்கள்

அர்ஜுநः, பல்குநः, பார்த்தः, கிரிட, வேதவாஹநः, பீபத்ஸः, விஜயः, க்ருஷ்ணः, ஸவ்யஸாசீ, தநஞ்ஜயः.

कृषतो नास्ति दुर्भिक्षं जपतो नास्ति पातकम् ।
मौनिनः कलहो नास्ति नास्ति जागरतः भयम् ॥ ९२ ॥

வயலில் உழுபவனுக்குப் பஞ்சம் இல்லை. ஜபம் செய்து வருபவனுக்குப் பாபம் இல்லை. மௌநமாக இருப்பவனுக்குச் சண்டையே வராது. விழித்துக் கொண்டிருப்பவனுக்குப் பயம் கிடையாது.

குறிப்பு:- இங்கு जागरतः என்பது தவறு. जाग्रतः என்பது தான் சரி. அதன் 6-ம் வேற்றுமை जाग्रतः । இதுவே இங்கு இருக்க வேண்டும் ஆகையால் न भयं नास्ति चा जाग्रतः என்று திருத்திக் கொள்ளலாம்.

நீதி ஶாஸ்த்ரம்,
சாரதாவிலாஸ், கும்பகோணம்.

நம்பினோர் கெடுவதில்லை

देवे तीर्थे द्विजे मन्त्रे दैवज्ञे भेषजे गुरौ ।
यादृशी भावना यस्य सिद्धिर्भवति तादृशी ॥ ९३ ॥

கவிதார்கிக ஸிம்ஹம்

பகவான், புண்யதீர்த்தம், ப்ராம்ஹணர்கள், மந்த்ரம், ஜோஸ்யர், மருந்து, ஆசான் இவற்றில் யாருக்கு எவ்வளவு நம்பிக்கை உள்ளதோ அதற்குத் தக்கபடி பலன் கிடைக்கும்.

ஒன்றினால் ஒன்று மேன்மை பெறுகிறது

शर्वरीदीपकश्चन्द्रः प्रभातोदीपको रविः ।
त्रैलोक्यदीपको धर्मः सुपुत्रः कुलदीपकः ॥ ९४ ॥

இரவுக்கு அழகு சேர்ப்பது சந்திரன். காலை ஒளி தருபவன் ஸூர்யன். மூன்று உலகங்களிலும் ஸுகம் தருவது தர்மம். நல்ல புதல்வன் தன் குலத்தை விளங்க வைக்கிறான்.

ஸித்த புருஷர் ஒருவரின் விசித்ரமான உரை

ஸித்தர்கள் பலவகைப்படுவர். பட்டினத்துப் பிள்ளை ஜோதி ராமலிங்க ஸ்வாமிகள், ஸ்ரீ ராகவேந்த்ர ஸ்வாமிகள் இவர்கள் எல்லோரும் வியக்கத்தக்க செயல்களைப் புரிந்திருக்கிறார்கள். ஸ்ரீ ராகவேந்த்ரர் 300 வருடங்கள் உயிரோடு இருப்பேன் என்று சொல்லி பூமிக்குள் இறங்கி உட்கார்ந்து விட்டார். அதன் மேல் தான் இப்பொழுது ப்ருந்தாவநம் உள்ளது. இந்த வகையைச் சேர்ந்தவர் தான் ஸதாஶிவ ப்ரம்மேந்த்ரர். இவர் திருச்சிக்கருகே நெரூரில் வாழ்ந்ததாகவும், சிறிய குழந்தைகளை மாயமாக எடுத்துக் கொண்டு போய் உச்சிப் பிள்ளையாரை ஸேவித்துத் திரும்பவும் கொண்டு விட்டுவிடுவாராம். 200 வருடங்களுக்குட்பட்ட காலத்திலிருந்தவர். அவர் மாநஸ ஸஞ்சர ரே என்று ஸம்ஸ்க்ருதத்தில் ஒரு கீர்த்தனை எழுதியிருக்கிறார். பலராலும் பாடப்படுகிறது. அதில் பரமஹம்ஸ முக சந்த்ர சகோரே என்று உள்ளது. இங்கு ஒரு விசேஷம் मैथिलनगरसुलोचनालोचनचकोरचन्द्र ! என்று ஸ்வாமி தேஶிகன் மஹா வீர வைபவத்தில் குறிப்பிடுகிறார். சகோரம் என்பது ஒரு வகைப் பறவை. அது தண்ணீரை அருந்தாதாம். பூர்ண சந்திரன் எப்பொழுது வருமென்று எதிர்பார்த்திருக்குமாம். நிலவைத் தான் பருகும். பல கவிகளும் குறிப்பிடுகிறார்கள். ஆனால் இங்கு ஸ்ரீ ஸதாஶிவ ப்ரம்மேந்த்ரர் குறிப்பிடுவது பரமஹம்ஸமுக என்கிற சந்த்ரனைப் பார்க்கத் துடிக்கிறதாக ராமனைச் சகோரம் என்கிறார். பகவானின் முகத்தைச் சந்த்ரனாக வைத்து முநிவர்களெல்லோரும் நேரில் பார்க்கத் துடிப்பார்களாம். ஆனால் முநிவர்களின் முகத்தைப் பார்க்க ராமன் துடித்தானாம். இது கவிகளின் ஸம்ப்ரதாயத்துக்கு மாறுபட்டிருந்தாலும் அத்புதமான வர்ணனை!

क्रमेलकं निन्दति कोमलेच्छुः क्रमेलकः कण्टकरम्पटस्थम्।
प्रीतौ तयोस्तुल्यबुधोस्समायां मध्यस्तदा नैकतरोपहासः ॥ ९५ ॥

நைஷதம் - ஸ்ரீ ஹர்ஷன்

ஒருவருக்குப் பிடித்த சுவை மற்றொருவருக்குப் பிடிக்காது. அவருக்கு பிடித்தது இவருக்குப் பிடிக்காது. ஒருவரை ஒருவர் கேலி செய்வது வழக்கம். இதைப் பற்றிப் பேசுகிறார் கவி. பசும்புல் வைக்கோல், நாணல் போன்றவற்றை உண்ணும் ஜீவன்கள் ஒட்டகத்தைக் கேலி செய்யுமாம். ஆனால் வேப்பிலையையும் முட்களையும், உண்ணும் ஒட்டகம் மற்ற ம்ருகங்களைக் கேலி செய்யும். அவரவர்க்குப் பிடித்ததைச் சாப்பிடுவது தான் இருவருக்கும் பசி தீர்ந்து த்ருப்தி என்னும் பலன் ஏற்படுகிறது. ஆகையால் ஒருவரைக் கேலி செய்வது நடுநிலைமை ஆகாது என்கிறார்.

சந்திரனில் உள்ள கறுப்பு நிறம் எதனால் ?

अङ्कं केऽपि शशङ्किरे जलनिधेः पङ्कं परे मेनिरे
सारङ्गं कतिचिच्च संजगदिरे भूच्छायमैच्छन् परे।
इन्दौ यद्दलितेन्द्रनीलशकलश्यामं दरीदृश्यते
तत्सान्द्रं निशि पीतमन्धतमसं कुक्षिस्थमाचक्ष्महे ॥ ९६ ॥

(ப்ரதாப ருத்ரீயம்)

சந்திரனிலிருக்கும் கருத்த ஒரு அடையாளத்தைச் சந்திரனுக்கு ஏற்பட்ட ஒரு மச்சம் என்று ஒரு சிலரும், கடலைக் கடையும் பொழுது ஒட்டிக் கொண்ட சேறு என்று சிலரும், சிலர் மான் என்றும், பூமியின் நிழல் என்று சிலரும் சொன்னார்கள். இந்த்ர நீல ரத்நத்தை - உடைத்த துண்டு போல் காணப்படும் இந்த அடையாளத்தை இரவு முழுவதும் சந்திரன் குடித்த இருளே அவன் வயிற்றுக்குள் காணப்படுகிறது என்று நாம் சொல்வோம்.

பாம்பு தேள் முதலியவற்றைக் கொல்லலாமா ?

இப்படி ஒரு ஸந்தேஹம் சிலருக்கு ஏற்படலாம். அதற்கு நம் பெரியோர் விடை கூறியுள்ளனர்.

मोदेतु साधुरपि वृश्चिकसर्पहत्या

பாம்பு தேள் முதலியவற்றை அடிப்பதால் ருஷிகள் கூட மகிழ்வர்.

மணிமந்த்ரௌஷதம்

भक्तापायभुजङ्ग गारुडमणिः त्रैलोक्य रक्षामणिः
गोपीलोचनचातकाम्बुदमणिः सौन्दर्यमुद्रामणिः ।
यः कान्तामणिरुक्मिणीघनकुचद्वन्द्वैकभूषामणिः
श्रेयो दैवशिखामणिः दिशतु नो गोपालचूडामणिः ॥ १७॥

முகுந்தமாலை

ஒரு ஸமயம் நானும் என் தர்ம பத்நியும் தீர்த்த யாத்ரைக்காகப் பேருந்தில் வடதேசம் சென்று கொண்டிருந்தோம். அப்பொழுது நல்லபொழுது போக்காகவும், நல்லபடி நம் எல்லோரையும் பெருமாள் யதாஸ்தாநம் கொண்டு சேர்ப்பிக்க வேண்டும் என்பதற்காகவும் பக்தி ஶ்லோகங்களைப் பாடும் வழக்கத்தை அநுஸரித்து ஸ்ரீ குலஶேகர ஆழ்வானின் மேலே கண்ட ஶ்லோகத்தைச் சொல்லி நிறுத்தினேன். அப்பொழுது ஒருவர், மணி, மந்த்ரம், ஔஷதம் மூன்றும் வாயாலேயே சொல்ல வேண்டும் என்றார். எனக்கு இந்த மூன்றின் பெருமை தெரிந்திருந்தாலும் சேர்த்துச் சொல்ல வேண்டும் என்கிற கருத்து மிகவும் பொருத்தமென்று தோன்றியது. மூன்றையும் சேர்த்தே முடித்துவிட்டேன்.

எரியும் நெருப்பு கூடச் சில ரத்நத்தை வைத்தால் அணைந்து விடும் என்பர் பெரியோர். மந்த்ரம், மருந்து இவற்றின் ஆச்சரியமான ஶக்தி எல்லோருக்கும் தெரிந்ததே. அதனால் இந்த மூன்று ஶ்லோகங்களை விருந்தாக அளிக்கிறேன்.

शत्रुच्छेदैकमन्त्रं सकलमुपनिषद्वाक्यसंपूज्यमन्त्रं
संसारोत्तारमन्त्रं समुपचिततमस्संघनिर्याण मन्त्रम्।
सर्वैश्वर्यैकमन्त्रं व्यसनभुजगसंदष्ट सन्त्राण मन्त्रं
जिह्वे श्रीकृष्णमन्त्रं जप जप सततं जन्मसाफल्यमन्त्रम्॥ ९८

व्यामोहप्रशमौषधं मुनिमनोवृत्तिप्रवृत्यौषधं
दैत्येन्द्रार्तिहरौषधं त्रिभुवने सञ्जीवनैकौषधम्।
भक्तात्यन्तहितौषधं भवभयप्रध्वंसनैकौषधं
श्रेयःप्राप्तिकरौषधं पिब मनः श्रीकृष्णदिव्यौषधम्॥ ९९॥

உடலுக்கும் உயிருக்கும் எத்தகைய ஸம்பந்தம்

वासांसि जीर्णानि यथा विहाय नवानि गृह्णाति नरोऽपराणि।
तथा शरीराणि विहाय जीर्णान्यन्यानि संयाति नवानि देही॥ १००॥

நாமெல்லோரும் நம் ஆடைகள் கிழிந்தும் ஶிதிலமாகவும் இருக்குமானால் அவற்றைக் கழித்து விட்டு எவ்வாறு வேறு வஸ்த்ரங்களை எடுத்துக் கொள்கிறோமோ, அதே போல் நம் ஆத்மாவும் மிகவும் தளர்ந்து போன ஶரீரத்தை விலக்கி விட்டு வேறு ஒரு ஶரீரத்தை எடுத்துக் கொள்கிறது.

பகவத் கீதை

மிகுந்த ஶ்ரமம் கவலை வரும்பொழுது பிறரிடம் சொல்லி அழுவது சரியா?

पूरोत्पीडे तटाकस्य परीवाहप्रतिक्रिया।
शोकोत्पीडे तु हृदयं प्रलापैरेव धार्यते॥ १०१॥

(உத்தரராமசரிதம்)

இதற்குப் பவபூதி விடையளிக்கிறார். ஏரி, பெரிய அணைகள் இவற்றுக்குத் தண்ணீர் அதிகரித்துக் கரை உடையும் ஆபத்து ஏற்படாமல் இருக்கக் கலங்கல் என்று எதிர்ப்புறத்தில் அதிக நீர் வெளியேற ஏற்பாடு செய்துள்ளனர். அது போல்

கவலை தாங்கமுடியாத நிலையிலிருக்குமானால் நண்பர்களிடம், உற்றாரிடம் சொல்லி வாய்விட்டு அழுதாலே ஶோகத்தின் தீவ்ரம் குறையும். ஆறுதல் கிடைக்கும்.

தீயாரின் இயல்

अकरुणत्वं अकारणनिग्रहः परधने परयोषिति च स्पृहा।
सुजनबन्धुजनेषु च वैरिता प्रकृतिसिद्धमिदं हि दुरात्मनाम्॥ १०२

(பர்த்ருஹரி)

ஈவு ஈரக்கம் இல்லாமை, காரணமின்றிச் சண்டையிடுதல், பிறர் பொருளிலும் பிறர் மனைவிகளிடமும் விருப்பம், நல்லோர் உற்றார் உறவினரிடம் பகை இவை தீயவர்களின் உடன் பிறப்பு.

ஒரு கவியின் வேதனை

अरसिकेषु कवित्वनिवेदनं शिरसि मा लिख मा लिख मा लिख॥ १०३

ரஸிகத் தன்மை இல்லாதவர்களிடம் நான் என் கவிதையைச் சொல்லும்படி, அப்பனே ! என் தலையில் எழுதாதே ! எழுதாதே ! எழுதாதே ! **வித்வாநேவ விஜாநாதி வித்வஜ்ஜநபரிஶ்ரமம் - கற்றாரைக் கற்றாரே காமுறுவர் என்பது** தான் இயல்பு. ஆனால் ஏழ்மையில் இருக்கும் சில கவிகள் அரசர்களிடம் கவிதைகளைப் பாடியதுண்டு. கேட்கும் அரசனுக்கு ஸம்ஸ்க்ருத ஞாநமும், ரஸிகத் தன்மையும் இருந்தால் மட்டுமே தாராளமாக ஸம்பாவனை செய்து பாராட்டுவான். இதற்கு மாறாக இருப்பவர்கள் பாராட்டுகளும் செய்யார், **கடனே** என்று ஓரிரண்டு ரூபாய் கொடுத்து அனுப்புவர். இந்த அநுபவத்தைப் பெற்றவர் தான் மேலே உள்ளபடி எழுதினார்.

ஶீலமில்லாத அறிவு பயனற்றது

नाच्छादयति कौपीनं न दंशमशकापहम्।
शुनःपुच्छमिवानर्थं पाण्डित्यं धर्मवर्जितम्॥ १०४॥

நாயின் வால் ஈக்களையும் கொசுக்களையும் ஓட்டுவதில்லை. மறைக்க வேண்டிய இடத்தை மறைப்பதுமில்லை. அதுபோல் ஶாஸ்த்ரங்களில் விதிக்கப்பட்ட கர்மங்களைச் செய்யாதவனுக்குப் பாண்டித்யம் இருந்தாலும் அது பயனற்றதாகும்.

ஆயுள் ஆரோக்யம் ஐஶ்வர்யம்

आरोग्यमिन्द्रियौल्बण्यं ऐश्वर्यं शत्रुशालिता।
वियोगो बान्धवैरायुः किं तत् येनात्र तुष्यति॥ १०५॥

நீண்ட ஆயுளும் ஆரோக்யமும், செல்வமும் பெற்று வாழ்க என்று வாழ்த்துகிறோம். ஶதமாநம் பவதி என்று நூறு ஆண்டு வாழ ஆஶீர்வதிக்கும்படி வேதமே வழிகாட்டுகிறது. ஆயினும் நூறாண்டு காலம் முழுமையாக வாழ்ந்த **ஸ்வாமி தேசிகனின்** அநுபவம் மேலே சொன்ன மூன்றுமே பயனற்றது என்கிற கருத்தை உணர்த்துகிறது.

நல்ல ஆரோக்யமிருந்தால் கை கால்கள் வாய் முதலிய புலன்கள் திமிர் பிடித்துத் தவறு செய்யத் தூண்டுகிறது. செல்வம் மிகுதியாக இருந்தாலோ பகைவர்கள் பலர் பலவகையில் தொந்தரவு செய்வர். நீண்ட ஆயுள் ஒருவனுக்கு இருந்தால் உற்றார், உறவினர், நண்பர்கள் போன்றவர்களின் பிரிவைக் காண நேர்கிறது. ஆகையால் இந்த மூன்றில் எதுவுமே பயனில்லை என்பது **ஸ்வாமியின்** தீர்மானம் (திருவுள்ளம்)

त्रयीचूडागुरुर्मे स्यात् पटुवाक्जालबोधकः।
यस्य संवीक्ष्य कविताः जगदेव विसिष्मये॥ १०६॥

ஆசிரியர் ஶ்ரீ ஶ்ரீ

अज्ञः सुखमाराध्यः सुखतरमाराध्यते विशेषज्ञः।
ज्ञानलवदुर्विदग्धं ब्रह्मापि नरं न रञ्जयति॥ १०७॥

(பர்த்ருஹரி)

ஒன்றுமே தெரியாத ஒருவனுக்குச் சில விஷயங்களைச் சொன்னால் அவன் எளிதில் புரிந்து கொள்வான். படித்தவர்கள் கொஞ்சம் சொல்லும் பொழுதே விஷயத்தை நன்றாகப் புரிந்து கொள்வர். ஆனால் அரைகுறையாகப் படித்துத் தன்னைத் தானே மேதாவி என்று நினைப்பவனை ப்ரம்ம தேவனே வந்தாலும் புரியவைக்க முடியாது.

இயற்கையிலேயே புத்தி பலவகை

वितरति गुरुः प्राज्ञे विद्यां तथैवाऽपरे जडे
न च खलु तयोर्ज्ञाने शक्तिं करोत्यपहन्ति वा।
भवति हि तयोः भूयान् भेदः फलं प्रति तद्यथा
प्रभवति मणिबिम्बग्राहे शुचिर्न मृदां च यः ॥ १०८ ॥

(உத்தரராம சரித்ரம்)

உபாத்யாயர் கெட்டிக்காரப் பையனுக்கும் மந்த புத்திக்கும் ஒரே வகையில் தான் போதிக்கிறார். அவர் ஒருவனுடைய புத்தியின் ஶக்தியை அதிகரிப்பதோ, மற்றவனுடைய புத்தியின் சக்தியைக் குறைப்பதோ கிடையாது. ஆனால் பரீக்ஷை வைத்தால் ஒருவன் 100 அல்லது 99 மதிப்பெண்கள் பெறுகிறான். சிலர் 40 வாங்குவதற்கே திணறுகிறார்கள். ஸ்படிகமோ கண்ணாடியோ நம் ப்ரதிபிம்பத்தை எடுத்துக்காட்டுகிறது. மண்சுவர் அப்படிக் காட்டுவதில்லை.

यौवनं धनसंपत्तिः प्रभुत्वं अविवेकिता।
एकैकमप्यनर्थाय किमु यत्र चतुष्टयम् ! ॥ १०९ ॥

வாலிபப்பருவம், மிகுந்த செல்வம், அதிகாரம் (பதவி), **அவிவேகிதா** (நல்ல அறிவு இல்லாமை) இந்த நான்கில் ஒவ்வொன்றுமே தீமையைத் தரவல்லது. நான்கும் ஓரிடத்தில் சேர்ந்தால் சொல்லவேண்டுமா ?

அமரஸிம்மனின் அழகிய மங்கள ஶ்லோகம்

यस्य ज्ञानदयासिन्धोः अगाधस्य अनघाः गुणाः।
सेव्यतां अक्षयो धीराः स श्रियै चाऽमृताय च ॥ ११० ॥

அமரஸிம்ஹன் ஒரு மஹா மஹா- பண்டிதர், ஜைந மதத்தைச் சார்ந்தவர். அவர் நாமலிங்கானுஶாஸநம் என்கிற நூலை எழுதியுள்ளார். ஸம்ஸ்க்ருதத்தைக் கற்றுத் தேர்ச்சி பெற விரும்புபவர்கள் ஆரம்பத்திலேயே இந்த நூலை முழுவதுமாகக் கற்க வேண்டும். அமரம் தெரியாதவன் மரம் என்பர். இவர் தன் நூலின் தொடக்கத்தில் மேலே காட்டியபடி மங்கள ஶ்லோகம் எழுதியுள்ளார். இதன் கருத்து பின் வருமாறு-

ஞாநம், தயை இவற்றுக்கு எவர் ஒருவர் கடல் போல் இருக்கிறாரோ, அக்கடல் மிகவும் ஆழமானது. மேலும் தீமையற்ற நற்குணங்கள் நிரம்பியவர், அப்படிப்பட்ட வரை புத்திமான்களே ஆஶ்ரயித்து, செல்வத்தையும், முக்தியையும் பெறுங்கள்.

இங்கே பாருங்கள்- நல்ல குருவைப் பற்றிப் பேசினார், அது புரிகிறது. இதில் மற்றொரு சிறந்த பொருள் அடங்கியுள்ளது. பாற்கடல் எவ்வளவு ஆழமானது ! ஒரு காலும் இக்கடல் வற்றாது. அதைக் கடைந்ததால் மஹாலக்ஷ்மியும் வெளிப்பட்டாள். அமுதமும் கிடைத்தது அன்றோ ! இவர் புகழ் அது போல் என்றென்றும் அழியாமல் நிற்கும்.

பெண்கள் ஒரு போதும் புருஷத் துணையின்றி இருக்கலாகாது

पिता रक्षति कौमारे भर्ता रक्षति यौवने।
रक्षन्ति स्थाविरे पुत्राः न स्त्री स्वातन्त्र्यमर्हति॥ १११॥

(மநுஸ்ம்ருதி 9.3)

பால பருவத்தில் தகப்பனாரும், குமரிப் பருவத்தில் கணவனும், முதுமையில் பிள்ளைகளும் காவந்தாக இருப்பர். ஆகையால் ஒரு பெண்மணி தனித்திருக்கலாகாது.

குறிப்பு:- இங்கு ஸ்வாதந்த்ர்யம் என்கிற சொல் பெண்களுக்கு ஸ்வதந்திரம் கிடையாது என்கிற வகையில் ஒரு ப்ரமையைத் தருகிறது. ஆனால் தனித்திருக்கலாகாது என்பது

தான் கருத்து. அதனால் நான் பின்வருமாறு திருத்தம் செய்கிறேன். योषिन्नैकाकिनी वसेत् என்று. பண்டிதர்கள் தங்கள் கருத்தைச் சொல்ல வேண்டுகிறேன்.

लालयेत्पञ्च वर्षापि दश वर्षाणि शिक्षयेत्।
प्राप्ते तु षोडशे वर्षे पुत्रं मित्रवदाचरेत्॥ ११२॥

நீதி சாஸ்த்ரம்

முதல் ஐந்து வருடங்கள் பிள்ளையைச் சீராட்டியும் அடுத்த 10 ஆண்டுகள் கண்டிப்புடனும் வளர்க்க வேண்டும். 16 வது வயது முதல் நண்பன் போல் அவனுடன் பழக வேண்டும். தோளுக்கு மிஞ்சினால் தோழன்!

நல்லார் நட்பும் தீயவர் நட்பும் உவமை

आरम्भगुर्वी क्षयिणी क्रमेण लघ्वी पुरा वृद्धिमुपैति पश्चात्।
दिनस्य पूर्वार्ध परार्ध भिन्ना छायेव मैत्री खलसज्जनानाम्॥ ११३

(பர்த்ருஹரி)

காலையில் நம் நிழல் மிகவும் நீண்டிருக்கும். பிறகு கொஞ்சம் குறைந்து நம் காலடியில் வந்து விழும். பிற்பகலில் வளர்ந்து மீண்டும் மிகவும் நீண்டிருக்கும். இதைப் போலவே தீயவர்களின் நட்பு முதலில் பெரியதாக இருந்து பிறகு அழிந்து போய் விடும். நல்லார் நட்பு தொடக்கத்தில் சிறிதாக இருந்தாலும், நாட்கள் செல்லச் செல்ல வளரும், பர்த்ருஹரியின் இந்த உவமை மிகவும் பாராட்டத் தக்கது.

ஒரே பொருள் இடத்துக்குத் தக்கபடி சிறப்புப் பெறுகிறது

सन्तप्तायसि संस्थितस्य पयसो नामापि न श्रूयते
मुक्ताकारतया तदेव नलिनीपत्रस्थितं राजते।
स्वात्यां सागरशुक्तिमध्यपतितं तन्मौक्तिकं जायते
प्रायेणाऽधममध्यमोत्तमजुषां एवं विधाः वृत्तयः॥ ११४॥

நன்றாகக் காய்ச்சிய இரும்பில் ஒரு சொட்டு நீர் விழுந்தால் இருந்த இடம் தெரியாமல் மறைந்து விடுகிறது. ஆனால் அதே ஒரு துளி நீர் தாமரை இலை மேலிருந்தால் அங்கு (ஒட்டாமல்) முத்துப் போல் காட்சியளிக்கிறது. அதே துளி, கடலில் ஸ்வாதி நக்ஷத்திரத் தன்று முத்துச் சிப்பியில் விழுந்தால் முத்தாகவே மாறிவிடும். இது போல் தான் நட்பும். நல்லவருடன் நட்பு முத்துப் போல் விளங்கும். உத்தமர் உறவு மனிதனை உத்தமன் ஆக்கும். தீயோருடன் உறவு மனிதனை அழித்துவிடும்.

सूते सूकरयुवतिः सुतशतमतिदुर्भगं झटिति।
करिणी चिराय सूते सकलमहीपाललालितं कलभम्॥ ११५॥

(கவிதார்க்கிக ஸிம்ஹம்)

பெண் பன்றி பல குட்டிகளை அடுத்தடுத்து ஈன்று எடுக்கிறது. ஆனால் ஒரு பெண் யானை பல ஆண்டுகள் கர்ப்பமாக இருந்து ஈன்று எடுக்கும் ஆண் குட்டியை அரசர்கள் அனைவரும் மகிழ்ச்சியுடன் வாங்கிக் கொஞ்சிக் குலாவி வளர்க்கின்றனர்.

தக்ஷிணாமூர்த்தி ஏன் பேசாமலிருக்கிறார்?

தக்ஷிணாமூர்த்தி என்பவர் தெற்கு நோக்கிக் கண்ணை மூடிக் கொண்டு வீற்றிருக்கிறார் என்றும், அவர் வாலிபப் பருவத்திலிருந்தாலும் அவரிடம் வந்து பக்தி செய்பவர் வயது முதிர்ந்தவர் என்று சொல்லப்படுகிறது. ஶ்லோகம் பின்வருமாறு-

चित्रं वटवरोर्मूले वृद्धाः शिष्याः गुरुर्युवा।
गुरोस्तु मौनं व्याख्यानं शिष्यास्तु छिन्नसंशयाः॥ ११६॥

இந்த விஷயத்தை எடுத்துக்காட்டிய கவிதார்கிக ஸிம்ஹம் அவர் பேசாமல் இருப்பதற்குக் காரணம் கூறியிருக்கிறார் ஸுபாஷிதநீவீயில்-

नवदलपुटे कल्प्या यस्य प्रभोरपि तल्पधीः।
नटपरिबृढो यस्याधस्ताच्छ्रमं शमयिष्यते॥ ११७॥

இந்த ஶ்லோகம் முன்பே காண்பிக்கப்பட்டுள்ளது. ஆயினும் அவர் கண்ணை மூடிக் கொண்டிருப்பதின் காரணம் இதில் கூறப்பட்டுள்ளது. ருத்ரன் மஹாப்ரளயகாலத்தில் ஸம்ஹார மூர்த்தியாக இருந்து எல்லாவற்றையும் அழிக்கிறார் என்றும், அந்த ஶ்ரமம் நீங்குவதற்காக ஆலமரத்தினடியில் கண்ணை மூடிக் கொண்டிருக்கிறார் என்றும் கூறப்பட்டுள்ளது..

ஶீலம் பரம் பூஷணம் - ஒழுக்கம் உயிரினும் ஓம்பப்படும்

शीलं विशिष्यते प्राणात् शीलं परं भूषणम्। ११८।

மொழி பெயர்ப்பு

उत्तमादुत्तमश्चाहं अधमादधमोऽपि च।
आचार्यदृष्ट्या तूत्कर्षः वैष्णवत्वाच्च दासता॥ ११९॥

வேதம், தர்ம ஶாஸ்த்ர காவ்ய நாடகாதிகள்

यद्वेदात्प्रभुसंमितादधिगतं शब्दप्रमाणाच्चिरं
यच्चार्थप्रवणात् पुराणवचनात् इष्टं सुहृत्संमितात्।
कान्तासम्मितया यया सरसतामापाद्य काव्यश्रिया
कर्तव्ये कुतुकी बुधो विरचितः तस्यै स्पृहां कुर्महे॥ १२०॥

(ப்ரதாப ருத்ரீயம்)

ஒரே விஷயத்தைக் கடுமையாகவும் பேசலாம். ஸாதாரணமாகவும் பேசலாம். குழையக் குழையப் பேசித் தட்டிக் கொடுத்தும் பேசலாம். இது நம் அநுபவத்தில் கண்ட உண்மை. ஒருவனிடம் ஒரு கார்யம் செய்யும்படிச் சொல்கிறோம். ஆனால் அவன் தனக்கு வேலைகள் இருப்பதாகவும், போக வேண்டிய இடம் வெகு தூரம் என்றும் மறுப்புச் சொல்கிறான். அப்பொழுது நாம் அவனை, அப்பா!

என்று தட்டிக் கொடுத்து நீ மிகவும் நல்லவன் ஆயிற்றே, ஸைக்கிள் தருகிறேன், கொஞ்சம் போய் விட்டு வந்து விடுப்பா ! என்றால், அவன் சரி என்று சொல்லி அதை முடிக்கிறான். அது போல் வேதம் ஓர் அரசனின் கட்டளை போல் செய், செய்யாதே என்று கட்டளையிடுகிறது. தர்ம ஶாஸ்த்ரம் நண்பன் போலக் கொஞ்சம் லலிதமாக, செய்தால் நல்லது, செய்யாவிடில் பாபம் என்று பேசுகிறது. ஆகையால் இந்த இரண்டையும் விட்டு ஒரு காவ்யம் மனைவி போல் இருந்து மிகவும் லலிதமாகப் பேசுகிறது. அவற்றிலும் தர்மமே உபதேஶிக்கப்படுகிறது. ஆகையால் நான் அந்தக் காவ்ய நாடகங்களையே எழுதப் போகிறேன் என்கிறார்.

ज्वलति चलितेन्धनोऽग्निः विप्रकृतः पन्नगः फणां कुरुते।
प्रायः स्वं महिमानं क्षोभात् प्रतिपद्यते हि जनः ॥ १२१ ॥

(ஶாகுந்தலம்)

दृष्टिपूतं पदं न्यस्येत् वस्त्रपूतं जलं पिबेत्।
सत्यपूतं वदेत् वाचं मनःपूतं समाचरेत् ॥ १२२ ॥

நீதி ஶாஸ்த்ரம்
ஸம்ஸ்க்ருத ப்ரசாரிணீ ஸபா

तत्र मित्र ! न वस्तव्यं यत्र नास्ति चतुष्टयम्।
ऋणदाता च वैद्यश्च श्रोत्रियः सजला नदी ॥ १२३ ॥

நீதி ஶாஸ்த்ரம்

நண்பனே ! கடன் கொடுப்பவர், நல்ல மருத்துவர், நன்கு படித்து உணர்ந்த வைதிகன், ஜீவநதீ இந்த நான்கும் இல்லாத இடத்தில் வஸிக்கலாகாது.

யார் யார் எதனால் கெடுவர் ?

असन्तुष्टो द्विजो नष्टः सन्तुष्टश्चैव पार्थिवः।
सलज्जा गणिका नष्टा निर्लज्जा च कुलाङ्गना ॥ १२४ ॥

நீதி ஶாஸ்த்ரம்
ஶாரதா விலாஸ் புக் டிபோ

போதும் என்கிற மனப்பான்மை இல்லாத அந்தணன் கெடுவான். ஒரு அரசன் இது போதும் என்கிற எண்ணம் கொண்டால் அதனால் கெடுவான். வெட்கமுள்ள விலைமாது கெடுவாள். வெட்கமில்லாத நற்குல ஸ்த்ரீ கெடுவாள்.

शतेषु जायते शूरः सहस्रेषु च पण्डितः ।
वक्ता शतसहस्रेषु कविर्भवति वा न वा ॥ १२५ ॥

நீதி ஶாஸ்த்ரம்

ஆயிரம் பேர்களில் ஒரு ஶூரன் இருப்பான். பல ஆயிரம் பேர்களில் ஒரு அறிவாளியான பண்டிதன் இருப்பான். லக்ஷம் பேர்களில் ஒருவனே நல்ல பேச்சுத் திறன் உள்ளவனாக இருப்பான். ஒரு நல்ல கவிஞன் லக்ஷத்தில் ஒருவன் இருப்பானா என்பது ஸந்தேஹமே!

குறிப்பு:- இங்கு நான்காவது பாதத்தில் நல்ல கொடையாளி இருப்பானு என்றே உள்ளது. அதுவும் சரியே. நான் தான் அந்த இடத்தில் கவிஞனைப் பொருத்தினேன். கவிஞனும் அரிதினும் அரிதே அன்றோ?

औत्सुक्यमात्रमवसाययति प्रतिष्ठा
क्लिश्नाति लब्धपरिपालनवृत्तिरेवम् ।
नऽतिश्रमापनयनाय न च श्रमाय
राज्यं स्वहस्तधृतदण्डमिवाऽऽतपत्रम् ॥ १२६ ॥

ஶாகுந்தலம்

ஶாகுந்தலத்தில் அரசன் தனக்குத் தானே பேசிக் கொள்வதாகக் காளிதாஸன் இந்த ஶ்லோகத்தை அமைத்தான். அரசாட்சி என்பது ஆசையைப் பூர்த்தி செய்யும். அவ்வளவு தான். ஆனால் அப்பப்பா! கிடைத்த அதிகாரத்தை நன்கு நிறைவேற்றுவதென்பது மிகவும் கடிநமான வேலை என்று இப்பொழுது தான் தெரிகிறது. ஒருவன் வெய்யிலுக்காக தன் கையாலேயே குடையைப் பிடித்துக் கொண்டு செல்லும் போது, காற்று சற்று வேகமாக அடித்தால் அழுத்தமாகக் குடையைப் பிடித்துக் கொள்ள வேண்டி வருகிறது. அதனால்

ப்ரமும் உள்ளது. ஸங்கமும் உள்ளது. இப்படித்தான் ஆட்சிப் பொறுப்பும்.

भगवद्गीता किंचितधीता गङ्गजललवकणिका पीता।
सकृदपि येन मुरारिसमर्चा क्रियते तस्य यमेन न चर्चा॥ १२७॥

பஜகோவிந்தம்

यास्यत्यद्य शकुन्तलेति हृदयं संस्पृष्टमुत्कण्ठया
कण्ठः स्तम्भितबाष्पवृत्तिकलुषश्चिन्ताजडं दर्शनम्।
वैक्लव्यं मम तावदीदृशमहो! स्नेहादरण्यौकसः
पीडयन्ते गृहिणः कथं नु तनयाविश्लेष दुःखैर्नवैः॥ १२८॥

ஶாகுந்தலம்

मान्धाता स महीपतिः कृतयुगलाङ्कारभूतो गतः
सेतुर्येन महोदधौ विरचितः क्वाऽसौ दशास्यान्तकः?।
अन्ये चापि युधिष्ठिरप्रभृतयो याताः दिवं भूपते!
नैकेनापि समं गता वसुमती नूनं त्वया यास्यति॥ १२९॥

போஜ சரித்ரம்

போஜ மஹாராஜன் காலத்தில் நிகழ்ந்த ஓர் நிகழ்ச்சி. போஜன் இளமையில் இருந்த போது இவனுக்குத் தான் அரசு பதவி வஹிக்க உரிமை என்பதை அறிந்த அவனுடைய சிறிய தகப்பனார் ஏதோ சில காரணங்களைச் சொல்லி இவனைக் கொன்று விடுங்கள் என்று ஆணையிட்டார். கொலையாளிகளும் கொலை களத்துக்குப் போஜனை அழைத்துச் சென்றனர். அங்கு சென்றவுடன் போஜன் அவர்களைப் பார்த்து ஒரு ஶ்லோகம் எழுதித் தருகிறேன். இதை என் சித்தப்பாவிடம் கொடுங்கள். அவர் என்ன சொல்கிறார் என்பதைக் கேட்டு வாருங்கள் என்றான். அவ்வாறே ஒருவன் அந்தச் சீட்டைச் சித்தப்பாவிடம் கொடுத்தான். அதில் மேலே உள்ள ஶ்லோகம் குறிப்பிடப்பட்டு இருந்தது. அதன் கருத்து-

"அரசே ! க்ருத யுகத்தில் மாந்தாதா என்று ஓர் அரசன் இருந்தார். அவர் பல சிறப்புகள் உடையவர். அவர் இறந்தார். கடலில் அணை கட்டினார் ராமன். பத்துத் தலை ராவணனை வதைத்தவர். அவர் எங்கே ? யுதிஷ்டிரன் முதலான பற்பல அரசர்களும் பிற்காலத்தில் ஆட்சி செய்து மடிந்தனர். இவர்கள் யாருடனும் பூமி உடன் செல்லவில்லை. ஆனால் உம்முடன் இந்த பூமி வரப்போவதாக நான் நினைக்கிறேன் என்று.

இதைப் படித்தறிந்த சித்தப்பா போஜனை விடுதலை செய்யும்படி எழுதி உத்திரவிட்டார். போஜனும் மீண்டான். நல்லாட்சி செய்தான்.

भट्टिर्नष्टो भारविस्सोपि नष्टः भिक्षुर्नष्टो भीमसेनोऽपि नष्टः ।
भुक्कुण्डोऽहं भूपतिस्त्वं हि राजन् ! भभ्भावल्यां अन्तकस्सन्निविष्टः ॥

॥ १३० ॥

திருடன் ஒருவனுக்குத் தூக்கு தண்டனை அளித்துவிட்டான் போஜன். திருடன் மிகவும் புத்திஶாலி ! அரசே ! ஓர் விண்ணப்பம். நான் மறிப்பதைப் பற்றி நான் வருத்தப்படவில்லை. ஆனால் ஒன்றை நினைத்து மிகவும் வருத்தப்படுகிறேன். பட்டி என்று ஓர் கவி இருந்தார். அவர் இறந்து விட்டார். பாரவி என்று கவி இருந்தார். அவரும் காலமாகிவிட்டார். பீமஸே நனும் காலமாகிவிட்டார். அரசே ! காலமானவர்களின் பெயர் வரிசையைப் பார்த்தால். ப, பா, பி, பீ எனும் எழுத்து வரிசையில் யமன் புகுந்திருப்பதாகத் தெரிகிறது. அதாவது இவ்வெழுத்துக்களைப் பெயர் ஆரம்பத்தில் உள்ளவர்களின் உயிரை யமன் மாய்க்கத் தீர்மானித்து விட்டதாகத் தெரிகிறது. என் பெயர் புக்குண்டன். நான் மரித்து விட்டால் அடுத்தது பூபதியான தாங்கள் தான். இதைப் பற்றித் தான் நான் மிகவும் வருந்துகிறேன் என்றான். இதைக்கேட்ட அரசன் பயந்து அவனை உடனே விடுதலை செய்து விட்டானும் ! என்னே திருடனின் மதி நுட்பம் !

யாரோ ஒருவன் எழுதிய ஶ்லோகம்

अन्नादष्टगुणं पिष्टं पिष्टादष्टगुणं पयः।
पयसोऽष्टगुणो माषः माषादष्टगुणं घृतम् ॥ २३१

நீதி ஶாஸ்த்ரம்

சோற்றைவிட மாவு எட்டு மடங்கு சிறப்புடையது. மாவை விட எட்டு மங்கு சிறந்தது பால். பாலைக் காட்டிலும் எட்டு மடங்கு சிறந்தது உளுந்து. உளுந்தை விட எட்டு மடங்கு சிறந்தது நெய்யாகும்.

दातव्यं भोक्तव्यं सति विभवे संग्रहो न कर्तव्यः।
पश्येह मधुकराणां सञ्चितमर्थं हरन्त्यन्ये॥ १३२

நீதி ஶ்லோகம்

செல்வம் இருந்தால் அதைத் தானும் நன்கு அநுபவித்துப் பிறர்க்கும் கொடுக்க வேண்டும். மேலும் மேலும் சேர்க்க வேண்டுமென்ற எண்ணம் கூடாது. பாருங்கள் ! தேனீக்கள் பல இடங்களிலிருந்து தேனைக் கொண்டு வந்து தங்கள் கூட்டில் சேர்த்து வைக்கின்றன. பிறர் அவைகளை விரட்டித் தேனை எடுத்துச் சென்று விடுகின்றனர்.

दानं भोगो नाशस्तिस्रो गतयः भवन्ति वित्तस्य।
यो न ददाति न भुङ्क्ते तस्य तृतीया गतिर्भवति॥ १३३

நீதி ஶ்லோகம்

பணத்திற்கு மூன்று நிலைகள். தாநம், அநுபவித்தல், நாஶம் என்று. எவனொருவன் தாநம் செய்யாமலும், அநுபவிக்காமலும் இருந்தால் அவனுடைய த்ரவ்யத்திற்கு மூன்றாவது நிலை தான் ஏற்படும். அதாவது நாஶம்.

மேலே சொன்ன கருத்தைத் தழுவியே இதுவும் உள்ளது.

கேள்வி பதில்

குறிப்பு:- பண்டிதர்கள் கேள்வியை ரஸிக்க வேண்டுகிறேன்.

का सा कासारसागरमध्यस्था ? क्षीरसागरकन्यका।
किं कार्यमस्याः ? आगत्य पद्मपीठोपवेशनम्॥ १३४॥

ஆசிரியர்

स्वस्ति हस्तिगिरि मस्तशेखरः सन्तनोतु मयि सन्ततं हरिः।
निस्समाभ्यधिकमभ्यधत्त यं देवमौपनिषदी सरस्वती॥ १३५॥

வரதராஜஸ்தவம்

கூரத்தாழ்வான் என்கிற மஹான் எழுந்தருளியிருந்தார். உடையவருக்கு ஸமகாலம். இவரை ஸ்ரீ வத்ஸசிஹ்நமிஶ்ரர் என்றும் கூறுவர். இந்த ஸ்வாமி ஐந்து ஸ்தோத்ரங்கள் எழுதியிருக்கிறார். அதில் ஒன்று வரதராஜஸ்தவம். அதில் முதல் ஶ்லோகம் மேலே குறிப்பிடப்பட்டுள்ளது.

விநாயகர் வருத்தம்

विषाणं त्रुटितं मेऽभूत् भारतस्य कृते पुरा।
मतिमान्द्यात् तदा हीदं अविचिन्त्य कृतं मया।
विषण्णोऽहं विचिन्त्येदं सर्वदाऽस्मि अविवाहितः॥ १३६॥

ஆசிரியர் ஸ்ரீ ஸ்ரீ

அத்வைத பண்டிதர்கள் மேலே குறிப்பிடப்பட்ட விஷயம் பற்றி என் மீது கோபம் கொள்ள மாட்டார்கள் என்று நம்புகிறேன்.

ஶிஶுபாலவத காவ்யத்தில் நாரதர் ஸ்ரீ க்ருஷ்ணனிடம் வந்து அவர் அவதரித்த கார்யத்தை நினைவூட்டி வியப்பு உத்வேகம் ஏற்படுத்துவதற்காக ஹிரண்யகஶிபு, ராவணன் இவர்கள் வ்ருத்தாந்தத்தைச் சொல்லி, ராவணன் ஒரு ஸமயம் தன் மனைவிகளுக்குத் தந்தத்தினால் சீப்பு முதலிய பொருள்கள் கொடுக்க வேண்டுமென்பதற்காக விநாயகரின் தந்தத்தை ஒடித்து எடுத்துக் கொண்டான் என்றும் அது இன்னமும் வளராமலேயே உள்ளது பாருங்கள் என்கிறார்.

மாகனுக்கேற்பட்ட ஒரு கற்பனை எனக்கு ஸ்ரீ ஹயக்ரீவ ப்ரஸாதமாக வந்தது என்று இங்கே குறிப்பிட விரும்புகிறேன்.

प्रससादोदयादम्भः कुम्भयोनेर्महौजसः।
रघोः परिभवाशङ्कि चुक्षुभे द्विषतां मनः॥ १३७॥

ரகுவம்ஶம் 4-21

ஆகாயத்தில் அகஸ்த்ய நக்ஷத்ரம் உதயமாயிற்றாம். அதன் மஹிமையால் கலங்கிய நீரெல்லாம் தெளிந்ததாம். ஆனால் ரகுவிடம் தோற்றுவிடுவோமென்று பயந்த பகைவர்களின் மனம் மட்டும் கலங்கியதாம். ஆஹா ! காளிதாஸனின் வர்ணனை !

आगमान्तविनुतं परात्परं रागमानमदमूलनाशनम्।
श्वासवेगसमयेऽभ्युपैतु मां वासवादिमहितं नमामि तम्॥ १३८

ஆசிரியர் ஸ்ரீ ஸ்ரீ

भोगिवेष्टनमार्गेषु चन्दनानां समर्पितम्।
नास्रसत् करिणां ग्रैवं त्रिपदीच्छेदिनामपि॥ १३९॥

ரகுவம்ஶம் 4-48

ரகுவின் திக்விஜய யாத்ரை வர்ணிக்கப்படுகிறது. தெற்கு திசை வர்ணனை. ரகுவின் திமிர் பிடித்த யானைகளைக் கழுத்தில் சங்கிலியைப் பூட்டி அதன் மறுமுனையை, சந்தந மரங்களில் பாம்புகள் சுற்றி இருந்த இடம் தேய்ந்து பள்ளமாக இருக்கும் இடத்தில் பூட்டப்பட்டிருப்பதால் யானைகள் காலில் கட்டிய சங்கிலியை அறுத்தாலும் அது அறுபடவில்லை. சந்தந மரங்களில் பாம்பு சுற்றியிருக்கும் என்பது குறிப்பிடத்தக்கது.

हरत्यघं संप्रति हेतुरेष्यतः शुभस्य पूर्वाचरितैः कृतं शुभैः।
शरीरभाजां भवदीयदर्शनं व्यनक्ति कालत्रितयेऽपि योग्यताम्॥ १४०

ஶிஶுபாலவதம் 1-26

ஆகாயத்திலிருந்து இறங்கிய நாரதரை வரவேற்று ஸ்ரீ க்ருஷ்ணன் ஆஸநத்தில் உட்கார வைக்கிறார். நாரதரும் தன் கமண்டலுவில் ஸேகரித்து வந்த பல புண்ய தீர்த்தங்களைத் தன் கையிலெடுத்து க்ருஷ்ணன் மீது ப்ரோக்ஷித்தார். அதை नतेन मूर्ध्ना हरिः अग्रहीदपः என்கிறபடி தலை வணங்கி ஏற்றுக் கொண்டார். அப்பொழுது ஸ்ரீ க்ருஷ்ணன் சொன்னார். உங்களைப் போன்ற மஹர்ஷிகளைக் காண்பதால் அப்பொழுது உள்ள பாபம் நீங்குகிறது. வரும் காலத்தில் நல்ல ஶுபங்கள் நடக்கும் என்பதற்குக் காரணமாக அமைகிறது. முன்பு செய்த புண்யங்களால் தான் தர்ஶநம் கிடைத்தது. ஆகையால் முக்காலங்களிலும் பாக்யத்தை தர்ஶநம் சாப்பிடுகிறது.

குருபரம்பரை த்யாநம்

गुरुपङ्क्तिमुपास्महे सदा मरुकान्तारतृषार्दिता वयम्।
गरुडध्वजभक्तिजीवनां तरुमूलस्यतटी वटे यथा॥

ஆசிரியர் ஸ்ரீ ஸ்ரீ

பூரி ஜகந்நாதப் பெருமாளை ஸேவிக்கும்படியான பாக்யம் கிடைத்தது. பெருமாள் ஸேவை மிகவும் நல்ல வகையில் கிடைக்கப் பெற்று நேற்று வந்து சேர்ந்தோம். இன்று காலை குருபரம்பரை விஷயமாக ஸ்ரீ வெள்ளைப்பரிமுகரின் க்ருபையால் இந்த ஶ்லோகம் அமைந்தது. பண்டிதர்களுக்கு நல்ல விருந்தாக அமையுமென்று நினைக்கிறேன்.

புதுமைக் கவிதை
பாற்கடலில் பள்ளி கொண்டவனுக்குக் கம்பளம்

सततमुदधिमध्ये भोगिपर्यङ्कशायिन्!
अपि कुशलमिति त्वां प्रष्टुकामाः वयं स्मः।
यदि शिशिरभयात् त्वं मुक्तिकामस्तदा ते
वयमचिरकलातः कम्बलान्याहरामः॥ १४२॥

ஆசிரியர் ஸ்ரீ ஸ்ரீ

இதுவும் பண்டிதர்களுக்கு ஒரு விருந்து.

சம்பூராமாயணம், பாரத சம்பூ இந்த இரண்டில் கீழ் வரும் இரண்டு ஶ்லோகங்கள் உள்ளன.

சம்பூராமாயணம்

लक्ष्मीं तनोतु नितरामितरानपेक्षं
अङ्घ्रिद्वयं निगमशाखिशिखा प्रवालम्।
हैरम्बं अम्बुरुहडम्बरचौर्यनिघ्नं
विघ्नाद्रिभेदशतधारदुरन्धरं नः ॥ १४३ ॥

இங்கு விநாயகரின் திருவடியை வேதமென்கிற மரத்தின் கிளையில் விளங்கும் துளிராக ஒரு கவி வர்ணித்தார். இது மிகவும் நேர்த்தியானதே. ஆனால்,

பாரதசம்பூ

कल्याणं वो विधत्तां करटमदधुनी लोलाकल्लोलमाला–
खेलल्लोलम्बकोलाहलमुखरितदिक्चक्रवालान्तरालम्।
प्रत्नं वेतण्डरत्नं सततपरिचरत्कर्णतालप्ररोह–
द्वातांकूराजिहीर्षा दरविवृत फणाभृङ्गभूषा भुजङ्गम्॥ १४४

பாரத சம்பூ

இந்த ஶ்லோகத்தில் கவி ஸாதாரண யானைகளுக்குச் சில காலங்களில் ஏற்படும் மத ஜலப் பெருக்கு, விநாயகருக்கும் இருந்ததாகச் சொல்லியிருப்பது தகுமா என்பது என்னுடைய ஸந்தேஹம். பண்டிதர்கள் சரியான விளக்கம் கூறினால் நலம்.

विश्वं विष्णुर्व्यधात् पूर्वं नरनारीमृगान् खगान्।
नरो गुरुं प्रपद्याऽऽशु विस्तरेज्जन्मसन्ततिम्॥ १४५ ॥

ஆசிரியர் ஸ்ரீ ஸ்ரீ

பாட பேஶாதநம்

एवं सर्वत्रमच्छिद्रं नामद्वादशपञ्जरम्।
प्रविष्टोऽहं न मे किंचित् भयमस्ति कदाचन॥ १४६॥

நாம் விஷ்ணு ஸஹஸ்ரநாம ஸ்தோத்ரம் சொல்லி முடித்து பஞ்சாயுத ஸ்தோத்ரம் சொல்லி அதன் பிறகு புரஸ்தாத் கேஶவ: பாது என்று தொடங்கி த்வாதஶ நாம பஞ்ஜரம் என்பதைச் சொல்லி முடிக்கிறோம். இதில் 12 திருநாமங்களும் சேர்ந்து வலுவான கூண்டு என்றும், அதற்குள் நாம் இருப்பதாகவும் அதில் எங்கும் ஓட்டையில்லை என்றும், அதனால் நமக்கு ஒரு போதும் பயமில்லை என்றும் கூறப்பட்டுள்ளது. இங்கு அச்சித்ரம் என்பதற்கு ஓட்டையில்லை என்பது பொருள். இது சரியே. ஆனால் ஸர்வத்ரம் என்கிற வார்த்தை இங்கு பொருந்தாது. எல்லோரையும் காப்பது என்கிற பொருளில் ஸர்வத்ரம் என்பதில் ஶப்த தோஷம் இல்லையென்றாலும் இந்த இடத்தைக் கருதி ஓரிடத்திலும் எங்கும் ஓட்டை இல்லை என்கிற பொருளில் ஸர்வத்ர என்கிற வார்த்தையே மிகவும் பொருத்தமானது. அப்பொழுது அச்சித்ரம் சேரமுடியாது. ஆகையால் ஸர்வத்ர நிஸ்சித்ரம் என்று திருத்தம் செய்து வாசிப்பதே நல்லது. இதை எனக்கு ஒரு பெரியவர் 80 வருடங்களுக்கு முன்பு சொன்னார். இதைப் பண்டிதர்கள் கவனிக்க வேண்டுகிறேன்.

இதுவும் அதுவே

श्रीराम राम रामेति रमे रामे मनो रमे।
सहस्रनाम तत्तुल्यं राम नाम वरानने! ॥ १४७॥

பார்வதி **கேநோபாயேந லகுநா** என்று தொடங்கி **ஸஹஸ்ரநாமத்தைச்** சொல்ல முடியாத ஸமயத்தில் பண்டிதர்கள் லகுவான எந்த உபாயத்தைச் சொல்லிப் பலன் பெறலாம் என்று கேட்க அதற்கு ஈஶ்வரன் மேலே கண்ட ஶ்லோகத்தைச் சொன்னார். இதையே தான் நான் எப்பொழுதும் சொல்லிக் கொண்டிருக்கிறேன். இது

ஸஹஸ்ரநாமத்துக்கு ஸமமானது என்று சொன்னார். இங்கு நன்றாக கவனிக்க வேண்டும். **ஸ்ரீ ராம ராம ராம என்று** சொன்னால் அது ஸஹஸ்ரநாமத்துக்கு ஸமம் என்று ஈஸ்வரன் சொன்னார். ஆனால் எல்லோரும் சொல்லும் பாடம் **ஸஹஸ்ரநாம தத்துல்யம்**, ஸஹஸ்ர நாமம் அதற்கு ஸமம் என்று கருத்து கூறுவதாக அமைந்திருக்கிறது. இதுவும் ப்ரகரணத்துக்குப் பொருந்தாது. **ஸஹஸ்ரநாமதஸ்துல்யம்** என்று திருத்தி வாசித்தால், **ராம நாமம் ஸஹஸ்ர நாமத்துக்கு** ஸமம், என்று பொருள் கிடைக்கும். **सति विभक्तिकः सति** என்பது வ்யாகரண ஸித்தாந்தம். பண்டிதர்கள் கவனிக்க வேண்டுகிறேன்.

நவரத்நங்களில் ஒன்று

चतुर्वेदीपीठे विलसति चतुर्बाहुरतुलः
घनश्यामो देवः सह कमलया भूरिकृपया।
चतुर्वर्गं दिश्यात् फलमयमशेषाय जगते
समर्थस्सर्वज्ञः चतुरुदधिभूमावविकलम्॥ १४८॥

ஸ்ரீமத் ராமாயணம், ஸ்ரீமத் மஹாபாரதம், ஸ்ரீமத் பகவத் கீதை பற்றிய ஶ்லோகங்கள்

वाल्मीकिगिरिसंभूता रामसागरगामिनी।
पुनातु भुवनं पुण्या रामायणमहानदी॥ १४९॥

नमोऽस्तु ते व्यास ! विशालबुद्धे ! फुल्लारविन्दायतपत्रनेत्र !।
येन त्वया भारततैलपूर्णः प्रज्वालितो ज्ञानमयः प्रदीपः॥ १५०॥

सर्वोपनिषदो गावः दोग्धा गोपालनन्दनः।
पार्थो वत्सः सुधीर्भोक्ता दुग्धं गीतामृतं महत्॥ १५१॥

மேலே கண்ட மூன்று ஶ்லோகங்கள் ஸ்ரீ வைஷ்ணவர்கள் பலருக்குத் தெரியாமல் இருக்கலாம். அதற்காகவே இவற்றைக் குறிப்பிட்டேன்.

த்ரௌபதீ வஸ்த்ராபஹரணம்

ताद्दशे समुपस्थिते परिभवे सभ्येषु वाचंयमे-
ष्वाध्यायत्सु विधेर्बलं स्वदयितेष्वन्येष्वशक्तेष्वपि।
निश्चित्याऽऽर्तिमतां गतिं यदुपतिं नीव्यां करं कुर्वती
सा चक्रन्द तदोच्चकैरिह हरे ! त्रायस्व हा ! मामिति॥ १५२॥

வேணீ ஸம்ஹாரம்

குறிப்பு :- இந்த ம்லோகம் **மார்தூல விக்ரீடித** வ்ருத்தத்தில் அமைந்துள்ளது. இதே கருத்தை வைத்து நான் ஒரு ம்லோகம் எழுதினேன். அதுவும் **மார்தூல விக்ரீடித வ்ருத்தத்தில்** அமைந்துள்ளது. இப்படிச் செய்ய வேண்டும் என்று நினைத்துச் செய்தது அல்ல. ஹயக்ரீவ ப்ரஸாதம் என்பதில் அணுவளவும் ஸந்தேஹம் இல்லை.

पाञ्चालीभवितुं पुरा कृतधिया कृष्णेन मध्येसभं
धूर्तैर्धूतवतीं अनन्यशरणां मूर्धाहितार्त्यञ्जलिम्।
त्वत्तोऽवाप्तविचित्रविस्तृत महाहेमाम्बरेणाऽऽदरात्
तत्ताद्दक्करुणा व्यधायि सहजस्नेहस्सगन्धेषु हि॥ १५३॥

ஆசிரியர் ஸ்ரீ ஸ்ரீ 20 வருடங்களுக்கு முன்

औदुम्बराणि पुष्पाणि श्वेतवर्णं च वायसम्।
मत्स्यपादं जले पश्येत् न नारीहृदयस्थितम्॥ १५४॥

நீதி மாஸ்த்ரம்.
கும்பகோணம் மாரதா விலாஸ்.

அத்திமரத்துக்குப் பூ கிடையாது. காய் தான் உண்டு. ஆனாலும் அத்திப் பூவைக் கண்டாலும் காணலாம். வெள்ளைக் காகத்தைக் கண்டாலும் காணலாம். நீரில் உள்ள மீன்களின் கால்களைக் கண்டாலும் காணலாம். பெண்கள் மனதில் உள்ளதைக் காணமுடியாது. இப்படிப் புராண ம்லோகம் உள்ளது. இதில் தவறு இருக்க முடியாது. ஆனால் தமிழில் யாரோ ஒரு கவிஞர் பெண்களை மிகத் தரக் குறைவுடன் வர்ணித்து எழுதியுள்ளார்.

ஆலகால விஷத்தையும் நம்பலாம்
ஆற்றையும் பெருங்காற்றையும் நம்பலாம்
கோலமாமதயானையையும் நம்புலாம்
கொல்லும் வேங்கைப் புலியையும் நம்பலாம்
சேலை கட்டிய மாதரை நம்பினால்
தெருவில் நின்று திகைத்து நிற்பரே.

இதற்கு வாசகர்களின் ஆராய்ச்சி மனப்போக்குள்ளவர் தக்க ஸமாதாநம் எழுத வேண்டுமாய்க் கேட்டுக் கொள்கிறேன்.

अधिगत्य जगत्यधीश्वरात् अथ मुक्तिं पुरुषोत्तमात्ततः ।
वचसामपि गोचरो न यः स तमानन्दमविन्दत द्विजः ॥ १५५ ॥

ஸ்ரீ ஹர்ஷன் நைஷதம்

ஸ்ரீ ஹர்ஷன் எனும் கவி நள மஹாராஜனைப் பற்றி நைஷதம் என்ற பெயரில் ஒச் காவ்யம் எழுதத் தொடங்கினான். ஒரு நாள் காலையில் நளன் ஒரு குளத்தின் பக்கம் சென்றான். அப்பொழுது தாமரை மேல் உட்கார்ந்திருந்த அந்நப் பறவையை விளையாட்டுக்காகப் பிடித்து விட்டான். அது இவனுடன் பேசிற்று ! பல கோடி வருடங்களுக்கு முன் பறவைகள், விலங்கினங்கள், வாநரங்கள் பேசியதாகச் சரித்திரம் உண்டு. அது சொல்லிற்று - என் தாய்க்கு நான் ஒரே மகன். அவளோ வயதான மூதாட்டி. என் மனைவியோ இப்பொழுது தான் ப்ரஸவித்திருக்கிறாள். அவளும் ஒன்றும் செய்யமுடியாது. அவ்விருவரையும் பாதுகாக்க நான் ஒருவனே இருக்கிறேன். தெய்வமே ! உனக்கு இரக்கமில்லையா ? இதைக் கேட்ட அரசன் அந்தப் பறவையை விட்டுவிட்டான். அதுவும் நன்றியுடன் ''ஸ்வயம்வரத்தில் உனக்கு மாலையிட தமயந்தியினிடம் நான் தூது சென்று சொல்கிறேன்'' என்று சொல்லிற்று. அது சென்றுவிட்டதாகக் கதை.

அந்தப் பறவை அவனிடமிருந்து விடுதலை பெற்ற போது அது அடைந்த ஆநந்தத்துக்கு அளவே இல்லை. இது எப்படியெனில் எம்பெருமானுடைய க்ருபையினால் ஸம்ஸாரத்திலிருந்து விடுதலை பெற்று ப்ரம்மாநந்தத்தை ஒரு

ப்ராம்மணன் அடையும் ஆனந்தத்துக்கு ஒப்பாக உள்ளது என்று ஶ்லேடையாகச் சொல்கிறான்.

யதோ வாசோ நிவர்தந்தே। அப்ராப்ய மநஸா ஸஹ। என்ற உபநிஷத் வாக்யத்தை வசஸாமபி கோசரோ ந யஃ என்று வர்ணித்தான்.

व्यथां दत्से रमाकान्त ! दासे मयि जगत्पते ! ।
मत्कर्माधीनमित्येव मन्येऽहं तत् दयानिधे ! ॥ १५६ ॥

ஆசிரியர் ஸ்ரீ ஸ்ரீ

அப்பனே ! லக்ஷ்மீகாந்த ! நீ உலகங்களுக்கெல்லாம் அதிபதி. எளியவனான அடியேன் மீது ஏன் கஷ்டங்களையெல்லாம் சுமத்துகிறாய் ? ஆனால் நீ கருணைக் கடலன்றோ ? நீ அடியார்க்கு ஶ்ரமம் தரமாட்டாயே ? ஆகையால் இது என் வினைப்பயனாகவே அமைந்தது என்று நினைக்கிறேன்.

उचितमनुचितं वा कुर्वता कार्यजातं
परिणतिरवधार्या यत्नतः पण्डितेन।
अतिरभसकृतानां कर्मणां आविपत्तेः
भवति हृदयदाही शल्यतुल्यो विपाकः ॥ १५७ ॥

பாரவி-கிராதார்ஜுநீயம்

ஞாநியாக உள்ள ஒருவன் நல்லதோ தீமையோ எந்த ஒரு கார்யத்தையும் நன்கு பரிஶீலித்து விளைவு எப்படியிருக்கும் என்று தீர்மானித்துக் கொள்ள வேண்டும். அவஸரத்தில் யோசியாமல் செய்துவிட்டால் அதன் பலன் நம் ஆயுள் காலம் முடிய மநத்தில் முள் போல் குத்திக் கொண்டேயிருக்கும்.

राजानं राष्ट्रजं पापं राजपापं पुरोहितम्।
भर्तारं स्त्रीकृतं पापं शिष्यपापं गुरुं व्रजेत्॥ १५८ ॥

நீதி ஶாஸ்த்ரம்.

நாட்டு மக்கள் செய்யும் பாபம் அரசனைச் சாரும். அரசன் செய்யும் பாபம் புரோஹிதரைச் சாரும், மனைவி

செய்யும் பாபம் கணவனைச் சாரும், ஶிஷ்யர்கள் செய்யும் பாபம் குருவைச் சாரும்.

देशे देशे कलत्राणि देशे देशे च बान्धवाः ।
तं तु देशं न पश्यामि यत्र भ्राता सहोदरः ॥ १५९ ॥

ஸ்ரீமத் ராமாயணம்

எந்த நாட்டுக்குச் சென்றாலும் மனைவியர் கிடைப்பர். அவர்கள் மூலம் உறவினரும் கிடைப்பர். ஆனால் உடன் பிறந்த ஸஹோதரன் எங்கு சென்றாலும் கிடைப்பது அரிது.

பணமே எல்லாம்

यस्याऽस्ति वित्तं स नरःकुलीनः स पण्डितः स श्रुतवान् गुणज्ञः ।
स एव वक्ता स च दर्शनीयः सर्वे गुणाः काञ्चनमाश्रयन्ति ॥ १६० ॥

பர்த்ருஹரி நீதிஶ்லோகம்

யாரிடம் செல்வம் உள்ளதோ, அவன் நற்குடி பிறந்தவனாகவும் நல்ல பண்டிதன் என்றும், நல்ல படிப்பாளி என்றும், நல்ல குணமுள்ளவன் என்றும், அவனே நல்ல பேச்சுத் திறமை படைத்தவன் என்றும், அவனே நல்ல வடிவழகனாகவும் கருதப்படுகிறான். எல்லாமே பணத்தைப் பொறுத்தது.

உணர்ச்சியைத் தூண்டும் உவமை

पादाहतं रजो यस्तन्मूर्धानमधिरोहति ।
स्वस्थादेवाऽपमानेऽपि देहिनस्तद्वरं रजः ॥ १६१

ஶிஶுபாலவதம்-2-46

நாம் தரையிலிருக்கும் தூசியைக் காலால் உதைத்தால் அந்தத் தூசி நம் தலைமேல் வந்து உட்காருகிறது. அப்படியிருக்க யார் எத்தனை அவமானம் செய்தாலும் அதைப் பொருட்படுத்தாமல் இருக்கும் மனிதனை விட அந்தத் தூசி எவ்வளவோ மேல்!

மாகன் இயற்றிய **ஶிஶுபாலவதம்** இரண்டாவது ஸர்கத்தில் **விதுரர் நீதி** சொல்லப்படுகிறது. ஸ்ரீக்ருஷ்ணனைப்

பார்க்க வந்த நாரதர், க்ருஷ்ணன் அவதரித்த கார்யத்தைப் பற்றி நினைவூட்டிச் சென்ற பிறகு க்ருஷ்ணனிடம் விதுரர் வருகிறார். த்ருதராஷ்ட்ரன் தான் செய்யும் ராஜஸூய யாகத்துக்கு வரும்படி ஸ்ரீ க்ருஷ்ணனுக்கு அழைப்பு அனுப்பி இருந்தார். நாரதரோ, ஶிஶுபாலனை வதைப்பதே மிக மிக அவஸரமான கார்யம் என்று சொல்லி விட்டுப் போய் இருக்கிறார். இப்பொழுது என்ன செய்வது என்று சற்று ஸந்தேஹிப்பது போல இருந்த போது விதுரர் ஶிஶுபாலனை வதைப்பதே மிக மிக அவஸரமான கார்யம் என்பதற்காகப் பல நீதிகளையும் சொன்னார். அதில் ஒன்று தான் மேலே காட்டியுள்ள ஶ்லோகம் (உவமை).

நாமொன்று நினைக்க விதி வேறாக நினைக்கிறது

रात्रिर्गमिष्यति भविष्यति सुप्रभातं
भास्वानुदेष्यति हसिष्यति पङ्कजश्रीः।
इत्थं विचिन्तयति कोशगते द्विरेफे
हा ! हन्त ! हन्त ! नलिनीं गज उज्जहार ॥ १६२ ॥

ஸுபாஷித ரத்ந பாண்டாகாரம்

ஒரு குளத்தில் தாமரைப் பூக்கள் மலர்ந்திருந்தன. அதில் ஒரு வண்டு தேனைப் பருகிக் கொண்டிருந்தது. அப்பொழுது ஸூர்யன் மறைந்து விட்டதால் தாமரைப்பூ சுருங்கி மூடிக்கொண்டு விட்டது. வண்டு சிறைப்பட்டது. அந்த வண்டு ''இந்த இரவு சீக்கிரம் விலகி விடும், ஸூர்யன் உதிப்பான், தாமரையும் தன் அழகைக் காட்டிக் கொண்டு மலரும், நம் சிறை வாஸமும் நீங்கும்'' என்று நினைத்தது. அது நினைத்தபடி இரவும் போயிற்று. ஸூர்யனும் உதித்தான். அதே நேரம் அங்கு ஒரு யானை வந்து தாமரைக் கொடியை உண்பதற்காகப் பிடுங்கி விட்டது. ஐயோ! பாவம்! வண்டின் அவலநிலை.

नमः पङ्कजनाभाय नमः पङ्कजमालिने।
नमः पङ्कजनेत्राय नमस्ते पङ्कजाङ्घ्रिणे ॥ १६३ ॥

புராண ஶ்லோகம்

பரமஹம்ஸேத்யாதி ஸ்ரீ அநந்தராம யதீந்த்ரர் தன் பூர்வாஶ்ரமத்தில் உபந்யாஸம் செய்யும் பொழுது த்யாந ஶ்லோகங்கள் முடித்துக் கதை தொடங்குவார். அப்போது இந்த ஶ்லோகத்தை எப்பொழுதும் அநுஸந்திப்பார். ஆஶ்சர்யமான ஶ்லோகம். எம்பெருமானின் திருநாமம் பத்மநாபன். அவர் தாமரை மாலை சாற்றிக் கொண்டு இருக்கிறார். திருக்கண்களும், திருவடிகளும் தாமரை போன்றவையே. இவர் உபந்யாஸம் அனைவரையும் கவர்ந்தது. ஸ்ரீ ராஜாஜி கூடச் சில ஸமயம் உட்கார்ந்து கேட்டார். தற்சமயம் ஸ்ரீ ஸௌந்தர்குமாரர் என்பவர் ஸ்ரீ தீக்ஷிதரைப் பின் பற்றி ஶ்லோகங்கள் சொல்கிறார். ஸ்ரீ தீக்ஷிதரை ஸ்ரீ ஸௌந்தரர் குமார் நேரில் பார்த்ததில்லை. ஆனால் அவர் சொற்பொழிவுகளின் ஒலி நாடாக்களைக் கேட்டு அவரை மாநஸிக குருவாக ஏற்றுச் சொல்லி வருவதாகக் கூறினார்.

क्षीरसागरतरङ्गशीकरासारतारकितचारुमूर्तये।
भोगिभोगशयनीयशायिने माधवाय मधुविद्विषे नमः ॥ १६४॥

குலஶேகராழ்வார் - முகுந்த மாலை

பாற்கடலில் அலை மோதுகிறது. கருமேகம் போல் கருத்தவனும், ஆதிஶேஷனின் உடலாகிய படுக்கையில் படுத்திருக்கும், மஹாலக்ஷ்மியின் கணவனும், மது அரக்கனைக் கொன்றவருமான ஸ்ரீமந்நாராயணனுக்கு என்னுடைய ப்ரணமங்கள். பரமனின் கருத்த உடலில் பாற்கடலில் அலைத் துளிகள் விழுகின்றன. இது கருத்த ஆகாயத்தில் நக்ஷத்ரங்கள் ஜ்வலிப்பதைப் போலிருக்கிறதாம். என்ன அபூர்வ உவமை ?

இந்த ஶ்லோகத்தைப் பெரியோர் இரவு படுக்கப் போகும் தருணத்தில் அநுஸந்திப்பர்.

தஶரதன் செய்த பாயஸ விநியோகம்

कौसल्यायै प्रथममदिशत् भूपतिः पायसार्धं
प्रादादर्धं प्रणयमधुरं केकयेन्द्रस्य पुत्र्यै।

एते देव्यौ प्रणयविवशं भर्तुरालोच्य भावं
स्वार्धांशाभ्यां स्वयमकुरुतां पूर्णकामां सुमित्राम् ।। १६५ ।।

சம்பூராமாயணம்

இதில் கவி ''அரசன் அக்நியிலிருந்து வந்த தேவதூதன் கொடுத்த பாயஸத்திலிருந்து பாதியைக் கௌஸல்யைக்கும், மற்றொரு பாதியைக் கைகேயிக்கும் கொடுத்து விட்டார் என்றும் ஸுமித்ரைக்கு அரசன் கொடுக்காததை நினைத்து இவர்கள் இருவரும் தங்கள் பாயஸத்திலிருந்து கொடுத்தார்கள்'' என்று எழுதினான். இது சமத்காரம்.

ஸ்ரீ ராமாயணத்தில் வால்மீகி சொல்லியிருப்பது - வந்த பாயஸத்தில் பாதியைக் கௌஸல்யைக்கும் மீதமுள்ளதில் பாதியை (1/4) கைகேயிக்கும், மறுபடியும் மீதியில் பாதியை (1/8) ஸுமித்ரைக்கும் கொடுத்து விட்டு யோசித்துப் பார்த்து மீதியை (1/8) மறுபடியும் ஸுமித்ரைக்கு கொடுத்தார் என்று கூறப்பட்டுள்ளது.

हनुमज्जाम्बवदङ्गदनीलप्रमुखाः यां यां दिशमभियाताः याताः ।
द्वादशयोजनपरिमितिमिलनं प्राप्य श्रान्ताः प्रययुर्विपिनम् ।। १६६ ।।

அழகான ஶ்லோகம். ***ஸ்ரீ ராமாயண ஸங்க்ரஹம்***

निगमकल्पतरोर्गलितं फलं शुकमुखादमृतद्रवसंयुतम् ।
पिबत भागवतं रसमालयं मुहुरहो रसिका भुवि भावुकाः ।। १६७ ।।

பாகவத மாஹாத்ம்யம்

*ஸ்ரீமத் பாகவதக் கதையை எல்லாவற்றையும் துறந்து அவதூதராக (கௌபீநம் கூட இல்லாமல்) இருந்த **ஸ்ரீ ஶுகாசார்யர்** பரீக்ஷித்துக்கு 7 நாட்களில் சொன்னார். அதனால் தான் ஸப்தாஹம் என்கிற பெயர் ஏற்பட்டது. வேதம் என்கிற கற்பக வ்ருக்ஷத்திலிருந்து ஒரு பழம் விழுந்ததாம். அதைக் கிளி கொத்தியது. **ஶுகம்** என்றால் கிளி. கிளி கொத்தின பழம் மிகவும் ரஸமாக இருக்குமாகையால் இது*

அமுதம் போலிருக்கிறது. ரஸிகர்களாகிய ஞாநிகளே! நீங்கள் இதை நன்கு சுவைத்துச் சாப்பிடுங்கள்.

திருவேங்கடமுடையான் திருமலையில் நமக்கு அருள் பாலிக்கிறார்

निगमशिखरिमध्ये नित्यमुक्तैर्निषेव्यः
निवसति करुणाब्धिः श्रीपतिः श्रीनिवासः ।
शरणमुपगतानां संसृतेः पारनेता
कलयतु कुशलं नः कामगौः कल्पवृक्षः ॥ १६८ ॥

ஆசிரியர் ஸ்ரீ ஸ்ரீ

கோடைகாலத்தில் பகல் பொழுது ஏன் அதிகம் காணப்படுகிறது.

....यद्गोपुराग्रिम दरीषु पथाऽऽगतस्य ।
विश्राम्यतो हरिहरस्य विलम्बनेषु चिह्नं तदीय दिनसन्ततिदीर्घभावः ॥
॥ १६९॥

பாரத சம்பூ

கோடை காலத்தில் வெய்யில் மிகவும் கடுமை. ஸுர்யனுக்கே வெப்பம் தாங்க முடியவில்லையாம். அதனால் அவன் இங்குள்ள கோட்டை வாயில் கோபுரத்தின் உச்சியில் த்வாரம் வழியாக வந்து சிறிது நேரம் ஶ்ரம பரிஹாரம் செய்து கொள்கிறானும். அதனால் தான் கோடையில் வெய்யில் அதிகமாக இருக்கிறது என்று கவி மிகவும் அழகாக வர்ணித்திருக்கிருர்.

எம்பெருமானுடைய வர்ணனை

चन्द्रकान्तवदनं शुचिस्मितं मन्दराद्रिमथनेषु कच्छपम् ।
इन्दुशेखरमुखामरार्चितं वन्दिषीय हरिं इन्दिरासखम् ॥ १७० ॥

ஆசிரியர் ஸ்ரீ ஸ்ரீ

அநுப்ராஸம் தக்கபடி பல இடங்களில் அமைந்துள்ளது.

எந்த தநம் நன்மை தரும்

शरीरपतनावधि प्रभुनिषेवणापादनात्
अबिन्धनधनञ्जय प्रशमदं धनं दन्धनम्।
धनञ्जयविवर्धनं धनमुदूढगोवर्धनं
सुसाधनमबाधनं सुमनसां समाराधनम्॥ १७१॥

கவிதார்கிக ஸிம்ஹம்

கண்ணன் எனும் தநமே நல்ல தநம் என்கிறார்.

अजरामरवत् प्राज्ञः विद्यामर्थं च साधयेत्।
गृहीत इव केशेषु मृत्युना धर्ममाचरेत्॥ १७२॥

நீதி ஶாஸ்த்ரம்

கல்வியும் தநமும் ஈட்டும் பொழுது நமக்கு முதுமையோ மரணமோ இல்லை என்பது போன்ற எண்ணத்துடன் செயல்பட வேண்டும். ஆனால் நல்ல கார்யங்களைச் செய்வதற்கு மட்டும் நம் தலை மீது யமன் பிடித்துக் கொண்டு இருப்பது போல் நினைத்துக் காலம் தாழ்த்தாமல் செய்து விட வேண்டும்.

ஒன்றுக்கு ஒன்று மாறாட்டம்

पलाशकुसुमभ्रान्त्या शुकतुण्डे पतत्यलिः।
सोऽपि जम्बूफलभ्रान्त्या तमलिं धर्तुमिच्छति॥ १७३॥

குவலயாநந்தம்

ஒரு மரத்தில் கிளி ஒன்று உட்கார்ந்திருந்தது. அப்போது அங்கே வந்த வண்டு கிளியின் மூக்கைப் பார்த்து அதைப் பலாஶம்பூ என நினைத்து அதில் தேன் பருக அருகில் வந்தது. அந்தக் கிளி, வண்டை நாவல் பழம் என்று எண்ணிச் சாப்பிட நினைத்தது. கவியின் சமத்காரம் இது.

वशीकृतजगत्सर्वः भृशीकृतबलिप्रदः ।
वशीकरोतु नः सर्वान् कृशीकृत्यांहसोऽङ्गनात् ॥ १७४ ॥

ஆசிரியர் ஸ்ரீ ஸ்ரீ

माणिक्यवीणामुपलालयन्तीं मदालसां मञ्जुलवाग्विलासाम् ।
माहेन्द्रनीलद्युतिकोमलाङ्गीं मातङ्गकन्यां मनसा स्मरामि ॥ १७५ ॥

चतुर्भुजे ! चन्द्रकलावतंसे ! कुचोन्नते ! कुङ्कुमरागशोणे ! ।
पुण्ड्रेक्षुपाशाङ्कुशपुष्पबाणहस्ते ! नमस्ते जगदेकमातः ! ॥ १७६ ॥

ஶ்யாமளாதண்டகம்

अयि गिरिनन्दिनि ! नन्दितमेदिनि ! विश्वविनोदिनि ! विष्णुनुते ! ।
॥ १७७ ॥

மஹிஷாஸுரமர்திநீ ஸ்தோத்ரம்

பரமஹம்ஸேத்யாதி ஸ்ரீ அநந்தராம தீக்ஷிதர் பூர்வா ஶ்ரமத்தில் தமிழ்நாடெங்கும் ராமாயண ப்ரவசநம் செய்து புகழ்பெற்றவர். ப்ரவசநம் தொடங்கு முன் இந்த **மஹிஷாஸுர மர்திநீ ஸ்தோத்ர** ஶ்லோகத்தைச் சொல்லித் தமிழ்நாடெங்கும் பரவச் செய்தார். ஆஶ்சர்யமான வ்ருத்தம்.

அதற்கு அதுவே உவமை

गगनं गगनाकारं सागरस्सागरोपमः ।
रामरावणयोर्युद्धं रामरावणयोरिव ॥ १७८ ॥

ஸ்ரீமத் ராமாயணம்

ஆகாயத்துக்கு உவமை சொல்ல வேண்டுமென்றால் வேறு எதையும் சொல்ல முடியாது. ஆகாயத்தைத் தான் சொல்ல வேண்டும். கடலுக்கு நிகராக வேறு எதைச் சொல்ல முடியும் ? கடலைத் தான் சொல்ல முடியும். அது போல ராமனுக்கும் ராவணனுக்கும் நடந்த போருக்கு வேறு எதுவும் ஸமமாகாது.

अपुनर्जननार्थिनां नृणां वपुरस्मापितमञ्जसा भृशम्।
यमुनातटयादवेऽपि वा भवति प्रेम रघूद्वहेऽपि वा॥ १७९॥

ஆசிரியர் ஸ்ரீ ஸ்ரீ

தேவர்களின் திருமால் துதி

सन्तापघ्नं सकलजगतां शार्ङ्गचापाभिरामं
लक्ष्मीविद्युल्लसितमतसीगुच्छसच्छायकायम्।
वैकुण्ठाख्यं मुनिजनमनश्चातकानां शरण्यं
कारुण्यापं त्रिदशपरिषत् कालमेघं ददर्श॥ १८०॥

சம்பூராமாயணம்

தேவர்கள் பாற்கடல் சென்று ஒரு கருத்த மேகத்தைக் கண்டனர். அது எவ்வாறு இருந்தது ? கவி வர்ணிக்கிறார். மக்களின் எரிச்சலை (உஷ்ணத்தை)ப் போக்கவல்லது. மேலும் மேகத்தில் வாநவில் தோன்றும். இங்கு இவர் கையில் ஶார்ங்கம் என்னும் வில் இருக்கிறது. லக்ஷ்மி என்கிற மின்னலுடன் அந்த மேகம் விளங்குகிறது. மேலும் காயாம் பூக் கொத்து போன்ற நிறமுடையதாக இருந்தது. அதற்கு வைகுண்டம் என்று பெயர். முநிவர்கள் என்கிற சாதகப் பறவைகள் இந்த மேகம் எப்பொழுது வருமென்று காத்திருக்குமாம். அது பொழியும் நீர் நம்மீது அவர் செய்யும் கருணையே ! இது ஆச்சர்யமான வர்ணனை.

கற்றவற்குச் சென்ற விடமெல்லாம் சிறப்பு

विद्वत्वं च नृपत्वं च नैव तुल्यं कदाचन।
स्वदेशे पूज्यते राजा विद्वान् सर्वत्र पूज्यते॥ १८१॥

ஸுபாஷித ரத்ந பாண்டாகாரம்

விதி வலியது

हरिणाऽपि हरेणाऽपि ब्रह्मणाऽपि सुरैरपि।
ललाटलिखिता रेखा परिमार्ष्टुं न शक्यते॥ १८२॥

நீதி ஶாஸ்த்ரம்

மனிதனுக்கு அன்று தலையில் எழுதப்பட்ட எழுத்தைத் திருமாலோ, ருத்ரனோ, ப்ரஹ்மனோ, தேவர்களோ யாரும் அழிக்க முடியாது. இதே கருத்தைக் கூறும் மற்றொரு ஶ்லோகம் இது:-

विधिलिखिताक्षरमालं फलति कपालं न भूपालः ॥ १८३ ॥

இயற்கையின் விநோதம் சொல்ல இயலாது

व्यतिषजति पदार्थानान्तरः कोऽपि हेतुः
न खलु बहिरुपाधीन् प्रीतयः संश्रयन्ते।
विकसति हि पतङ्गस्योदये पुण्डरीकं
द्रवति हि हिमरश्मावुद्यते चन्द्रकान्ता॥ १८४ ॥

உத்தர ராம சரிதம்

பாருங்கள்! ஸூர்யன் உதித்தால் தாமரை தானாகவே மலர்கிறது. அது போல் பூர்ணசந்த்ரன் தோன்றினால் சந்த்ரகாந்தம் என்கிற கல் தானாகவே உருகுமாம். வெளிப்படையாக இற்குக் காரணம் யாரால் சொல்ல முடியும்? நமக்குத் தெரியாமல் உள்ளிருந்து ஏதோ ஒரு ஶக்தி இயங்குகிறது.

करचरणसरोजे कान्तिमन्नेत्रमीने
श्रममुषि भुजवीचिव्याकुलेऽगाधमार्गे।
हरिसरसि विगाह्याऽऽपीय तेजोजलौघं
भवमरुपरिखिन्नः खेदमद्य त्यजामि॥ १८५ ॥

குலஶேகராழ்வார் முகுந்தமாலை

ஹரி என்பவரே ஒரு பெரிய குளம். அவருடைய திருக்கைகளும் திருவடிகளுமே அதிலுள்ள தாமரைகள். அழகிய திருக்கண்கள் அதிலுள்ள மீன்கள். நான்கு திருக்கைகள் என்கிற அலைகள் எப்பொழுதும் அசைந்தவாறே நம் ஶ்ரமத்தையெல்லாம் தீர்க்க வல்லவை.

அதில் நான் ஆழ்ந்து ஸ்நாநம் செய்தேன். மிகவும் ஆழமான குளம். அதனால் ஸம்ஸாரம் என்கிற பாலைவநத்தில் அலைந்ததனால் ஏற்பட்ட ப்ரமமெல்லாம் இப்பொழுது எனக்குத் தீர்ந்து விட்டது என்கிறார்.

चन्दनचर्चितदेहं कन्दर्पशतकोटिसुन्दरं वन्दे।
करुणाशीतकटाक्षं कल्पकवृक्षं च वन्दिनां नृणाम्॥ १८६॥

ஆசிரியர் ஸ்ரீ ஸ்ரீ

பண்டிர்தகள் ரஸிக்கும் **ஆர்யாவ்ருத்தம்.**

गर्वमानबहुलोर्मिमालिनां मत्तवारणसमं च मानवम्।
सात्त्विकाः परिहसन्ति दुर्जनं बान्धवास्तु बहिरेव कुर्वते॥ १८७॥

ஆசிரியர் ஸ்ரீ ஸ்ரீ

பண்டிதர்களின் ரஸனைக்கு இந்த ச்லோகத்தையும் ஸமர்ப்பிக்கிறேன்.

காகாஸுரன் செய்கை ஒரு கேள்வி

तव पाणितलस्पर्शैः सुखसुप्ते परंतपे।
सीते! का देहकान्तिस्ते काकं तं दोग्धुं आदिशत्? ॥ १८८॥

ஆசிரியர் ஸ்ரீ ஸ்ரீ

இந்தச் ச்லோகம் உருவத்தில் சிறியதேயானாலும் சிறந்த பல குணங்கள் நிறைந்தது. அநுப்ராஸமும் உண்டு. கேள்வியாகவும் அமைந்துள்ளது. பண்டிதர்கள் நிச்சயம் ரஸிப்பர் என்று நம்புகிறேன்.

இதற்கு முன் வேறிடத்தில் **ஸீதே பூமிஸுதே** என்று **சார்தூல விக்ரீடித** வ்ருத்தத்தில் அமைந்த ச்லோகம் (ச்லோகம் 15) ஸீதையுடன் நான் பேசுவதாகவே அமைந்துள்ளது.

यथेच्छं भुङ्क्ष्व मा भैषीः तक्रं सलवणं पिब।
यथेच्छं वद मा भैषीः अन्ते नारायणं स्मर॥ १८९॥

பிடித்ததைச் சாப்பிடவும். ஜீர்ணமாகாமல் போய்விடப் போகிறதே எனும் கவலை வேண்டாம். முடிவில் உப்பு கலந்த மோர் சாப்பிடவும். எல்லாம் ஜீர்ணமாகிவிடும். இஷ்டப்படி பேசவும். தவறானதைப் பேசிவிட்டோமோ எனும் கவலை வேண்டாம். முடிவில் நாராயண நாமாக்களை நினைக்கவும்-கூறவும். **ஆசிரியர் தெரியவில்லை**

मुरलीवादनलोलं मुरमथनं तं समाश्रये सद्यः ।
वरगुणपार्थे योऽसौ चरमगतेर्मार्गमादिशत् प्राज्ञः ॥ १९० ॥

ஆசிரியர் ஸ்ரீ ஸ்ரீ

இது **ஆர்யாவ்ருத்தம்** எனப்படுகிறது. மற்ற மற்ற வ்ருத்தங்களைப் போல் இதற்குக் கணங்கள் என்ற பெயரில் எழுத்துக்களி ன் கணக்கு பார்க்க முடியாது. **மாத்ரா, சந்தஸ்** என்றும் சொல்வர். **ஆர்யா** என்றும் பெயர். இதற்கு முதல் பாதத்திலும் மூன்றாம் பாதத்திலும் 12 மாத்திரைகள் இருக்க வேண்டும். இரண்டாவதில் 18 மாத்ரைகள், நான்காவதில் 15 மாத்ரைகள் என்று லக்ஷணவாக்யம் கூறுகிறது. ஆனால் 18 மாத்ரைகள் வரையில் பல பல கவிகள் 4வது பாதத்தை அமைந்திருக்கின்றனர். ஆகையால் 15, 16, 17, 18 எப்படி வேண்டுமானாலும் இருக்கலாம்.

यस्याः प्रथमे पादे द्वादशमात्राः तथा तृतीयेऽपि ।
अष्टादश द्वितीये चतुर्थे पञ्चदश साऽऽर्या ॥ १९१ ॥

இந்த ஶ்லோகமே லக்ஷ்யம்.

இனி, மேலே கண்ட ஶ்லோகத்தில் முர முர வர சர அநுப்ராஸம் இருப்பது மிகவும் சுவையாக உள்ளது. எம்பெருமான் பார்த்தனுக்கு ஸ்ரீ வைகுண்ட ப்ராப்திக்கு மார்கத்தை உபதேஶம் செய்தான் என்கிற விஷயம் குறிப்பிடப்பட்டுள்ளது. பார்த்தனுக்கு **வரகுண** என்கிற விஶேஷணம் அமைந்துள்ளது. இதில் ஒரு விஶேஷம்:-

தைவீ ஸம்பத் என்றும் **ஆஸுரீ ஸம்பத்** என்றும் மனிதர்களில் இரண்டு வகை உண்டு என்று கூறினார்.

दैवी संपत् विमोक्षाय निबन्धायाऽऽसूरी मता ॥ १९२ ॥

தைவீ ஸம்பத் உள்ளவர்கள் மோக்ஷம் பெறுவர் என்றும், ஆஸுரீ ஸம்பத் உள்ளவர்கள் உலகத்திலேயே உழல்வர் என்றும் கூறினார். இதைக் கேட்ட அர்ஜுநனுக்கு, நான் எந்த வகையைச் சேர்ந்தவன் ? என்ற ஸந்தேஹம் தோன்றிற்று. அவன் முகத்திலேற்பட்ட ஒரு வகை மாற்றத்தைக் கண்ட பகவான் அவனுக்கு ஆறுதல் கூறுகிறார் - பாண்டவ ! கவலைப்படாதே ! நீ தைவீ ஸம்பத் உள்ளவனே என்று —

मा शुचः संपदं दैवीमभिजातोऽसि पाण्डव ! ॥ १९३ ॥

இக்கருத்தைக் குறிப்பதாகவே உள்ள ஶ்லோகத்திலுள்ள வரகுண என்பதைப் பண்டிதர்கள் ரஸிக்க வேண்டும்.

यस्य ब्रह्मा च रुद्रश्च पुत्रः पौत्रश्च विश्रुतौ ।
तमहं शिरसा वन्दे नारायणमहर्निशम् ॥ १९४ ॥

ஆசிரியர் ஸ்ரீ ஸ்ரீ

சதுர்முகேஶ்வரமுகைர் புத்ர பௌத்ராதிஶாலிநே ! என்கிற ஸ்வாமி தேஶிகன் மஹாவீர வைபவத்தின் கடைசி ஶ்லோகக் கருத்தை ஒத்திருப்பது காண்க.

व्यपनीय शुचां विदेहकन्यां कपिरव्यग्रमसान्त्वयत्तदानीम् ।
मतिमानदहत् पुरीं च लङ्कां मणिमादाय ययौ रघूद्वहं च ॥ १९५ ॥

ஆசிரியர் ஸ்ரீ ஸ்ரீ

தமிழில் மொழிபெயர்ப்பு

பொய்யுடையொருவன் சொல்வன்மையினால்
மெய் போலும் மே மெய் போலும் மே
மெய்யுடையொருவன் சொல்லமாட்டாமையால்
பொய் போலும் மே பொய் போலும் மே.

मिथ्यावादी वाक्चातुर्यात् सत्यवादीव भो ! सत्यवादीव।
सत्यवाक्कश्चित् व्यङ्गमशक्त्या मिथ्यावादीव भो ! मिथ्यावादीव॥ १९६ ॥

ஆசிரியர் ஸ்ரீ ஸ்ரீ

ஒரு கேள்வி

जीवःको द्विगुणाकारः ?बुद्ध्याऽपि च चतुर्गुणः।
साहसे षड्गुणश्चैव को मे अष्टगुणितो वद॥

இந்த ஶ்லோகம் நான் எழுதியது. ஆனால் இதில் ஒரு விஶேஷம். கருத்து என்னுடையது அல்ல. சுமார் 100 வருடங்களுக்கு முன் திருக்குடந்தையில் **சாரதா விலாஸ்** புத்தக சாலையில் க்ரந்தாக்ஷரத்தில் மூல ஶ்லோகமும் தமிழில் விளக்கமும் கொண்ட ஒரு நூல் வெளியிடப்பட்டிருந்தது. அதில் உள்ள ஶ்லோகம் பின்வருமாறு—

स्त्रीणां द्विगुण आहारः बुद्धिश्चाऽपि चतुर्गुणा।
साहसं षड्गुणश्चैव कामोऽष्टगुण उच्यते॥ १९८ ॥

இதை உள்ளபடி நான் எழுதியிருந்தால் அதன் கருத்தை இக்காலத்தில் பலர் ஏற்கமாட்டார்கள். மேலும் என் மீது வெறுப்பு கொள்வர். சிலர் என்னைக் கண்டித்தும் எழுதுவர். ஆகையால் அதை எழுதாமல் அந்தக் கருத்தை மட்டும் வைத்து இத்தகைய ஜீவன் எது என்று உங்களுக்கு ஒரு கேள்வியாக வைத்திருக்கிறேன். அதற்காகவே ஜீவ: என்று எழுதினேன். பண்டிதர்கள் கவனிப்பார்கள் என்று நம்புகிறேன்.

தமிழுக்கு மொழிபெயர்ப்பு

ஏவா மக்கள் மூவா மருந்து.
अचोदिताः प्रजास्सत्यं अजराकरं औषधम्॥ १९९ ॥

ஆசிரியர் ஸ்ரீ ஸ்ரீ

रघुपते ! जलधेः क्वथने तथा चकितकाकचमत्कृतिशासने।
मतिरमानुषवृत्तिरहो ! तव प्रथितदैवतविस्मयदायिनी॥ २०० ॥

ஆசிரியர் ஸ்ரீ ஸ்ரீ

இந்த ஶ்லோகத்தில் ஹயக்ரீவ ப்ரஸாதத்தினால் ராமனைப் பார்த்து நான் பேசியதாகக் கருத்து அமைந்து உள்ளது. அப்பனே ! அன்று ஒரு நாள் கடல் நீரனைத்தையும் கொதிக்க வைத்தீரே ! மற்றும் காகாஸுரன் ஒரு பெரிய தவறு செய்து விட்டு ஓடும் பொழுது நீர் ஏவிய அந்த ப்ரம்மாஸ்த்ரம் அவன் ஓடினால் தொடர்கிறது- நின்றால் நிற்கிறது. கடைசியில் உம் காலடியில் அவன் வந்து விழுந்த பிறகும் அந்த அஸ்த்ரம் அவனை ஒன்றும் செய்யவில்லை. அதன் பிறகு அது வீண் போகலாகாது என்பதற்காக அவனுக்கு ஒரு கண்பார்வை மட்டும் பறி போகும்படிச் செய்தீர். இந்தத் திறமை மிக்க ஒரு தண்டனை கொடுப்பதைப் பார்த்திருந்த ப்ரம்மாதி தேவர்களும், நீர் மனிதனல்ல என்பதை ஆச்சர்யத்துடன் கண்டு வியந்தனர். பிராட்டியும் பேசுகிறாள்-

मत्कृते काकमात्रे च ब्रह्मास्त्रं समुपजृम्भितम् ॥ २०१ ॥

இதே வ்ருத்தத்தில் உள்ள மற்றொரு ஶ்லோகம்–

गजभुजङ्गविहङ्गमबन्धनं शशिदिवाकरयोर्ग्रहपीडनम् ।
मतिमतां च विलोक्य दरिद्रतां विधिरहो ! बलवानिति मे मतिः ॥ २०२

யானை, பாம்பு, பறவைகள் இவைகள் மனிதனின் கட்டுக்கு அடங்குவதும், பகல், இரவுகளின் இருளைப் போக்கும் ஸூர்ய சந்த்ரர்களை, ராஹு, கேது பீடித்தலும், மதிநுட்பமுள்ளவர்கள் ஏழ்மையாக வாழ்வதும் எல்லாம் தெய்வத்தின் அரிய செயலே !

பர்த்ருஹரி

ப்ரஹர்ஷிணீ வ்ருத்த லக்ஷணம்

ரகுவம்ஶம் முதல் ஸர்கத்தின் கடைசியில்

निर्दिष्टां कुलपतिना स पर्णशालां என்று ஆரம்பிக்கும் ஶ்லோகம் உள்ளது. நான் யாதவாப்யுதயத்தை ஸேவித்த போது **साधूनां स्वपदसरोजषट्पदानां** என்றிருப்பதைப் பார்த்து இந்த இரண்டு ஶ்லோகங்களும் ஒரே வ்ருத்தத்தில் அமைந்து

இருப்பதை நினைத்து ஸ்வாமி தேஶிகனின் அபார ஸாமர்த்யத்தைக் கண்டு வியந்தேன். ஸமீபத்தில் இந்த ஶ்லோகம் என்ன வ்ருத்தம் என்பதை அறிய ஸ்ரீ வாஸுதேவாசார்யரைப் புத்தகம் பார்த்து வரச் சொன்னேன். ரகுவம்ஶத்துக்கு வ்யாக்யாநம் எழுதிய மஹோபாத்யாய ஸ்ரீ மல்லிநாதன் இது ப்ரஹர்ஷிணீ வ்ருத்தம் என்று எழுதி வ்ருத்தத்தின் லக்ஷணம் म्नौ ज्रौ गस्त्रि दशयतिः என்று எழுதியுள்ளார். நான் வ்ருத்தத்திலுள்ளதைக் கவனித்து நானும் லக்ஷண வாக்யம் எழுதிவிட்டேன். அது பின் வருமாறு–

प्रख्याताममनजरगा प्रहर्षणीयं ம கணம் ந கணம், ஜ கணம், ர கணம், ஒரு குரு அமைந்தால் இது ப்ரஹர்ஷிணீ. என் ஶ்லோகம் இதே வ்ருத்தமாகவே அமைந்துள்ளது. இதைப் பண்டிதர்கள் ரஸிக்க வேண்டும் என்று விரும்புகிறேன்.

अभूतभूतपूर्वं तत् कबन्धाख्यं महाबलम्।
कुक्षोन्तश्शिरोच्छ्वासं दृश्यमानभुजद्वयम्॥ २०३॥

ஆசிரியர் ஸ்ரீ ஸ்ரீ

கபந்தனைப் பற்றி எழுத வேண்டுமென்று தோன்றியது. அபூத பூத என்கிற ப்ராஸமும் எழுதவேண்டுமென்று தோன்றியது. அவனும் புதுவகையான அரக்கனே. அதுவரை இவனைப் போன்ற ஒருவனை யாரும் பார்த்ததே இல்லை. வயிற்றுக்குள்ளே தலை. கழுத்தின் வழியாக மூச்சுக்காற்று. இரண்டு கைகள் மட்டும் நம் கண்ணுக்குத் தெரியும் ஒருவன்!

நன்றி கெட்டவனுக்கு ப்ராயஶ்சித்தம் இல்லை

ब्रह्मघ्ने च सुरापे च गोघ्ने भग्नव्रते तथा।
निष्कृतिर्विहिता सद्भिः कृतघ्ने नास्ति निष्कृतिः॥ २०४॥

ப்ராம்மணனைக் கொன்றவன், கள் குடித்தவன், பஶுவதை செய்தவன், வ்ரதங்களை அரை குறையாக நிறுத்தியவன், இவர்களுக்குப் பெரியோர்களால் ப்ராயஶ்சித்தம் விதிக்கப்பட்டிருக்கிறது. நன்றி

கெட்டவனுக்கு ப்ராயஶ்சித்தம் கூறப்படவில்லை. இது ஒரு தர்ம ஶாஸ்த்ர ஶ்லோகம்.

ஸ்வாமி தேஶிகன் ஆழ்ந்து சிந்தித்துப் பல விஷயங்கள் எழுதுவார். இந்த விஷயத்திலும் யாரும் சொல்லாத ஒரு விஷயத்தை அவர் சொல்லியிருப்பதைக் காட்டுகிறேன்.

प्रथितं पातकिवर्गं कृतघ्न एको हि कृत्स्नं अतिशेते ।
तमिमं क्रियमाणघ्नः तमपि दुरात्मा करिष्यमाणघ्नः ॥ २०५ ॥

பாபிகளுக்குள்ளே மிகவும் மேலானவன் நன்றி கெட்டவன். அவனையும் விடச் செய்யும் உதவியை மறந்தவன் மேலானவன். இவனையும் விட மேலானவன் **கரிஷ்யமாணக்ந:** - நாளைக்கு உபகாரம் செய்வதாக இருக்கும் ஒருவரைப் பற்றி நிந்தை செய்வான். அவருக்குத் தடையாகவும் இருப்பான் என்பது கருத்து. ரஸமான ஶ்லோகம்.

रविश्चन्द्रो घनाः वृक्षाः वाताः गावश्च सज्जनाः ।
एते परोपकाराय भुवि दैवेन निर्मिताः ॥ २०६ ॥

K.L.V.**ஶாஸ்த்ரி ஸம்ஸ்க்ருத புத்தகம்**

ஸூர்யன், சந்த்ரன், மேகங்கள், மரங்கள், காற்று, பசுக்கள், நல்லவர்கள் அனைவரும் பிறருக்கு உதவி செய்யவே பகவானால் படைக்கப்பட்டிருக்கிறார்கள்.

महाकुलप्रसूतस्य शास्त्रनिष्णातधीमतः ।
पौलस्त्यस्याऽभवत् बुद्धिः कथं नीचाध्वगामिनी ? ॥ २०७ ॥

ஆசிரியர் ஸ்ரீ ஸ்ரீ

ராவணன் ப்ரம்மாவின் கொள்பேரன். புலஸ்த்யரின் பேரன், விஶ்ரவஸ்ஸின் பிள்ளை. ஶாஸ்த்ரங்கள் கற்றுத் தேர்ந்தவன். இப்படிப்பட்டவனுக்குக் கீழ்த்தரமான புத்தி எப்படி ஏற்பட்டது ?

हस्तक्षेपं न कुर्वीथाः परस्वेऽन्यपरिग्रहे।
परस्वं परदाराश्च पञ्चवक्त्रो हि जिह्मगः ॥ २०८ ॥

பிறர் சொத்திலும், பிறர் மனைவி மீதும் கை வைக்காதே. அவ்விரண்டும் ஐந்து தலை நாகம் போன்றவை.

பிழை திருத்தம்

साहित्य सङ्गीत कलाविहीनः साक्षात् पशुः पुच्छविषाणहीनः।
तृणं न खादन्नपि जीवमानः तद्भागधेयं परमं पशूनाम् ॥ २०९ ॥

இது பண்டிதர்களுக்குத் தெரிந்ததே. ஆனால் எழுதியவர் யாராயினும் जीवमानः என்று எழுதியது தவறு. ஜீவ தாது **பரஸ்மைபதீ** மட்டுமே. ஆகையால் तृणं न खादन्नपि जीवतीति यत् என்று திருத்தம் செய்து கொண்டால் நன்றாக இருக்கும்.

ஸீதையின் அறிவுரை

इह सन्तो न वा सन्ति सतो वा नानुवर्तसे।
यथा हि विपरीता ते बुद्धिराचारवर्जिता ॥ २१० ॥

यथा तव तथाऽन्येषां रक्ष्याः दाराः निशाचर !।
आत्मानमुपमां कृत्वा स्वेपु दारेषु रम्यताम् ॥ २११ ॥

ஸுந்தரகாண்டம்

விபிஷணன் அறிவுரை

सुलभाः पुरुषा राजन् ! सततं प्रियवादिनः।
अप्रियस्य च पथ्यस्य वक्ता श्रोता च दुर्लभः ॥ २१२ ॥

யுத்த காண்டம்

முக்தி பெறுபவன் ஸ்நாநம், பாநம், போஜநம்

करुणा दीर्घिकास्नानं कटाक्षनिर्व्याजशीतलैः पानम्।
आया हि पथ्यःआहारः सदा पश्यन्ति सर्वदा मोहः ॥ २१३ ॥

ஆசிரியர் ஸ்ரீ ஸ்ரீ

ஆசிரியரின் கவிதை மார்கத்தில் ஒரு தனி அநுபவம்

குரு ஶிஷ்யை கேள்வி பதில்

किं ते नाम ? कस्तूरिकेति ।
किं ते भाग्यम् ? पतिवत्नीत्वम् ।
शिशवः कति ते ? यमलो एक एका च ।
किं ते लक्ष्यम् ? गुरुपादध्यानम् ॥ २१४ ॥ *ஆசிரியர் ஸ்ரீ ஸ்ரீ*

दास्यति भूमिर्धान्यं वर्षिष्यति वासवोऽचिरात् भूमौ ।
खादिष्यामो दत्वा नन्दिष्यामेति सर्वमीश्वराधीनम् ॥ २१५ ॥

ஆசிரியர் ஸ்ரீ ஸ்ரீ

பண்டிதர்கள் ரஸிக்கவும்

इन्दिरामन्दिरं यस्य वक्षः हस्ते सुदर्शनम् ।
यस्य शार्ङ्गं दुरारोपं रावणेनापि तं भजे ॥ २१६ ॥

ஆசிரியர் ஸ்ரீ ஸ்ரீ

10வது க்ரஹம் யார்

सदा वक्रः सदा चण्डः सदा पूजामपेक्षते ।
कन्याराशिस्थितो नित्यं जामाता दशमो ग्रहः ॥ २१७ ॥

முன் காலத்தில் பெண்ணைக் கந்யாதாநமாகக் கொடுத்த பிறகு மாப்பிள்ளையை மிகவும் உபசரிப்பர். எவ்வளவு உபசாரம் செய்தாலும், ஸ்வயமாகவோ, அம்மா சொற்படியோ அந்த மாப்பிள்ளை பல கோரிக்கைகளை வைத்து மாமனாருக்கு ஶ்ரமம் கொடுப்பா. அப்படி ஶ்ரமம் அநுபவித்த ஒருவர் எழுதிய ஶ்லோகமிது-

நவக்ரஹங்களுக்கு வக்ர கதி உண்டு. சில இடங்களில் வரும்பொழுது க்ரூரமாக இருக்கும். கெட்ட பலன்களையும் கொடுக்கும். எல்லா க்ரஹங்களும் எல்லா ராஶிகளிலும் ஸஞ்சாரம் செய்யும். ஆனால் மாப்பிள்ளை என்பவன் கந்யாராஶியிலே தான் இருப்பான். ஆகையால் இவன் 10வது க்ரஹம் என்று எழுதி வைத்தார்!

सीत्कारं शिक्षयति व्रणयत्यधरं तनोति रोमाञ्चम्।
सखि ! किं पतिरायातः ? नहि नहि हिमकरः पवनः ॥ २१८ ॥

அலங்கார ஶாஸ்த்ரம்

दुर्जनः परिहर्तव्यः विद्ययाऽलङ्कृतोऽपि सन्।
मणिना भूषितः सर्पः किमसौ न भयंकरः? ॥ २१९ ॥

நீதி ஶாஸ்த்ரம், கும்பகோணம்

கல்வியில் சிறந்தவனாயினும், ஒழுக்கத்தைக் கைவிட்டவனாயின் அவனை நாம் விலக்க வேண்டும். முன் காலத்தில் பாம்பின் தலையில் ரத்நம் இருப்பதாகச் சொன்னார்கள். ஆயினும் அதனுடன் பழக முடியுமா ? பயங்கர விளைவுகள் தான் ஏற்படும்.

जिह्वाग्रे वर्तते लक्ष्मीः जिह्वाग्रे वर्तते धनम्।
जिह्वाग्रे वर्तते कीर्तिः जिह्वाग्रे मरणं ध्रुवम् ॥ २० ॥

யாருக்கும் நாவடக்கம் வேண்டும். **நாக்கை அடக்கிப் பேசு** என்பர். ஆனால் இன்பமாகவும், பிறர் மனம் புண்படாமலும் பேசினால் அவனுக்கு லக்ஷ்மீகடாக்ஷம் உண்டு. தநம் பெருகும். புகழ் கிட்டும். ஆனால் நாவடக்கம் இல்லாதவனுக்கு அந்த நாக்கினால் மரணமும் ஏற்படும்.

दुरात्मन् ! गच्छ मां त्यक्त्वा कोपनामन् ! महारिपो ! ।
विष्णुभक्तिविशुद्धानां हृदये नास्ति ते स्थलम् ॥ २२१ ॥

ஆசிரியர் ஸ்ரீ ஸ்ரீ

நவீந கவிதை

अहन्ते त्वमपेहि नः दुराचारेऽऽभिचारिके।
अस्माकं तु विशुद्धेऽत्र मा वसेः मानसे खले ॥ २२२ ॥

ஆசிரியர் ஸ்ரீ ஸ்ரீ

ஸங்கீத மும்மூர்த்திகளில் முத்துஸ்வாமி தீக்ஷிதர் ஒருவர். இவர் ஸம்ஸ்க்ருதத்திலேயே பாட்டுகள் அமைத்தார். அதில் ஒன்று மாயே ! த்வம் யாஹி, மாம் பாஹி, த்வம் கா ஹி ? இப்படி

எழுதினார். அதே கருத்தை மேலே உள்ள ஶ்லோகத்தில் நானும் அமைத்திருக்கிறேன் எல்லாம் - ஹயக்ரீவ ப்ரஸாதம்.

पद्मनाभ ! भुजगोत्तमशायिन् !
पक्षिवाहन ! पवित्र चरित्र ! ।
पञ्चवक्त्र ! भुजगे शयनेच्छ !
पापिनं स्ववशीकुरु दासम् ॥ २२३ ॥

ஆசிரியர் ஸ்ரீ ஸ்ரீ

विधिर्हि बलवान् लोके न कोऽप्येनं विलङ्घयेत् ।
परीक्षितुं त्रातुकामः विधिना वञ्चितो भिषक् ॥ २२४ ॥

ஆசிரியர் ஸ்ரீ ஸ்ரீ

घृतेन वर्धते बुद्धिः क्षीरेणाऽऽयुश्च वर्धते ।
शाकेन वर्धते व्याधिः मांसं मांसेन वर्धते ॥ २२५ ॥

நீதி ஶாஸ்த்ரம்,
ஶாரதாவிலாஸ் கும்பகோணம்

अभुक्त्वाऽऽमलकं पथ्यं भुक्त्वा तु बदरीफलम् ।
कपित्थं सर्वदा पथ्यं कदली न कदाचन ॥ २२६ ॥

நீதி ஶாஸ்த்ரம், ஶாரதா விலாஸ்

நெல்லிக் காயை வெறும் வயிற்றில் சாப்பிடுவது நலம். இலந்தைப் பழத்தை உணவுக்குப் பின் சாப்பிடுவது நலம். விளாம்பழம் எப்பொழுதும் சாப்பிடலாம். வாழைப்பழம் சாப்பிடுவதில் மருத்துவ குணம் ஏதுமில்லை.

वृद्धार्को होमधूमश्च बालस्त्री निर्मलोदकम् ।
रात्रौ क्षीरान्नभुक्तिश्च आयुर्वृद्धिः दिने दिने ॥ २२७ ॥

மாலை வெய்யிலும், ஹோமப் புகையும், வயதில் சிறியவளை விவாஹம் செய்து கொள்வதும், ஶுத்தமான தீர்த்தத்தைப் பருகுவதும், இரவில் பால் சாதம் உண்பதும் ஆயுளை வளர்க்கும்.

நீதி ஶாஸ்த்ரம், ஶாரதா விலாஸ், கும்பகோணம்

बालार्कः प्रेतधूमश्च वृद्धस्त्री पल्वलोदकम्।
रात्रौ दध्यन्नभुक्तिश्च आयुः क्षीणं दिने दिने॥ २२८॥

நீதி ஶாஸ்த்ரம்
ஶாரதா விலாஸ், கும்பகோணம்

காலை இளம் வெய்யிலும், பிணப்புகையும், வயதில் பெரிய பெண்ணை மணப்பதும், குட்டையில் உள்ள நீரை அருந்துவதும், இரவில் தயிர் சாதம் உண்பதும் ஆயுளின் வளர்ச்சியைக் குறைக்கும்.

सर्पदुर्जनयोर्मध्ये वरं सर्पो न दुर्जनः।
सर्पो दशति दिङ्मात्रं दुर्जनस्तु पदे पदे॥ २२९॥

நீதி ஶாஸ்த்ரம்
ஶாரதா விலாஸ், கும்பகோணம்

பாம்பை விடக் கொடியவன் துஷ்டன். பாம்பு எப்போதாவது ஒரு ஸமயத்தில் தான் கடிக்கும். இவன் அடிக்கடி விஷத்தைப் பாய்ச்சுவான்.

वृश्चिकस्य विषं पुच्छे तक्षकस्य विषं शिरः।
मक्षिकस्य विषं नासा सर्वाङ्गं दुर्जने विषम्॥ २३०॥

நீதி ஶாஸ்த்ரம்
ஶாரதா விலாஸ், கும்பகோணம்

தேளுக்குக் கொடுக்கில் விஷம். ஸர்பத்துக்குத் தலையில் விஷம். ஈ, கொசு இவற்றுக்கு மூக்கில் விஷம். ஆனால் துர்ஜநனுக்கோ உடல் முழுவதும் விஷம்!

வநம் முழுவதும் அசையாமல் மௌனமாக இருந்தது

निष्कम्पवृक्षं निभृतद्विरेफं मूकाण्डजं शान्तमृगप्रचारम्।
तच्छासनात् काननमेव सर्वं चित्रार्पितारम्भ इवाऽवतस्थे॥ २३१॥

குமாரஸம்பவம்

இமயமலையில் ஶிவன் தவம் செய்து கொண்டு இருந்தார். அவருக்குப் பார்வதி பணிவிடை செய்து வந்தாள். தேவர்களின் சூழ்ச்சியால் காமதேவன் அங்கு வந்து ஶிவனுடைய தவத்தைக் கலைக்க முயற்சி செய்தான். இதை அறிந்த நந்திகேஶ்வரர் யாருமே அசையக்கூடாது, சத்தம் செய்யக் கூடாது என்று உத்தரவிட்டார்.

மரங்கள் அசையாமலும், வண்டுகள் சத்தம் செய்யாமலும், பறவைகள் கூவாமலும், எந்த ம்ருகமும் வெளியில் வராமலும் இருந்த இடத்திலேயே இருந்தன. அந்த வநம் முழுவதும் சித்திரத்தில் எழுதப்பட்டது போல் இருந்தது.

ज्ञाने मौनं क्षमा शक्तौ त्यागे श्लाघाविपर्ययः ।
गुणाः गुणानुबन्धित्वात् तस्य सप्रसवा इव ॥ २३२ ॥

ரகுவம்ஶம்

காளிதாஸன் திலீபனை வர்ணிக்கிறான். அவனிடம் எல்லா விஷயங்களிலும் தெளிந்த ஞாநம் இருந்ததாம். ஆனால் அதிகம் பேசமாட்டான். உடலில் ஶக்தி இருந்தது. பொறுமையும் இருந்தது. கேட்டவர்களுக்கு எல்லாம் கொடுத்து வந்தான். ஆனால் தற்புகழ்ச்சி செய்யமாட்டான். ஒன்றுக்கொன்று முரணான குணங்கள் அவனிடம் ஒரு தாய் வயிற்றில் பிறந்த ஸஹோதரர் போல் விளங்கின.

काकः कृष्णः पिकःकृष्णः को भेदः ? पिककाकयोः ? ।
वसन्तकाले संप्राप्ते काकः काकः पिकः पिकः ॥ २३३ ॥

रत्नपीठस्थितां पादूं प्रत्नवाग्भिरपूपुजत् ।
भरतो नूत्नया रीत्या सर्वलोकहितङ्करीम् ॥ २३४

ஆசிரியர் ஸ்ரீ ஸ்ரீ

விதி வலியது

मानतीयमहनीयसुधांशो ! सूर्यतापशमनाय हि रात्रौ।
सर्वजन्तुसुखमत्र विधत्से क्षीयसे हि गुरुतल्पगशापात्॥ २३५॥

ஆசிரியர் ஸ்ரீ ஸ்ரீ

சந்திரனே ! உன் உடம்பெல்லாம் அமுதம் என்று சொல்வர். எம்பெருமான் மனதிலிருந்து நீ பிறந்தாய் என்று சொல்வர். ஆகையால் நீ எல்லோராலும் போற்றத் தக்கவன். பகலில் ஸூர்ய வெப்பத்தால் ஏற்படும் ஶ்ரமத்தைத் தீர்க்க நீ இரவில் அனைத்துப் பிராணிகளுக்கும் உன் ஒளியால் இன்பம் தருகிறாய். இத்தகைய நீ குருபத்நியுடன் தொடர்பு கொண்டதால் குருவின் ஶாபத்தின் விளைவாக க்ஷயரோகம் பெற்று 15 நாட்கள் தேய்வதும் 15 நாட்கள் வளர்வதுமாய் இருக்கிறாயே ! இது விதியின் விளைவே !

भवसागरमग्नानां तितीर्षार्णवबोधिनाम्।
ध्येयस्सदा महाविष्णुः श्रियःकान्तः परःपुमान्॥ २३६॥

ஆசிரியர் ஸ்ரீ ஸ்ரீ

रेखारथाङ्ग सरसीरुहशङ्खचिह्ने
क्षेमंकरे तव करे जगतां त्रयाणाम्।
कान्तारकन्दखननं रचयेति नूनं
आबद्धवान् प्रतिसरं भगवान् वसिष्ठः॥ २३७॥

ராமாயண சம்பூ

ஏ ராமா ! உன் திருக்கையில் ஶங்கு, சக்ரம், தாமரை போன்ற ரேகைகள் உள்ளன. உலகத்துக்கெல்லாம் நன்மை செய்வதற்காகவே அமைந்தவை இவை. அப்படிப்பட்ட இந்தக் கையில் வஸிஷ்டர் நேற்று கங்கணம் (தாயத்து-ரக்ஷை) கட்டினாரே, நீ காட்டில் போய் அங்குள்ள கிழங்குகள் வேர்களை வெட்டி எடு என்று சொல்லித் தான் கட்டினாரோ !

மஹான்களின் நிலை

कुसुमस्तबकस्येव द्वयी वृत्तिर्मनस्विनः ।
मूर्ध्नि वा सर्वलोकस्य शीर्यते वन एव वा ॥ २३८ ॥

பண்டார்கர் இரண்டாம் புத்தகம்

பூங்கொத்துக்கு இரண்டு நிலைகளே உண்டு. பலருடைய தலைகளில் உட்காரும், அல்லது காட்டிலேயே கருகி உலர்ந்து விடும். அது போல் மஹான்கள் எல்லோரும் போற்றும் வகையிலிருப்பர் அல்லது காநகம் சென்று வாழ்வர்.

குருவின் பெருமைக்குக் கைம்மாறு கிடையாது

अज्ञानतिमिरान्धस्य ज्ञानाञ्जनशलाकया ।
चक्षुरुन्मीलनं येन तस्मै श्रीगुरवे नमः ॥ २३९ ॥

குருர்ப்ரம்மா, குருர்விஷ்ணு:, குருர்தேவோ மஹேஶ்வர: । குருஸ் ஸாக்ஷாத் பரம் ப்ரம்ம தஸ்மை ஸ்ரீ குரவே நம: என்று சிலர் சொல்வர். அது ஸாதாரணம். ப்ரம்ம ருத்ர விஷ்ணுக்களுக்கு ஸமாநம் குரு என்று பொதுவாகப் பேசப்பட்டு உள்ளது. ஆனால் மேலே உள்ள ஶ்லோகத்தில் நல்ல கருத்து விளக்கம் உள்ளது. உலகத்தில் மக்கள் அஞ்ஞாநம் என்கிற இருளில் இருந்து கொண்டு எதுவும் புரியாமல் இருக்கிறார்கள். ஆத்ம விஷயத்தில் எதுவுமே தெரியாது. அப்படிப்பட்டவர்களின் கண்களில் ஞாநம் என்கிற அஞ்ஜநத்தை(மையை)த் தடவி ஞாநக் கண்களைத் திறக்கிறார் குரு. அவருக்கும் எப்போதும் நாம் வணக்கம் செய்வோம் என்பது கருத்து.

**ஏற்றி மனத்திடை ஞாந விளக்கை இருளனைத்தும்
மாற்றியவர்க்கோர் கைம்மாறு மாயனும் காணகில்லான்-
போற்றி உகப்பதும் புந்தியில் கொள்வதும் பொங்கு புகழ்
சாற்றி வளர்ப்பதும் சற்றல்லவோ முன்னம் பெற்றதற்கே.**

ஸ்வாமி தேஶிகனின் இந்தப் பாசுரத்துடன் என் இந்த அநுபந்தம் என்கிற தொடரை இனிதே நிறைவு செய்கிறேன்.

ஸர்வே ஜநா: ஸுகிநோ பவந்து-
ஸமஸ்த மங்களாநி பவந்து

ஶுபம்

मात्रा समं नास्ति शरीरपोषणम्
　भार्यासमं नास्ति शरीरतोषणम्।
विद्यासमं नास्ति शरीरभूषणम्
　चिन्तासमं नास्ति शरीरशोषणम्॥ २४०

ஆசிரியர் தெரியவில்லை

பன்றிக்கும் தன்குட்டி பொன்குட்டி

புதுமைக் கவிதை

निशाचरपिशाचिकावदनवैकृतं तत्पतेः
　नवेन्दुरिव सुन्दरं मदनकेलिसंवर्धनम्।
तथा हि निखिलेशितुः सकललोकभर्तुर्मतं
　वराहयुवतेःप्रियो ह्यतिमनोहरस्तत्सुतः॥ १४१॥

குறிப்பு:- இது ஹாஸ்யம், பீபத்ஸம் இரண்டு ரஸங்கள் கொண்டவை. எனக்கே மிகுந்த மகிழ்ச்சியைத் தருவது இந்த ஶ்லோகம்.

புதுமைக் கவிதை

என்னுடைய மாமா நால்வர் தோற்றத்திலும்
இயல்பிலும் மாறுபட்டவர்

मा माऽसत्यं वद सखे! मामाहुः पण्डितं बुधाः।
मा मांसभक्षणं कुर्याः मा मातङ्गान्तिकं व्रज॥ २४२॥

நண்பனே பொய் பேசாதே! பொய் பேசாதே! கற்றுணர்ந்த பெரியோர் என்னைப் பண்டிதரென்று கூறுவர். மாம்ஸம் (புலால்) உண்ணாதே. யானையின் அருகில் செல்லாதே.

ஆசிரியர் ஸ்ரீ ஸ்ரீ

புதிர் 1

विचित्रमेतद्भुवने वृक्षाग्रे वर्तते गिरिः ।
सत्यं सत्यं इदं सत्यं को सो वा परिशील्यताम् ।। २४३ ।।

கிரி: அணில்

புதிர் 2

कासा कासारमध्यस्था पद्मिनीति हि तां विदुः ।
कस्तूरिकाकर्मदक्षः विद्धि तं चैत्रिकं सखे ।। २४४ ।।

க: + தூரிகா கர்மதக்ஷ: - ரலயோ ரபேத:

தூரிகா கர்ம: - ப்ரஷ் வேலை செய்வதில்

திறமை உள்ளவன் யார் ? ஓவியன் என்பது பதில்.

ஸ்வாபதேஶம் அந்யாபதேஶம் சேர்ந்த கவிதை

अलं कातरभावेन राक्षसेन्द्रपुरीं प्रति ।
सेयं सुग्रीवसेनायाः निकटस्था भवेदिह ।। २४५ ।।

***ஸ்வாபதேஶம் அந்யாபதேஶம்** இரண்டும் சேர்ந்து ஶ்லோகத்தில் மதிப்பை உயர்த்துகின்றன.*

கடலில் அணை கட்டிய உடனே ஸுக்ரீவனின் ஸேனைக்கு ***லங்கை அருகில் வந்து விட்டது*** என்றான். இது ***அந்யாபதேஶம்.***

இதே ஶ்லோகத்தில் **அலம் காதர** என்கிற இடத்தில் இருப்பதைக் காணலாம். ***லங்கை*** என்கிற சொல் ***இந்த ஶ்லோகத்தில்*** என்பதை எடுத்துக் காட்டுகிறது.

वृषः कश्चित् ययौ गङ्गां स्नानायाऽऽसक्तधीः पुरा ।
सिनीवाल्यां तमाबध्य कश्चित् क्षेत्रं समाकृषत् ।। २४६

உழைக்கப் பிறந்தவன் எப்பொழுதும் உழைத்துத் தான் தீர வேண்டும்.

இக்கருத்தை விளக்கும் மேலே கண்ட பழமொழி 15-12-2006 இரவு 9 மணிக்கு தோன்றியது. (ஹயக்ரீவ ப்ரஸாதம்)

वन्दे पवित्रं जगदेकमित्रं विश्वासपात्रं विहगेन्द्रयात्रम्।
रमाकलत्रं रमणीयगात्रं रथाङ्गशस्त्रं रविचन्द्रनेत्रम्॥ २४७

பண்டிதர்களுக்கு விருந்து.



ஆசிரியர் விலாஸம் :
ஸ்ரீ D. ஸ்ரீநிவாஸாசார்யர்
S-1, Deccan Flats,
LIC Colony, East Tambaram,
Chennai - 600 059
Phone : 22394158

ஆசிரியர் வெளியிட்ட நூல்கள்

1. ஸ்ரீஸ்துதி *தமிழ் உரையுடன்*
2. ரகுவீரகத்யம் *தமிழ் உரையுடன்*
3. ஆஹ்நிகமும் அநுஷ்டானமும் *ஸம்ஸ்க்ருத எடுத்துக் காட்டுகளுடன் (Quotation)*
4. ஸ்ரீ பாதுகாஸஹஸ்ரம் *ஸம்ஸ்க்ருத மூலம், பதவுரை, கருத்துரையுடன்*
5. விப்ரஸந்தேஶம் *சொந்த கவிதைகள் தமிழ் விளக்கத்துடன்*
6. வைஷ்ணவ ஸம்மேளனம் *(ஒரு கற்பனையான கவிதைகள்)*
7. ஸ்வாமி தேஶிகனின் ஸ்தோத்ரங்களுக்கு தமிழ் மட்டும் விளக்கவுரை (பஞ்சாம்ருதம்)
8. அஹிர்புத்ந்யஸம்ஹிதை *(தமிழாக்கம்)*
9. கவிதோத்யாநம் *(கவிதைப் பூங்கா)*

Lasertypeset & Printed at:
V.K.N. ENTERPRISES
8/1, Dr. Rangachari Road, Mylapore, Chennai-4
Ph: 24950775 Cell : 98402 17036